உதயண கதா பீடம்

அல்லது

பெருங்கதை

புவியில் வெளிப்போந்த வரலாறு

இதனை

வடமொழியிலிருந்து

தமிழில்

குறிப்புரையுடன் மொழிபெயர்த்தது

ஸ்ரீ. அ. திருமலைக்கொழுந்து

ஆங்கில ஆசிரியன்

எட்டயபுரம் சமஸ்தானம்

Copy-right Reserved] [Price Re. 1

This book is Dedicated

to the Memory of

My Divine Daughter

Muttu Parvati

The very incarnation of Grace and Truth

Who entered into my very being and ennobled it.

Lives of great men oft remind us
We can make our lives sublime
And departing leave behind us
Foot-prints on the sands of time.

உ

சிவமயம்

குழந்தைகட் கறிவிப்பு

விநாயகர் வணக்கம்

ஓமெனப் பெயரிய வொருமுத லுருவனை
தேவெனப் படுவரிற் றலைநின்ற தனியனை
கோவென மனத்தினுட் குடிகொண்ட கொம்பனை
காவெனக் கடிமலர் கைகளாற் றூற்றுதும்.

தமிழறியும் நாவுடைய எனதருங் குழந்தைகாள்! உங்களது க்ஷேமத்தின்பொருட்டே, இஃதெழுதப்பட்டது, எழுதவும் படுகின்றது. சிறிது கவனத்தோடிதனைப் படிக்கத் தொடங்கி, நூலைப் பற்றிக்கொள்வீராயின், மிக்க நன்மை யுங்கட்கு விளையாநிற்கும். "சிக்கெனப் பிடிக்கும் திறமுடையாரே" எதனையும் வென்றிகொள்ள வல்லவர்.

இளைஞராகிய உங்களது நெஞ்சத்தில், ஞானமாகிய மெய்ப்பொருளை எளிதே பதித்தற்குத் தக்கவாயில் கதையேயாம். காலப்போக்குக் காலப்போக்காய், அறிவிற் கழுதூட்டி, நல்வழிப் படுத்தற்கியன்ற நெறி கதையையன்றி வேறென்னும்? அறிவு முதிராது பாமரராயிருந்த வோர் அரையன் மக்களைச் சோமசன்மா வெனும் அந்தணன் பஞ்சதந்திரக் கதைகூறி நல்லறிவு கொளுத்தினனன்றே!

இந்நூற்கண் அருள் வடிவனான வாருசி சரிதமும், சத்தியத்தைப் பெரும்பேறாகக் கொண்ட குணாட்டியன் சரிதமும், கற்பரசியாகிய உபகோசை சரிதமும், நீங்கள் கவனத்துடன் வாசித்து நன்மை பெறுதற்கியன்றன. இம்மூவரும் சிவலோக வாழ்வை ஊழ்வலியா விழந்து, பின்னர் சாபம் விடுபட்டுத் திரும்பவும் அதனைக் கிட்டினர். இவ

ருள், குணாட்டியனே பெருங் கதையாகிய உதயணன் சரிதத்தை உ
கத்திற் பரவவிட்டவன். இவையேயன்றிக் குமரனது* அருள் பெற்
சர்வவர்மன் சரிதமும் வீரரிற் றலைநின்ற சாதவாகனன் சரிதமும் ம
திற்குப் பேருறுதி பயப்பன.

குணாட்டியன் சுப்ரதிஷ்டா நகரப்பிரவேசஞ் செய்த வர்ண
மனப்பாடஞ் செய்தற் கமைந்தது.

இந்நூலில் ஆங்காங்கு வந்துள சில உறுதி வாக்கியங்களை யிவ
தொகுத்து மொழிவாம்:

எவனே தனத்தையும் இரகசியத்தையும் தனது மனைவிக்
மறைத்திருக்கவல்லன்!

பெண்பாலருள் எவளே இரகசியத்தை வெளி விடாதாள்!

முக்திக்கு வித்தாகிய பிரணவம்.

இவன் எதனையேனும் ஒரேதரங் கேட்க நேரினும் அதனை மு
மையும் மனக்கண் பதியவாங்கி வைத்துக்கொண்டு பின்னர் வேண்
யக்கால் அதனை யவ்வாறே வெளித்தரவல்லவன்.

க்ஷணநேரத்தில் ஒன்றுமற்றுப்போகும் பெற்றியதான சரீ
திடத்தும், சாரமற்ற சம்சார சாகரத்தும், அறிஞன் எவன்தான் கு
டுத்தனமாய் முழுகுவன்!

ஐவரால் ஆகாததொன்றுமில்லை.

ஐவர் எற்றிற்கு? இருவர் ஏகச்சித்தமாக வொன்றுகூடி நிற்
அசாத்தியமான தொன்றுமிலது.

பேதாய்! அழகெனவோர் பொருள் வேறுளதோ? எதனை ம
மிகக் காமிக்கின்றதோ, அதுவே அம்மனதிற்கு யாவற்றினுஞ் சிற
அழகிய பொருளாம்.

மறைவாயிருக்கும் இரகசியத்தை அறிஞர் மூத்திறத்தா லு
வல்லர்; அவை குறி, ஊகம், அருள் ஆகியமூன்றும்.

---

*சிவகுமாரனாகிய சுப்ரமண்யக்கடவுளது.

குழந்தைகட் கறிவிப்பு

ஈசனது மாயப்பிரபாவத்திற் சிக்குண்டு சத்தை * நோக்காது வீணே யேன் தவிக்கின்றீர்? ஞானக்கண் கொண்டு நோக்கின் துக்க மெங்கணுளது! எல்லா மாயமன்றோ? பிறர் மனந் தடுமாறின், அவர்க் குறுதிகாட்டி நல்வழிப்படுத்த வல்லபேரறிஞராகிய நீர், அவ்வுறுதியை நோக்காது அலமருவது இறும்பூதே!

பணத்தைக்கொண்டு பணத்தை விருத்தியாக்குவதில் என்ன வியப்பு! நானோ மூலதனமின்றியே தனவந்தனானேன்.

கல்வியாகிய கண்ணில்லானை அலங்கரித்தல் கட்டையைப் புனைவது போலாம்.

அரசர்களோ சுகஜீவிகள்.

தேவர்கள் தமக்கு விநோதார்த்தமாக மனுஷரிடம் ஜாலஞ் செய்வதுண்டு.

பண்டைப் பிறவியில் ஒருவற்கோராற்றாற் கிட்டியும் எட்டாது தடைப்பட்டு நின்ற சித்திகள் இப்பிறவியில் எளிதே கைகூட யாது தடையுளது!

எவன்தான், தானறிஞனா யிருப்பவும் மற்றோர் அறிஞனேல் அவமதிக்கப்படின் அதனை எளிதே சகித்திருக்க வல்லன்!

பெருங்கதையின் வரலாறாகிய இந்நூலைப் பயிலின் அநேக நன்மைகள் விளையும். அவற்றுட் சிலவற்றைக் கூறுதும்,—

மந்தபுத்தி காரணமாகக் கல்வியி லூக்கம் பிறவாதிருப்பின், அவ்விடையூறு சாதவாகனபூபதி சரிதத்தால் நிவர்த்தியாகிக் கல்வியேறும்; பாணினி முனிவர் சரிதமும் அத்தகைய வுண்மையை வலியுறுத்தும்.

தெய்வானுகூலத்தைப் பெறின் நினைத்த வெதனையும் உள்ளவா சாதிக்கலாம். முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்றுண்டோ! இவ்வுண்மையைக் குமாரக் கடவுளது அநுக்கிரகத்தைப் பெற்றுத் தனது பிரதிக்கினையை முட்டின்றி முடித்த சர்வவர்மன் சரிதத்தால் விளங்கக் காணலாம்.

---

* அழிவிலா முதலை.

குழந்தைகட் கறிவிப்பு

பேரறிஞரை யாராயாது குற்றங் கூறுவது பெருந் தவறென்பது வாருசியது சரிதத்தால் விளங்கும். பேரறிஞர் தமது நண்பர்கள் இடையூறு விளைக்கக் கருதினும், அதனைப் பேதைமை யெனக் கண்டு தாம் அருளைவிட்டு நீங்காராய் அவர்கட்கு நன்மையையே நாடி நிற்ப ரென்பதுவும் வாருசி சரிதத்தால் விளங்கும்.

சத்தியத்தின் வாயிலாக வோர் உறுதியைக் கைக்கொள்ளின், அதனை யுயிர் நீங்கும்வரையும் காப்பாற்ற வேண்டியது அத்தியாவசிய மென்பதைக் குணாட்டியன் சரிதம் விளக்கும்.

சினேக வஞ்சகம் மிகக் கொடியதென்பது, காடியால் அரசிளங் குமாரனுக்கு நேர்ந்த பைத்தியத்தால் நன்குணரப்படும்.

மற்றுமிந்நூல் விளைக்கவல்ல பெருநன்மை யாதெனின், சிரத்தை யோடிதனை வாசிப்பவர்கள், சிவபெருமானருளால், பூர்வஜன்ம வுணர்ச்சியையும் தமக்கு முதல்முதல் பிறவிநேர்ந்த விரகசியத்தை யும் உணர்ந்து, காலமாயையைத் தாண்டிச் சென்று, தமதழியா நிலையை யடைவரென்பதாம்.

மற்றொன்று கூறி முடிப்பல். நெருப்பைப் பெறக் கருதிக் கட்டை யைக் கடைவோன், அஃது வெளிப்படுங்காறும் கடைதலை விடாதது போல் அருளுள்ளவா வுதயமாகும்வரை யிந்நூலைக் கைவிடாது பயி லக்கடவீர்.

குழந்தைகாள்! உங்கட்குப் பெரிதும் க்ஷேமமுண்டாகுக. சுபம், சுபம், சுபம்.

ஓம் திருச்சிற்றம்பலம்

குறிப்பு—நூன்முகத்தை நூல்தொடங்கு முன்வாசிக்க வெண் ணங் கொள்வோர், தமது ஆசிரியரைத் துணைக்கொண்டு வாசித்துப் பொருள் காண்க. அல்லையேல் நூலை ஓர்தர முடித்தபின் அதனை வாசிக்கக்கடவர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நூன்முகம்

ஆதியிற் றமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞானம் நலம்பெறற் பொருட்டே

மாந்தர்க்குப் பேருறுதி பயப்பனவாகிய பாரத ராமாயணங்களும் புராணங்களுமோர் வழிநிற்ப, பெருங்கதை (பிரஹத்கதா) யெனும் ஓர் ஒப்பரிய நிதியையும் அறிஞர் தமது ஞாபக சக்தியி லமைத்தல் சாலவும் அழகாகும். பெருங்கதையின் பெருமையை இவண் விரித்துக் கூற வந்திலம்; ஓர் சிறிதே கூறி நூலைத் தொடங்குதும்.

சிவானுபூதிச்செல்வமும் மதிநுட்பமும் வாய்ந்த அப்பைய தீக்ஷித ரென்னும் மகான், தாமியற்றிய அலங்கார சாத்திரமாகிய குவலயானந்தத்தில், தமக்கெட்டியவோர் பழைய சுலோகத்தை ஓர் அலங்காரத் திற்குதாரணமாக வெடுத்துக் கூறியுளார். அஃது வருமாறு,—

‘ தமியேன், ஒன்றாய்ப் பின்னிக்கிடந்த ஒலித்தொகுதியைச் சிக்கெடுத்து நான்கு கூறாகப் பிரித்தவனு மல்லேன்; புற்றிலிருந்து பிறவியுற்றவனு மல்லேன்; அச்சுதனது உந்தித்தாமரையினின்று வெளிப்போந்தவனு மல்லேன்; மிக்குயர்ந்த உறுதி பயப்பதாகிய மகா பாஷியத்தை மொழிந்தவனுமல்லேன்; விம்மிதப் பொருள்கள் நிரம்பிய பெருங் கதையைச் செய்தவனுமல்லேன்; இந்திரனுக்கு ஆசிரியனாக விருந்தவனுமல்லேன். (எனது சக்தி யிவ்வாறாக மிகச்சிறுமை யுற்றிருப்ப) அரசே, நினது குணத்தை வாக்கால் விளக்கஞ்செய்தற் கென்னாலியலுமோ !!!’

நூன்முகம்

இதனால், தெய்வீகமான வாக்கைக் கண்டு அதனையாண்ட பெரியோர் வியாசன், வான்மீகி, விரிஞ்சன், பதஞ்சலி, குணாட்டியன், வியாழப்புத்தேள் என்பவரென்பது குறிப்பாலுணர்த்தப்பட்டது. பெருங்கதையை உலகத்திற்குக் காட்டவாயிலாயிருந்த குணாட்டியன் எவர்களோடொட்டி யெண்ணப்படுகின்றா னென்பதனை யுய்த்துணர்க.

பெருங்கதையது சிறப்பு காளிதாச மகா கவியால் மேகதூத மென்ற வோர் காவியத்திலும் குறிக்கப்பட்டுளது,—

'உதயணன் கதையில் வல்லவரான கிழவர்கள் வாசஞ்செய்யும் பல கிராமங்கள் நிறைந்த அவந்திதேசத்தை யடைந்து அப்பாற் செல்தி'

ஆகவே உதயணன் கதையாகிய பிரஹத்கதை மற்றைப் புராண விதிகாசாதிகளைப்போல் எளிதே எவர்க்கும் கிட்டுவதன்றெனவும், இரகசியப் பொருட்கண் அவாவுற்றார் சிலராலேயே உணர்தாக் கிடந்த தெனவும் ஊகிக்கப்படுகின்றது

உலகத்திலாங்காங்குக் கூறப்படும் பற்பல கதைகளனைத்திற்கும் உற்பத்தி பீஜமாயிருப்பதூஉம் பெருங்கதையேயாம்.

பெருங்கதையைக் கூறப்புகுமுன் அஃது மண்ணுலகில் வெளிப் பட்ட வரலாற்றைக் கூறவேண்டிய தின்றியமையாதாதலின், சாத வாகனபூபதியா லியற்றப்பட்ட விக்கதாபீடத்தை யிவண் தமிழ்க்கண் மொழிகின்றாம்.

இக்கதை சிவபெருமானது மனத்துட் கிடந்து பின்னர் அம்பி கைக்கெட்டி முடிவில் மண்ணுலகில் குணாட்டியனால் வெளியாக்கப் பட்டது. குணாட்டியன் இக்கதையை பைசாச பாஷையில் ஓர் லக்ஷம் செய்யுளாக விசைத்தான். அப்புலவர் பெருமான் இவ்வரும் பெருங் கதையைத் தேவபாஷையாகிய சம்ஸ்கிருதத்திலேனும் அல்லது பிராகி ரத்திலேனும் மொழியாது பைசாச பாஷைக்கண் மொழிந்த இரகசி யத்தை விக்கதாபீடம் விளக்கும்.

பெருங்கதை தமிழ்க்கண்ணும் அற்புத வகவற்பா ரூபமாக இசை

நுணுக்கமறிந்த ஓர் பேரறிஞரால் யாக்கப்பட்டுள்ளது. தமிழ்க்கு ஆணிப்பொன்போன்ற ஐம்பெருங் காவியங்களிலொன்ருகிய சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார், பெருங்கதைக்கண்ணிருந்து அநேக வுதாரணங்களைத் தமதுரைக்கண் பொழிந்துளார். பெருங்கதை சில ஏட்டுப்பிரதிகளில் சிலர்க்குக் கிட்டியிருக்கின்றது. ஆயினும் உதயணன் கதை முழுமையும் தமிழ்ப்பா வாக்கப்பட்டதோ வென்பது ஐயத்திற்கிடமாக நிற்கின்றது. இதுவன்றியும் உதயண குமார காவியமென மற்ருெரு செய்யுள் ரூபமானவோர் தமிழ் நூலும் உளதெனக் கூறுவர். நிற்க.

சோமதேவ பட்டரென்பவர் பெருங்கதையைப் பைசாச பாஷையினின்று சாரமும் உட்கதைகளும் விடாது வடமொழியில் முப்பத்தையாயிரங் கிரந்தமாக விசைத்தார். இத்தமிழ்நூல் அதனது சாரமாகும். அஃது (சோமதேவ பட்டரியற்றிய கதாசரித் சாகரம்*) பின்வரும் பதினெட்டு இலம்பகங்களை யுடைத்து :—

1-வது : கதாபீட விலம்பகம்
2-வது : கதாமுக விலம்பகம்
3-வது : இலாவாணக விலம்பகம்
4-வது : நரவாகன தத்தஜனன விலம்பகம்
5-வது : சதுர்த்தாரிகா விலம்பகம்
6-வது : மதனமஞ்சுகா விலம்பகம்
7-வது : இரத்தினப்பிரபா விலம்பகம்
8-வது : சூரியப்பிரபா விலம்பகம்
9-வது : அலங்காரவதியிலம்பகம்
10-வது : சத்தியமோ விலம்பகம்
11-வது : வேலாவிலம்பகம்
12-வது : சசாங்கவதி யிலம்பகம்

---

* கதைகளாகிய நதிகளெல்லாம் போய்விழும் சமுத்திரம்.

13-வது : மதிராவதி யிலம்பகம்
14-வது : பஞ்சவிலம்பகம்
15-வது : மகாபிஷேக விலம்பகம்
16-வது : சுரதமஞ்சரி யிலம்பகம்
17-வது : பத்மாவதி யிலம்பகம்
18-வது : விஷமசீல விலம்பகம்

இக்கதைகள் மிகத் தெய்வீகமுடையன வாதலின் சிரத்தையோடு பயில்வார்க்குத் தமது பூர்வ அழியாநிலையை விளக்கிப் பிறப்பறுத்து நற்கதி பயத்தற்குச் சாதனமாமென்பது திண்ணம், திண்ணம், திண்ணம். இக்கதாபீடத்தைத் தமிழுலகிற்குக் காட்டப் புகுந்ததற் கிஃதோர் காரணமாகும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திருச்சிற்றம்பலம்

இந்நூற் சிறப்பை மற்றுஞ் சிறிது சுட்டுதும்

பெருங்கதை வெளிப்போந்த வரலாறாகிய இக்கதாபீடத்தைச் சிரத்தையோடு வாசிப்பவருள் எவரே மண்ணுலக வாழ்க்கையைத் திரணமெனக் கருதி வாருசியையும் வியாடியையும் பின்பற்றி அருள் வழி நிற்கக் கூசுவர்?

எவரே சாதவாகன பூபதி யெய்திய பாண்டித்தியத்தைக் கண்டு வித்யா நிதியைத் தாமும் கைப்பற்ற ஊக்கங்கொள்ளமாட்டாதார் ?

எவரே குணாட்டியன் சரிதத்தை யுணர்ந்தபின் சத்தியமெனும் பொருளைத் தம்முயிரினும் மேம்பாடுடையதென வதனை யோம்பா தொழிவர் ?

சர்வவர்மனது சரிதத்தை யுணர்ந்தபின் எவரே நல்வழிப்பட்ட தமது பிரதிக்ஞையைக் கைசோரவிடுவர் ?

எவரே சர்வவர்மனது திவ்விய சரிதத்தை யுணர்ந்தபின், சுந் தழி * யளிக்கும் கடவுளாகிய சிவகுமாரனிடம் மெய்ப்பக்தியைக் கொள்ளத் தவறுவர் !

இக்கதையைச் சிரத்தையோடு பயிலும் எம்மாதுதான் தெய்வீக மாகிய தனது கற்பை இடையூறுக்கஞ்சிப் போற்றுது பின்வாங்குவள்!

இக்கதையை வினயத்தோடு பயிலும் எம்மாதுதான் தனது கண வற்குத் தக்க சமயத்தில் ஊக்கத்தை யூட்டி சத்தியத்தைக் கைசோர விடாது காக்கமாட்டாள் !

வருஷாது சரிதத்தை யுணர்ந்தபின் எம்மாதுதான் தனது கண வனை வித்யாநிதிக்கு அருகனுக்கத் தவறுவள் !

பாணினி சரிதத்தையும் வருஷாது சரிதத்தையு முணர்ந்தபின், எவன்தான் தனது மந்தபுத்தியைத் தொலைத்து எவர்க்கும் பெரும்பற் றுக் கோடான பேரறிவை நாடத் தாழ்ப்பன் !

அன்றியு மிந்நூலால், அறிஞர், பிறர் தீங்கு நினைப்பினும் அவர் பால் தாம் அருளேயே வகிக்கவேண்டு மென்பதனையும், சுயநலங்கருதி சிநேக வஞ்சகத்தை யோர்போழ்தும் நாடக்கூடாதென்பதனையும், உள்ளவா மானம்பூண்டு தெய்வகடாக்ஷத்தை நாடுவோன் அதனைப் பெற்றுச் சகல சித்திகளையு மெளிதே யடையக்கூடுமென்பதனையுந் தெரிந்துகொள்வர்.

மற்றுமிந்நூலால் உணர்தரக்கிடந்த விஷயங்கள் யாவை யெனின்,—

க. முக்திமுதலாகிய பரஞ்சுடர் மகாவிரதம் பூண்ட விரகசிய மின்னதென்பதும் :

---

* ஒருதானுகி நிற்கும் மோக்ஷநிலை ; காலங் கடந்து எவற்றையும் தாங்கி நிற்கும் பரமத்தானம்.

௨. அம்பிகையினருளை நாடுவோர் அதனை எளிதே பெறுதற் கியைந்த தலம் விந்தியவாஸினி யென்பதும் :

௩. பாடலிபுத்ர மெனும் நகரம் தெய்வீகசக்தியால் நிர்மாணஞ் செய்யப்பட்டதென்பதும் :

௪. உலகவாழ்க்கையைப் பெரிதாகக் கருதுவோன் அற்பரையும் தன்பாற் பகைகொள்ள விடங்கொடாதிருக்க வேண்டுமென் பதும் :

௫. அருள்வழி நிற்போனை பகைவரும் பணிந்துபோற்றி யவனது கிருபைக்குப் பாத்திரமாகக் கருதுவரென்பதும் :

௬. ஆழ்ந்தாராயாது அரசனொருவரையும் தண்டிக்கக்கூடா தென்பதும் :

௭. சிவபராஞ்சுடரது அருளைப்பெற்றவர் இம்மண்ணுலக வின்பங்களை முட்டின்றித் துய்த்துப் பின்னராழியா நிலையை வகிக்கக்கூடு மென்பதும் :

௮. அருளுடையாரது வாக்கைச் செவிக்கொள்ளின் மனிதரே யன்றிப் பூதபிசாசங்களும் மிருகங்களும் தெய்வகதியை யடையுமென் பதும் மற்றுஞ் சிலவுமாம் :

‘ ஆப்தமானார் * அயலவர் கூடி
நாத்திகம் † பேசி நாத்தழும் பேறினர் ’

என வாதவூரடிகள் கூறியவண்ணம், மண்ணுலகிலுதித்த மாந்தர் பெரும்பாலார் தாமிப்புவியில் வெளிப்பட்டுதித்த வழியையும், இம் மண்ணுலக வாழ்வைவிட்டு நீங்கு மாற்றினையும், ஓர் சிறிதும் கருதாராய், தெய்வீகம் மறைவிருந்து உலகத்தை நடத்தாநின்ற மெய்ம்மையை

* சிநேகர்கள்.

† தெய்வமிலதெனக் கொள்ளும் மதம்.

மனக்கண் கொள்ளாராய், ஏதோ வீண் வாதங்களையும் போர்களையும் தொடுத்து காலஹரணஞ்செய்து பிறப்பதற்கே யாளாகி இறக்காநிற்பர். பெரும் பரப்பினதாய சமுத்திரத்தைத் தாண்டிக் கரையேறுதற்கியன்ற மரக்கலம்போல், பவசமுத்திரத்தை*த் தாண்டிப் பரமசாந்தித் தானத்தைக் கிட்டுதற்குகந்த இவ் அரிய மனிதவுடம்பைப் பேதமையால் நற்பயன் கோடாது அவலமாக்கும் மாந்தரது நாத்திகபுத்தியைக் களைந்து, ஆத்திக புத்தியை ‡ நாட்டுதற் கோரோவழி இந்நூல் கருவியாய் நிற்றலுங் கூடுமென வுன்னி யிதனைத் தமிழுலகத்திற்குக் காட்டலாயிற்று.

ஸ்ரீ. அ. திருமலைக்கொழுந்து,
ஆசிரியர்.

21st February 1911.

ஓம் சுபம் சுபம்.

---

* பிறவிக்கடலை.

‡ பேரறிவு வாய்ந்த தெய்வம் உலகத்தை மறைவிருந்து ஆளாநின்றதெனும் துணிவை.

இந்நூற்கண் போந்துள தலங்கள்

நாடுகள்

பிரதிஷ்டானம் (Berar.)
பர்கச்சு (Baroda or Broach.)

மலைகள்

கைலாயம் : இஃது ஹிமாசலத்திற்கு வடபால் மானசவாவிக் கயலே யுளது. இதுவே உத்தரகைலாச மெனப்படுவது.
ஹிமாசலம் (The Himalayas)

நதிகள்

கங்கை.
நர்மதை.
கோதாவரி.

நகர்கள்

கௌசாம்பிநகரம்: இஃது யமுனைக் கரையில் பிரயாகைக்கு மேற்கே உத்தர மதுரைக்குக் கீழ்பாலமைந்து முற்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்தது.

சுப்ரதிஷ்டம் : இஃது பிரதிஷ்டான தேயத்தின் தலைநகராய் சாதவாகன பூபதி காலத்திலும் அவனது முன்னோர் காலத்திலும் புகழ்பெற்று நின்றவிடம். இதுவே பித்தனை மகாமட் டோக்லாக் என்பவனாற் காமிக்கப்பட்டு அவனாற்றனக்குத் தலைநகரமாக வாக்க முயலப்பட்டது போலும்.

விந்தியவாசினி : The modern Mirzapoor. உரையிற் காண்க.
பாடலிபுத்திரம் (Patna).
வேதசம் (Vedisa at a pretty long distance to the East of Ujjain.)
உஞ்சை : உஜ்ஜினி, Ujjain.
ராஜக்கிரகம் : இதைப்பற்றியுரையிற் காண்க.
ஆகர்ஷிகை : கங்கைக்கரையில் பாடலிபுத்ரத்தின் பாங்கரமைந்திருந்தவோர் நகரமாகத் தோன்றுகின்றது.
அயோத்தி.
பதுசுவர்ணகம் (ஓர் அக்கிராரம்)
பதரி : உரையிற் காண்க.
கனகலம் : உரையிற்காண்க.
தேவகிருதி : இஃதோர் நந்தவனம். சுப்ரதிஷ்டாநகரின் பாங்கரமைந்துளது. இதனைப்பற்றி யுரையிற் காண்க.

இந்நூலில் வந்துள

பிரதானதேவர், மனிதர் முதலாயினோர்

சிவபெருமான் : ஞானசொரூபியாகிய சிவபரஞ்சுடரது மனமெனும் சமுத்திரத்திலேயே இக்கதை மறைந்து கிடந்தது.

பார்வதி : சிவசக்தியாகிய பார்வதி இக்கதையைச் சிவபெருமானது மனத்தினின்று வெளிக்கிழுக்க வாயிலாயினள்.

புஷ்பதந்தன் : இவன் சிவகணங்களிலொருவன். இவன்தான் அம்பிகை யிரகசியமாகச் சிவபெருமானிடம் கதைகளைக் கிரஹிக்கும் போழ்து மறைவிருந்து அவற்றைத் தனது செவிவழி யிழுத்து மறைவைப் பயிரங்கப் படுத்துதற்கு ஆதிவாயிலாயிருந்தவன்.

ஜயை : புஷ்பந்தனது மனைவி; அம்பிகையின் சேடியரிலொருத்தி புஷ்பதந்தனிவளிடம்தான், தானறிந்த மறைப்பொருளை வெளியிட்டான்.

மாலியவான் : சிவகணங்களி லொருவனும் புஷ்பதந்தனது நண்பனுமாவன். புஷ்பதந்தன், மாலியவான், ஜயையெனும் மூவரும் அம்பிகையாற் சாபமுற்று மண்ணுலகில் முறையே வாருசி, குணட்டியன், உபகோசையெனப் பிறவி யெய்தினர்.

காணபூதி : இஃதோர் பிசாசம். குபேரனது சாபத்தால் யக்ஷவாழ்வைத் துறந்து விந்தியாடவியில் பிசாசாக வுறைந்தது. வாருசியின்பால் மகாவித்தியாதர சரிதங்களைக் கேட்டுப் பின்னர் அவற்றைக் குணட்டியனுக் கெடுத்துரைத்துப் பின்னர் நற்கதி பெற்றது.

வருஷர் : இவர் பாடலி புத்திரத்தில் வாருசி வியாடி பாணினி முதலியோர்க் காசிரியராக விருந்தவர்.

உபவருஷர் : இவர் வருஷரது சகோதரர். இவர் தமது புத்திரியாகிய உபகோசையை வாருசிக்கு வதுவை செய்வித்தவர்.

வியாடி—இந்திரதந்தன், இவர்கள் சகோதரர். வியாகரணத்தில் மிகுந்த விற்பத்தி யுடையவர். வாருசியைச் சகபாடியாகக்கொண்டு

வருஷரிடம் கலைகளைப் பெற்றவர்கள். இவருள் இந்திரதத்த தனது யோகவலியால் யோகநந்தனுயினன்.

வாருசி: புஷ்பதந்தனது மனுஷாவதாரம். இவர் யோகநந்தனிடம் ம திரியாக விருந்தவர்.

குணட்டியன்: மாலியவானது மனுஷாவதாரம். இவரே பைசாசபாஷை யில் மகாவித்தியாதர சரிதங்களைச் செய்தவர். இவர் சாதவாகன பூபதியின் அவைக்களத்திலோர் மந்திரியாக விருந்தார்.

சர்வவர்மன்: இவர் சாதவாகனபூபதியின் முதன் மந்திரி; குகப்பெரு மானது அருளைத் திடமான சங்கல்பத்தாற்பெற்றவர். இவரோ வாதாடியே குணட்டியன் வெளியேறிப் பைசாச பாஷையில் பிரஹத்கதையை வெளியிட நேர்ந்தது.

சாதவாகனன்: பிரதிஷ்டான தேயத்தரசன். சிங்கத்தின்வயிற்றினில் றுதித்தவன். இவன் ஓர் பெரிய மானி. சர்வவர்மனிடமிருந்து சகலகலா வல்லனுனன். சாலியவாகனனுமிவனே யென்ப.

யோகநந்தன்: இந்திரதத்தன் மகத தேசாதிபதியாயிருந்த நந்தனது பிரேதத்துட் புகுந்து அதனைத் தேகமாகக் கொண்டபோழ்து அவனுக் குற்ற பெயர்.

நந்தன்: மகதநாட்டரசன்.

சகடாலன்: நந்தனுக்கும் பின்னர் யோகநந்தனுக்கும் மந்திரியாக விருந் தவன்.

சாணக்கியன்: ஓர் கொடுங்கோபி. இவனே யோகநந்தனுக்கு அகால மரணத்தைக் கொடுத்தவன்.

ராக்ஷதன்: நந்தனது நகரமாகிய பாடலிபுத்திரத்தைக் காத்துவந்தவன்

உபகோசை: வாருசியது மனைவி; கற்பரசி.

INTRODUCTORY NOTE

With a view to remedy the want of suitable prose in Tamil, this work has been undertaken. It is also a piece of information throwing light upon the mediæval times of India. If real earnestness is shown by the reading public it is proposed to bring out the whole remaining portion of the Great Story in a series.

I cannot forget to give my thanks to Mr. Vira-swamy Aiyengar of the Ettayapuram Samasthanam, for it is he that turned my attention to the treasures of the Brihatkatha. My thanks are also due to Mr. Ambi, the Sanskrit medalist who helped me a great deal during the course of this translation.

18th *January,* 1913. S. A. T.

ஓர் கடைப்பிடி

அருளே புகலிடமாய் அநவரதம் ஆட்படுமின்
இருள்சே ரிருவினையு தீண்டாவாம்—மருடீர்ந்த
அன்பர்கண் டின்புறூஉ மானந்த நெறியிதுவே
துன்பகமக்கேறோ துணி.

உ

சிவமயம்

அட்டவணை

	பக்கம்.
தெய்வ வணக்கம்	1
முதற்றரங்கம்	3
பரமன் பார்வதியின் வரலாற்றை யவட்குக் கூறுவது ...	4
புஷ்பதந்தனும் மாலியவானும் சாபம் பெறுகை	7
இரண்டாந்தரங்கம்	11
வாருசி விந்தியவாசினியின் கிருபையால் காணபூதியைக் காண்கை	11
காணபூதி வாருசிக்குத் தான் கேட்ட வோர் இரகசியத்தை வெளியிடல்	12
சிவபெருமான் மகா விரதம் பூண்ட இரகசியம்	12
வாருசி சரிதம்	15
வியாடியின் சரிதம்	17
வருஷாது சரிதம்	19
வீருசியென்ற பெயர் வந்த காரணம்	21
வாருசி வருஷரிடம் கல்வி பயிலல்	22
மூன்றாந்தரங்கம்	23
பாடலிபுத்திரத்தின் வரலாறு	23
பொன்னிற அன்னங்களின் சரிதம்	26
புத்திரகன் சித்திபெறல்	28
புத்திரகனும் பாடலியும்	30

அட்டவணை

	பக்கம்
பாடலிபுத்ர நகர நிர்மாணம்	32
நான்காந்தரங்கம்	34
வாருசி உபகோசையை மணம் புரிகை	34
பாணினி வரலாறு	37
காத்யாயனராகிய வாருசி தவஞ்செய்ய ஹிமாசலஞ் செல்லுதல்	39
உபகோசை தனது கற்பை யோம்பல்	39
வாருசி தவமுடித்து ஆசிரியரை யடைதல்	45
யோகநந்தன் வரலாறு	47
வாருசி யோகநந்தனுக்கு மந்திரியாதல்	50
சிறைச்சாலையில் சகடாலனது புத்திரர் நூற்றுவரும் மரண முறுகை ...	51
வியாடியின் துறவு	52
ஐந்தாந்தரங்கம்	53
வாருசி சகடாலனைச் சிறைமீட்டல்	53
ஐந்துவிரலும் இரண்டுவிரலும்	55
செத்தமீன் சிரித்த விந்தை	56
ஓர் விசித்திர சித்திரம்	58
வாருசி கரந்துறைதல்	59
இராக்ஷதன் வரலாறு	60
வாருசிக்குக் கங்கை பிரத்தியக்ஷம்	62
சிவவர்மன் சரிதம்	62
சிநேகவஞ்சகத்தால் நந்தகுமாரனுக்குப் பைத்தியம் பிடித்தல் ...	65
வாருசி துக்கசாகரத்திலாழ்ந்து கரையேறல்	70
வாருசி துறவு பூணல்	71
சாணிக்கியனது விரோதத்தால் யோகநந்தன் மரணமுறல் ...	72
வாருசி காணபூதிக் குறுதிகூறல்	74
வாருசி ஓர் தபசியை நல்வழிப்படுத்திவிட்டுத் தன்னிலையடைதல்	75

அட்டவணை

	பக்கம்
ஆறாந்தரங்கம்	76
குணாட்டியன் வரலாறு	76
குணாட்டியன் அவதாரம்	77
குணாட்டியன் தக்ஷணம் சென்று கல்விபெற்றுத் திரும்புகை ...	79
குணாட்டியன் சுப்ரதிஷ்டா நகர்ப்பிரவேசஞ் செய்தல் ...	79
செத்த பெருச்சாளி கதை	80
குணாட்டியன் சாதவாகனனிடம் மந்திரித்தானத்தைப் பூணுதல்	83
தேவகிருதி யெனும் நந்தனவனத்தின் வரலாறு	84
மௌனி தேவகிருதி யுண்டான இரகசியத்தை வெளிப்படுத்தல்	85
சாதவாகனன் பெயர்க்காரணம்.	86
சாதவாகனன் பிறப்பு	87
சாதவாகனன் மானபங்கமுறல்	90
சாதவாகனன் கொண்ட பிரதிக்ஞை	91
சர்வவர்மனும் குணாட்டியனும் அரசனுக்குற்ற தென்னென வாலோசித்தல்	92
சர்வவர்மனும் குணாட்டியனும் அரசன்முன் செய்துகொண்ட பிரதிக்ஞை	92
சர்வவர்மன் தனது பிரதிக்ஞையை எளிதே நிறைவேற்றும் உபாயத்தைத் தனது மனைவியின்பாற் றெரிந்து கோடல்	94
சாதவாகனன் சர்வவர்மனைக் காணாது தவித்துத் தனது புத்திரன்பால் ஊக்கம் பெறுகை ...	95
சர்வவர்மன் சர்வ வித்யாகலையை அரசனுக்கீதல்... ...	96
அரசன் சர்வவர்மனுக்குச் சிறப்புச் செய்தல்	96
ஏழாந்தரங்கம்	97
சாதவாகனன் தனது வித்யா சாமர்த்தியத்தை வெளிக்காட்டல்...	97
சர்வவர்மன் சுப்பிரமணியானுக்கிரகம் பெற்ற வரலாறு ...	97
காதந்திரத்தின் வரலாறு	99
சாதவாகனன் பூர்வம் ஓர் இருடி	99

அட்டவணை

	பக்கம்
குணாட்டியன் சாதவாகனனை விட்டு நீங்கல் ...	... 100
குணாட்டியன் விந்தியவாசினியைத் தரிசித்துப் பைசாச பாஷையைக் கற்றுக் காணபூதியைக் காணல்	... 101
பூதப் பிரேதப் பைசாசங்க ளதியல்பு ...	... 102
புஷ்பதந்தனெனும் பெயர்வந்த காரணம் ...	... 104
மாலியவானெனும் பெயர்வந்த காரணம் ...	... 111
எட்டாந்தரங்கம்	... 112
பெருங்கதை வெளிப்போந்த வரலாறு ...	... 112
காணபூதி எழு மகாவித்தியாதரர்களது கதைகளைக் குணாட்டியனுக்குக் கூறல்	... 112
குணாட்டியன் அக்கதைகளைப் பாவாக்கல் ...	... 112
பெருங்கதைகள் எழுதப்பட்ட விநோதம் ...	... 112
கதையெழுதும்போது நேர்ந்த விந்தை ...	... 112
காணபூதி சாபவிமோசனமடைதல் ...	... 113
பிசாசங்கட்கு நேர்ந்த கதி	... 113
உலகம் ஈடேறக் குணாட்டியன் கவலையுறல் ...	... 113
பெருங்கதைகள் உலகிற் பரவுறுதற்குகந்த வழியைக் குணாட்டியன் காண்கை ...	... 113
சாதவாகனன் எழு மகாகதைகளையும் குணாட்டியனது மாணவர்களிடம் செவியுறல்	... 114
சாதவாகனன் அக்கதைகளைப் பொருட்படுத்ாது சிறுமை செய்தல்	... 114
குணாட்டியன் அக்கதைகளை நெருப்பிலிடுதல் ...	... 114
விலங்குகளின் செய்கை	... 115
உதயணன் கதை அக்கினிக்குத் தப்பல் ...	... 115
விலங்குகள் கதை கேட்டானந்தத் தழுந்தல் ...	... 115
சாதவாகனன் நோயால் பிடியுண்ணல் ...	... 116
நோய்வந்த காரணம்	... 116

	பக்கம்
அரசன் அதிசயத்தை யறியப்புகுதல் ...	.. 117
சாதவாகனன் குணாட்டியன்பால் பயபக்தி பூணல்	... 118
குணாட்டியன் உதயணன் கதையைச் சாதவாகனனுக்குக் கொடுத்தல்	... 118
குணாட்டியன் தன்னிலை யடைதல்	... 119
சாதவாகனன் அக்கதையைப் பெருங்கதை யெனப் பெயர் புனைதல் ...	... 119
கதாபீடம்	... 119
பெருங்கதை யுலகிற் பரவல்	... 119
பரிக்ஷை வினாக்கள்	... 121

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

காப்பு

அம்பிகையது பிரார்த்தனையாகிய மந்திரகிரியால் உழக்கிய சிவபெருமானது முக சமுத்திரத்தினின்றும் திரண்டு வெளிப் போந்த பெருங்கதையாகிய இவ்வமுதத்தைச் (சாவாமருந்தை) சிரத்தையுடன் எவர்கள் பொருணலங்கண்டு சுகிப்பார்களோ, அவர்கள், ஓரிடையூறுமின்றிச் செல்வப்பேற்றை யடைந்து பரஞ்சுடாருளால் இம்மண்ணுலகிலேயே தேவர்களாகா நிற்பர்.

விநாயக தோத்திரம்

தமது மகிமையால் இடையூறுகளைச் சுட்டெரிப்பவர் போல் தமது முகத்தினின்று பொழியும் மும்மதத்தால் பூமியி லுள்ள தூளைச் சிவக்கச்செய்யும் கணேசன்நம்மைக் காப்பதாக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உதயணன் கதை

புவியில் வெளிப்பட்ட வரலாறு

(கதாபீட விலம்பகம்)

முதற்றரங்கம்

ஓர்கால், கைலாசகிரியில், பார்வதிதேவி சிவபெருமானை நானுவிதத்தால் மிகவும் மகிழ்வித்தபோழ்து, அம்மையப்பர், மிகவும் மனமுவந்து, அம்பிகையைத் தனது மடியில் இருத்தி, மிகக் கருணைகூர்ந்து அவளை நோக்கி 'நீ யிப்போழ்து எதனை விரும்பிக் கேட்கினும் உடனே உனது எண்ணத்தை முடித்து வைக்கிறேன்; நீ வேண்டியதைக் கேட்டுக்கொள்கி' யெனலும், ஜகமாதா அவரை நோக்கி 'எனக்கோர் புதுமையான கதையைச் சொல்லவேண்டு' மெனப் பிரார்த்தித்தனள். அவளிச்சையைப் பூரணஞ்செய்யத் திருவுளங்கொண்ட பரமன், அம்பிகையை நோக்கி 'உனக்கு இறந்த காலத்திய கதையைக் கூறவோ; நிகழ்காலத்திய கதையைச் சொல்லவோ; அல்லையேல் எதிர்காலத்திருக்குங் கதையை மொழியவோ? ' வென விடையளித்தார். மலையரையன் புதல்வி அம்மாற்றத்தைக் கேட்டு, 'எனக்கிதுவரை தெரியாத கதையொன்றைக் கூறின் நான் மகிழ்வல்' என்றாள்.

பரமன் பார்வதியின் வரலாற்றை யவட்குக் கூறுவது

அதற்குப் பரமன், 'பூர்வம் ஓர் சமயம் பிரமனும் விண்டு வும், என்னைத் தரிசிக்கக் கருதி, ஹிமாசலத்தை யடைந்த போழ்து, அவர் எதிரே சுத்த வெண்ஜோதி மயமான ஓர் இலிங் கம் தோன்றிற்று.[1] அவ்விருவரும் அதனது வியாபகத்தை அளவிட்டறிய எண்ணங்கொண்டு, பிரமன் அவ்விலிங்கத்தின் உச்சியை நாடி அன்னமாகப் பறந்தும், விண்டு அதனது அடியை நாடி கடுமுரணேன[2]மாகிப் பூதலத்தை அகழ்ந்து சென்றும், முடிவு காணமாட்டாது தவித்து என்னை 'ஊழி முதல்வஜயஜய' வென்று வழுத்தியகாலே, யான் அவர்க்குப் பிரசன்னமாகி 'நீங்களிருவரும் காமித்த வரங்களை என்னிட மிருந்து பெற்றுக்கொள்தி' சென வாக்களித்தேன். அவருள், பிரமன், ஏதோ பிரமைகொண்டு என்னையே தனக்குப் புத்திர னுகப் பவிக்கும்படி[3] வேண்டினன். எனக்கவன்பாற் பிரியம் குன்றியது. விண்டுவோ என்னை நோக்கி, 'மகேச, அடியேன் தங்கட்குஎக்காலத்தும் இடைவிடாத் தொண்டுபுரியும்வாழ்வை

[1] பிரம விட்டுணுக்களுக்குத் தோன்றியும் முடிவிடங்காண முடி யாத ஜோதிலிங்கம் பரமநிலையை யுணர்த்தும்; இக்கருத்தை வாத வூரடிகள் வாக்கால் நன்குணர்க.—

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதமையால்
பரமம்யாம் பரமம்யா மென்றவர்கள் பதைப்பொடுங்க
அரனுர் அழலுரு வாயங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணேக்க மாடாமோ.

[2] கடுமுரணேனம்=கடுமையான தேகவலி படைத்த பன்றி.

[3] பவிக்கும்படி=பிறக்கும்படி; உற்பவிக்கும்படி.

எனக்கு அனுக்கிரகிக்கவேண்டு' மென்றான். அவ்வாறு என்பால் விடாது காதல்கொண்ட அந்நாராயணனே[4] நீ; நீ எனது சக்தி. முன்பும் நீ எனது மனைவியே' என்றனர்.

இம்மொழிகளால், அம்பிகை சிறிது பிணங்கி, 'யான் இதற்கு முன்னர், வேறோர்விதமாக மனைவியா யிருந்ததாகச் சொல்வதைத் தெளிகின்றிலேன். அவ்விரகசியத்தை விளங்கக் கூறவேண்டு' மென பிரார்த்திப்ப, பரமன்,

'நீ, முன்னம் தக்ஷனுக்கோர் பெண்; சதி[5] யென்னும் நாமங்கொண்டிருந்தாய்; உன்னோடுகூட உற்பவித்த சகோதரிகளான மற்றைப் பெண்டிரை, தக்ஷன் ஏனையோர்கட்கு வதுவை செய்வித்தான். உன்னை யான் மணந்தேன். அந்த தக்ஷன்

[4] நாராயணன் என்னும் பதம் நீரை யுறைவிடமாகக் கொண்டவன் என்னும் பொருட்டு. சக்தி நீராகவும் அதனை யாளும் அறிவாகிய சிவம் தீயாகியும் எப்பொருட்கண்ணும் இரட்டையாய் உறைந்து அவற்றைப் பணிகொள்ளும். இதுபற்றியே சிவபெருமான் அர்த்தநாரீசுர னெனவும் கூறப்படுகின்றார். அடிகள் சிவனை நீருறுதீயே யெனக் கூறியதையுங் காண்க.

[5] சதி : இஃது அம்பிகையின் பெயர். சத்தாகிய சிவனைவிட்டு நீங்காதுறையும் சக்தி யாதலின் சதியெனப் பெயர் பெற்றாள். தாக்ஷாயணியது நாமம் சதி. மிக்குயர்ந்த பதிவிரதை யெனும் பொருட்டு. கணவனை யிழந்தபின் அக்கினிப்பிரவேசஞ் செய்து தமது கணவரை விடாது தொடரும் பத்தினிப்பெண்டிர் சதிகளெனப் படுவர். உடன் கட்டை ஏறுதலும் சதியெனப்படும் (Sati). இவ்வழக்கம் கங்காப்பிரதேசத்தும் தமிழ் நாட்டின் கண்ணும் பரவி யிருந்தது. கலி மிகுந்து பொய்யுங்களவும் பெருகிய பின்னர் இத்தெய்வீகம் குன்றி மறைவா யுறைகின்றது.

ஓர் பெரும் வேள்வி செய்யக்கருதி சகல தேவர்களையும் தனது யாகத்துக்கு வரும்படி வரித்தவன், என்னைமட்டும் வேண்டிக் கொள்ளவில்லை. நீயோ, உனது பிதாவின்மாட்டிருந்த அன்பால், அவனது யாகத்துக்கு போகத் தலைப்பட்டாய். உன்னையோ அவன் பொருட்படுத்திலன். நீ யவனை நோக்கி 'நீர், ஏன் தேவதேவனாய் எவர்க்கும் மேலாந் தானத்திருக்கும் பரமேஸ்வரனை, வரிக்கவில்லை? யென வுசாவலும், அவன் உன்னை நோக்கி 'உனது கணவன் எவர்கட்கும் வெறுப்பாக, கபால மாலைகளை அணிந்துகொண்டு, சுடுகாட்டையே தனக்குகந்த வாழ்விடமாகக்கொண்டு திரிகின்றானாதலின், அவனை யான் பொருட்படுத்திலேன்' என வெறுத்து விடைகூறினான். அவனது வசனங்கள் உனக்கு அடங்கா வெகுளித்தீயை யுண்டாக்கின. அவன் வழியாகத்தோன்றிய நினதுடலை நீ விட்டு நீங்கினாய். உனக்கு நேர்ந்த கதியை நோக்கி, யான் சீற்றங் கொண்டு, அவனது யாகத்தை முற்றும் பங்கஞ் செய்து, தேவர்களெல்லாம் நிலைகுலைந்தோட, அத்தக்ஷனைத் தலையறுப்பித்துப், பின்னர் சிறிதருள் கூர்ந்து அந்தச் சிறுவிதிக்கு [*] ஆட்டுத்தலையைப் பூட்டுவித்தேன். பின்னர்,

[*] சிறுவிதி = தக்ஷன். பிரமதேவன் அவரவர் தலைவிதியாயிருந்து யவரவரை யவரது வினைவழியாக வாட்டுவிப்பானாதலின் அவன் விதியெனப்படுவன். பிரமனது எழுத்தைக் கடக்கமுடியாதென்பது ஓர் பெருவழக்கு. 'அன்றெழுதினவன் அழித்தெழுதப் போகிறானோ' வெனும் பழமொழி யுளதன்றே. சிவபெருமானதருளைப் பெறில் தலைவிதியையும் மாற்றலாம். வேதஹிருதயமாகிய சதருத்திரத்தைப் பயில்வோர் பிரமனெழுத்தையும் கடக்கவல்லவர். இவ்வுண்மையைப் பிரமோத்திர காண்டத்திற் காண்க.

நீ பர்வதராஜனுக்குப் புத்திரியாகத் தோன்றினை. அக்காலம் யான் ஹிமாசலத்திற் றவம் புரிய நேரிட்டபோழ்து, நீ எனக்குத் தொண்டுசெய்து என்னை மிகவும் மகிழ்வியா நின்றாய். அச்சமயம் தேவர்கள் தாருகாசுரனது கொடுங் கோலிற்காற்றாது, அவனை அழித்தற்காக, என்னிடமோர் புத்திரனைக் கருதி, என்பால் மன்மதனை யனுப்பினர். நான் அவனை எனது நெற்றிக்கட்டீயாற் சாம்பராக்கினேன். பின்னர் நீ மிக வுக்ரமான தவஞ்செய்து என்னை வசீகரப்படுத்தினை. உடனே தேவர்கள் யாவரும் கொண்டாட பார்வதியாகிய வுன்னைத் தீவேட்டேன்.[7] பின்னர் நமக்கு ஓரிளங்குமரன் சம்பவமானான்.'

என வம்பிகைக்கு அவளது பூர்வ நிலையை விளக்கினர் இக்கதையினால், லோகநாயகி திருப்தியுறாது, சிறிது சிவபெருமானோடூடல் கொண்டு, பின்னர் சிலவுல்லாச வசனங்கள் கூறி மற்றும் பெருமானை மிகப் பிரார்த்தித்துத், தனக்கு மிக்க நல்லவோர் இரகசியமான கதையைக் கூறும்படி, கேட்டுக்கொண்டாள்.

புஷ்பதந்தனும் மால்யவானும் சாபம் பெறுகை

பரமன் அம்பிகையினது எண்ணத்தை யுள்ளபடி மகிழ்விக்கத் திருவுளங்கொண்டு, நந்திதேவரை விளித்து, 'யாம்

[7] தீவேட்டல் = கனல் சான்றாக வதுவை செய்தல். இதனை,—

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
உலகறியத்தீவேட்டான் என்னுமது வென்னேடி
உலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெலாங் கலங்கிடுங்காண் சாழேலோ

என்பதனாலுணர்க.

அம்பிகையோடு ஏகாந்தமாகச் சில இரகசியங்களைக் கூறப்போகின்றோம்; ஆதலின், நீ யொருவரையும் நமது சந்நிதானத்திற்கு வர விடங்கொடாதிருக்கக் கடவாய்' என ஆக்ஞை செய்து, நித்திய சுகிகளாகிய தேவர்களது சரிதங்களையும், நித்திய துக்கிகளாகிய மனுஷிய சரிதங்களையும், கூறுவதை விட்டு, மிக வற்புதமான மகா வித்யாதரர்களது [8] சரிதங்களை, அம்பிகை களிக்கக் கூறிவாராநின்றார். அச்சமயம், பிரமத கணத்தி லொருவனான புஷ்பதந்தன், சிவசன்னிதானத்தை அடைதற்காக, நந்தியெம்பெருமானை வழிவிடும்படி கேட்ப, அவர் 'இச்சமயம் நீ உள்ளே புகத் தகா' தென மறுப்ப, புஷ்பதந்தன் 'ஏதோ ஓர் அரிய இரகசியம் சிவசந்நிதானத்தில் நேர்கின்றதுபோலும்; அதனை எவ்வாற்றானேனும் அறிதல் வேண்டு'மெனக் கருதித் தனது யோகவலியால், நந்தியம்

---

[8] வித்தியாதரன் = கலைகளைத் தன்பாற்கொண்டு அவற்றைப் பணிகொள்ள வல்லவன்; விச்சாதரன்.

வித்தியாதரத்துவ மென்பது வித்தையையேனும், சத்தியையேனும், மாலையையேனும், மற்றெவற்றையேனும் கருவியாகக்கொண்டு ஒருவன் தனது மகிமையை வெளிப்படுத்தற்குரியது.

பரமனை வழிபட்டு அவனது அருளைப் பெற்றவரே வித்தியாதரத்துவத்திற் குரியர்: பரமசிவனே வித்தியாதரர்கட்கெல்லாம் பெரும் பற்றுக்கோடாக விருக்கும் இரகசியத்தை,

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதும் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழல்பணிந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப் பெறுதிரு நீலகண்டம்.

எனும் வாக்காற் றெளிக.

பெருமானும் அறியாவண்ணம், அவர் கட்டைத் தாண்டி, சிவ சந்நிதானத்துட் சென்று, மறைவிருந்து, ஏழு மகா வித்தியா தரர்களது சரிதங்களை யம்பிகைக்குச் சிவபெருமான் கூறும் வரை கேட்டிருந்து, பின்னர், தான் உட்புகுந்தவண்ணமே, ஒருவரும் அறியாமல் வெளியேறித், தான் விம்மிதத்தோடு செவிவழியுள்வாங்கி, மனத்துட்கொண்ட, அவ்வேழு அரிய அற்புத சரிதங்களையும், தனது பார்யை ஐயை என்பவளுக்கு விளங்கக்கூறித் தனது காதலியை மகிழ்வித்திருந்தான். எவன் தான் தனத்தையும் இரகசியத்தையும் தனது மனைவிக்கு மறைத்திருக்க வல்லவன்!

மறுநாள், ஐயை பார்வதிதேவியாரைத் தரிசித்தபோழ்து, தான் தனது காதலனிடமிருந்து கேட்ட ஏழு சரிதங்களையும், விம்மிதத்தோடு அம்பிகைக்கு வெளியிட்டாள். பெண்பாலா ருள், எவளே, இரகசியத்தை வெளியிடாதாள்! உடனே அம் பிகை சிவபெருமானைக் கிட்டி 'எனக்கு மிக இரகசியமென, வற்புறுத்திக் கூறிய சரிதங்கள், உலகப் பிரசித்தமான கதைக ளாகத் தோன்றுகின்றனவே' யெனப் பகர்ந்து, ஐயைக்கு அக்கதைகள் தெரிந்திருப்பதனைப் பரமனுக்குக் கூறினள். சிவ பெருமான் சிறிது ஞானதிருஷ்டிகொண்டு நோக்கிப், புஷ்ப தந்தன், தனது யோக மாயையால் நந்திகாவலையுங் கடந்து வந்து, கபடமாக அச்சரிதங்களைக் கேட்டுக்கொண்டதாக, மொழிந்தார். உடனே அம்பிகைக்குக் கோபம் பிறந்து புஷ்பதந்தனை வரவழைத்தபோழ்து, அவன் தனது பாரியை யோடும் தம்பி மாலியவானோடும் அம்பிகை சந்நிதானத்தைக் கிட்டினன். அம்பிகை புஷ்பதந்தனை நோக்கி 'நீ, கபட மார்க்

கத்தால், இரகசியத்தைத் தெரிந்துகொண்டமையின், நீ மண்ணுலகில் உற்பவிக்கக்கடவாய்' எனச் சபித்தனள். அப்போழ்து மால்யவானும் ஐயையும் தேவியிடம் புஷ்பதந்தனுக்காகப் பரிந்து பேசவே, அவர்களையும் புவியிற் பிறக்கும்படி பார்வதி சபித்தனள். பின்னர் அவர்கள் மிகப் பணிவுடன் தங்கட்குச் சாபவிமோசனமெவ்வாறு கைகூடு' மென வேண்டியிரப்ப, ஜகன்மாதா புஷ்பதந்தனை நோக்கி 'விந்தியாடவியில் குபேரனது சாபத்தால், சுப்ரதீகன் எனப் பெயரிய ஓர் யக்ஷன் காண பூதியாய் ஓர் பிசாசாக வலைகிறான். நீ புவியிற் பிறந்து, அவனைக் காண நேருங்கால், உனக்குனது பூர்வ நிலை மனத்திலுதிக்கும்; நீயுனது விருத்தாந்தத்தைக் காணபூதிக் குரைப்பாய்; அப்போழ்துன்சாபமுன்னை விட்டுவிலகும். பின்னர் மால்யவானும் காண பூதியைப்பார்க்க நேரும்; காணபூதி, உன்னிடங்கேட்ட வித்தியாதர சரிதங்களை மால்யவானுக் குரைத்தலும், காணபூதியும் மால்யவானும் சாபநீங்கப் பெறுவர்' என வவர்களது சாபம் நீங்கும் மார்க்கத்தை யுணர்த்தினள். உடனே அவர்கள் மின்னல் மேகத்துள் மறையுமாபோல் தமது தேஜஸை யிழந்து மண்ணுலகில் உற்பவமாகா நின்றனர்.

கைலையிற் சிறிதுகாலஞ் சென்றபின், தேவியோர் சமயம் சிவபெருமானை நோக்கிப் 'புஷ்பதந்தனும் மால்யவானும் புவியிலுற்பவமாதற்குச் சென்றனரே, யவர்கள் கதி, யிப்போழ்து யாதாயிற்' றெனக் கேட்டலும், பரமன், 'புஷ்பதந்தன் கௌசாம்பி நகர்க்கண் வரருசியாகப் பிறந்தான்; மால்யவான் சுப்ரதிஷ்டத்தில் குணாட்டியனாக வவதரித்தான்' எனச் செப்பினர். நிற்க,

இரண்டாந்தரங்கம்

வரருசி விந்தியவாசினியின் கிருபையால் காணபூதியைக் காண்கை

புஷ்பதந்தன், வரருசி யெனவும் காத்யாயன னெனவும் பெயர் வகித்து, பாடலிபுத்திரத்தில், யோகநந்தனது அவைக் களத்தில் மந்திரியாகவும், வித்வானாகவும், உறையுங்கால், விதி வயத்தால் மிகவும் மனமுடைந்து அந்நகரத்தைவிட்டு நீங்கி வெளியேறி விந்தியவாஸினி[9] யின் சந்நிதானத்தை யடைந்து துர்க்கையைப் பூஜித்து வருங்கால், தேவி யவனது கனவிற்

[9] விந்தியாவாசினி என்பது தேவிக்குகந்த க்ஷேத்திரம். தேவி கடாக்ஷத்தை எளிதிற்பெற விரும்புவோர் இத்தலத்தைத் தரிசிக்க வேண்டும். விந்தியவாசினி யென்பது அத்தலத்துறையும் அம்பிகை யையும் குறிக்கும்.

இஃது கங்கையின் தென்கரையில் ஓர் சிறு குன்றத்தில் காசிக் கும் பிரயாகைக்கும் மத்தியிலுள்ளது. காசியிலிருந்து 45 மைல் தூரம். மார்க்கண்டேய புராணத்திற் கூறப்படும் சண்டியின் தானமு மிஃதே. சிலர் ஸ்ரீகிருஷ்ணனது தங்கையாகிய நந்தகுமாரி கம்சனுக்குத் தப்பி வந்தெழுந்தருளி யிருப்பதாகக் கொள்வர்.

விந்தியகிரி கங்கைக் கரையிலிருக்கும் இத்தலம்வரை சென்றிருக் கின்றது போலும். இத்தலத்தை யடுத்து பல விநோதங்களுள. அவற் றுள் ராமவிருக்ஷ மென்பதொன்று அஃதப்பெயர் ஏன் கொண்ட தெனின் அவ்விருக்ஷத்தின் பட்டையை யுரித்தால் ராமராம எனும் அக்ஷ ரங்கள் உள்ளே தென்படுகின்றனவாம். ஓர் அரண்ணியமும் சமீபத் தேயுளது; அது விந்தியாடவி யெனக் கூறப்படுகின்றது. முற்காலத் திலோர் பெரும் நகரம் இத்தலத்தருகிலிருந்ததாகத் தோன்றுகின்றது. தற்காலம் மிர்சப்பூரெனப்படுமிட மிஃதே.

இத்தலம் பூர்வஜன்ம உணர்ச்சியை விளைவித்து பிறப்பறுத்து சித்திக்கும் முக்திக்கும் வழிகாட்ட வல்ல வற்புத ஸ்தலமாகப் பெருங் கதையாற் றோன்றுகின்றது.

பிரசன்னமாகி ‘நீ காணபூதியைக் காண்’ என ஆக்ஞை செய்து அந்தர்த்தான மாயினள்.

மறுநாளுதயமாதலும், வாருசி, தேவிசந்நிதானத்தை விட்டு நீங்கி, விந்தியாடவியை நோக்கிச் செல்லுங்கால், புலி முதலிய துஷ்ட மிருகங்கள் நிறைந்த வோர் வனத்தில், ஓர் ஆலமரந் தோன்ற, வதனை யவனணுகலும், அவண், பல பிசாசங்கள் சூழ அவற்றின் நடுவண், மரம்போன்ற பரிய உருவந் தாங்கி, காணபூதி பிசாசாக வுறைவதைக் கண்ணுற்றான். காணபூதி வாருசியைக் காணுதலும், மிகக் களிப்பெய்தி விநயமாக அதிதியுபசாரஞ் செய்து வரவேற்று உபசரிக்கவே, வாருசி யவனைநோக்கி ‘அந்தோ! மகாஞகிய வுமக்கு இந்தப் பைசாச கதி எவ்வாறு நேர்ந்த’ தென வுசாவ, உடனே காணபூதிக்கு ஓர் ஞாபகம் தோன்றவே தனது பூர்வ நிலையைப் பின்வருமாறு கூறத்தொடங்கினன்,—

காணபூதி வரருசிக்குத்தான் கேட்டவோர் இரகசியத்தை வெளியிடல்

ஓ பெரியாய், எனக்குச் சொந்த ஞானம் கிடையாது. நான் ஓர் சமயம், உஞ்சைநகரின் மயானத்தில் திரிந்துகொண்டிருந்த போழ்து, அவண், சாம்பமூர்த்தியுடன் விளையாடிக் கொண்டிருந்த அம்பிகை, அவரை நோக்கி, ‘நீரேன் கபாலத்திடத்தும் சுடலையின் மாட்டும் ஓயாவேட்கையைக் கொண்டிருக்கின்றீ’ ரெனவுசாவலும் பரமன் அவளை நோக்கி,

சிவபெருமான் மகாவிரதம் பூண்ட இரகசியம்

‘ஜகம் ஊழியின் முடிவில் பிரளயமுற்று, ஜீவராசிகள் அனைத்தும் ஒடுங்கி, ஜலமயமாயிருந்த போழ்து, யான் ஜகத்

தைத் திரும்பவும் வெளிப்படுத்தக் கருதி, எனது தொடையினின்று ஓர் சொட்டு இரத்தத்தை (ஓர் ரத்தபிந்துவை) தண்ணீரில்விட்டேன். அத்துளி ஓர் முட்டையாகிப், பின்னர் இருகூறுகப் பிளந்தது. அதனுள் ஓர் புமானிருந்தான். யான் பிரபஞ்ச விருத்தியைக் கருதி, அப்புருஷனிடமிருந்து, பெண்டன்மையான பிரகிருதியை வெளிப்படுத்தினேன். அவன் அவ்வாறு வெளிப்பட்ட பிரகிருதியைக் கலந்து பிரஜாபதியைப் பயந்தான். இப்பிரஜாபதி தன்னிட மிருந்து ஜீவராசிகளாகிய சகல பிரஜைகளையும் வெளிக் கொண்டுவந்தான். ஆதலின் உலகத்தில் வாழும் சகல ஜீவகோடிகட்கும் ஆதி புருஷனை பிரமனே பிதாமகன் (பாட்டன்) [10]

இவ்வாறு, அனைத்துயிர்க்கும் தானே பாட்டனாக விருப்பதை யுன்னிப், பிரமன் மிகச் செருக்குற்றான். அவனது அகந்தையை யொழித்தற்காக, அவனது ஐந்து சிரங்களிலொன்றை யான் கொய்தேன். இவ்வாறு விரிஞ்சனைப் பங்கஞ் செய்து செருக்கறுத்த பின்னர், யானே எனக்குட் பரிவெய்தி அவனது தலையோட்டைக் கைக்கொண்டு (கபாலபாணியாகி) சுடுகாட்டை வாழ்விடமாகக்கொண்டு ஓர் மகாவிரதத்தைப் பூண்டுகொண்டேன். அம்முட்டையின் இரு தோடுகளே விண்

10



ணும் மண்ணுமாவன. மற்றொன்றுமறிதி ; உலகடங்கலும் எனதங்கையில் கபாலமாக வடங்கி நிற்கின்றதைப் பாராய்'

எனப் பரமன் கௌரிக்குக் கூறிவருங்கால், அவள் மனத்தில் ஓர் நினைவு தோன்ற, அவள் பரமனை நோக்கிப் 'புஷ்பதந்தன் எப்போழ்து சாபம் நீங்கி நமதுலகத்தை யடைவான்' என வினவினள். அப்போழ்து கறைமிடற்றண்ணல்,[11] அம்பிகைக்கென்னைச் சுட்டிக்காட்டிக் 'காணபூதியாகிய இப் பிசாசத்தைப் புஷ்பதந்தன் எப்போழ்து பார்க்க நேருமோ, அப்போழ்து அவனது சாபம் நீங்கும். இவன் ஓர் யக்ஷன், குபேரனது[12] கிங்கரன். இவன் ஸ்தூலசிரசெனும் இராக்ஷதனோடு நட்புக்கொண்டிருப்பதைக் கண்ட நிதிக்கிழவன், வெகுண்டு, இவனை விந்தியாடவியில் பிசாசாகத் திரியும்படி சபித்தான். அப்போழ்திவன் தமையனாகிய தீர்க்கஜங்கன், குபேரனது பாதங்களில் வீழ்ந்து, தம்பியைப்பற்றிப் பரிவுறவே தனபதி யவனை நோக்கி, 'சாபவசத்தால் புஷ்பதந்தன் புவியில் மனிதனா யவதரிக்கப்போகின்றான். உனது தம்பி யவனிடம் மகா கதைகளைக் கேட்டுக்கொண்டு, பின்னர் அவற்றை மாலியவானது அவதாரமாகிய ஓர் சிவகணத்தலைவற்குச் செப்பநேரும். அப்போழ்து மாலியவானும் உனது பின்றோன்றலும் சாபவிமோசனம் பெறுவர்' என்றான். 'நீயுமவ்வாறே

[11] கறைமிடற்றண்ணல் = ஸ்ரீநீலகண்டன். கறையாகிய நீல விஷத்தை மிடறாகிய கண்டத்தில் வைத்த பெரியோன்.

[12] குபேரன் : சிவபெருமானது பொக்கிஷதாரனாய் சகல தனத்திற்கு மதிபதியாய் யக்ஷர்கட்குத் தலைவனாய் கைலாசத்திற்குச் சமீபத்தில் உறைதாநின்றான்.

புஷ்பதந்தனுக்குச் சாபவிமோசனத்தை யருளியிருக்கின்றாய், நன்றாய் நினைத்துப்பார்' எனக் கூறலும், 'நான் கழிபேருவகை யெய்தி யிவண்வந்து, எப்போழ்து புஷ்பதந்தனது தரிசனங் கிட்டுமோவென, ஆசையோடு காத்துக்கொண்டிராநின்றேன். அதிர்ஷ்டவசத்தால் மகானாகிய வும்மை யின்று தெரிசிக்கப் பெற்றேன். இதுவே எனது வரலா' றென விசைத்தான்.

இவ்வரிய மாற்றம் வாருசியது செவிக்கண் வீழ்தலும், அவனுக்குத் தனது பூர்வநிலை மனக்கண் உதயமாயிற்று. உடனே யவன் காணபூதியை நோக்கி 'நான்தான் அந்தப் புஷ்ப தந்தன்' எனச் செப்பி மிக்க வுவகையோடு ஏழுலக்ஷங் கதை களை எடுத்துரைத்தான். மகா வற்புதமான ஏழு மகாவித்யா தரர்களது சரிதங்களை, செவியமுதமாகக் காணபூதி பருகிய பின், அப்பிசாசம் ஆர்வமேலீட்டால் வாருசியை நோக்கி 'நீர் உள்ளவா ருத்திராவதாரமே, அல்லையேல் அளவிடற்கரிய இவ் வரிய கதைகளைச் சாங்கோபாங்கமாக எவ்வாறெடுத்துரைக்கக் கூடும்? நீர் உமது தத்கால மனுஷாவதாரத்தின் விர்த்தாந்தத் தையும் அடியேற்கு விரிவாயெடுத்துரைத்து என்னை மகிழ் விக்க வேண்டு' மெனக் குறையிரந்தான். அதற்கிணங்கி வாருசி தனது சரிதத்தைக் கூறுவானாயினன்.—

வரருசி சரிதம்

கௌசாம்பி நகர்க்கண், சோமதத்தன் அக்னிசிகன் என விருநாமம் பெற்றவோரந்தணன், முனிகன்னிகையாகிய வசு தத்தா வென்பவளைப் பாணிக்கிரகணஞ் செய்து வாழுங்கால், அவர்களது அருந்தவத்தால் நான் அவர்கட்குப் புத்திரனாக

வவதரிக்க நேர்ந்தது. எனது அதிபாலியத்திலேயே எனது தந்தை காலஞ்சென்றார். எனதன்னை என்னை மிகவும் அருமை பாராட்டி வளர்த்து வந்தாள். ஓர்நாள் இரண்டு அதிதிகள் எங்கள் கிருகத்திற்கு வந்தார்கள். அவர்களை மிக வுபசாரத்தோடு விருந்தேற்று மகிழ்வித்தோம். அன்றிரவு, நாங்கள் நால்வரும் சம்பாஷித்துக் கொண்டிருக்குங்கால், ஓர் அற்புதமான மிருதங்கத்தொனி எங்கள் செவிக்கெட்டிற்று. அப்போழ்து, எனதன்னைக்கு எனது தகப்பனார் நினைவு தோன்றலும், அவள் என்னை நோக்கி ' இஃது உனது பிதாவின் நண்பனாகிய நந்தன் செய்விக்கும் நாட்டியம் ; மிக வற்புதமாக விருக்கும்' என்றாள். உடனே நான் 'அம்ம, நான் போய் அந்நாட்டியத்தைப் பார்த்து வந்து பின்னர் அதனை அவ்வண்ணமே உனக்குக் காட்டா நிற்பேன்' என்று கூறவே, அவ்வதிதிகளிருவரும் மிக விறும்பூ[13]தெய்தி, என்னை நோக்கி ' நீ சொல்வது மிகவும் துர்லபமான காரியம் ; ஏன் வீண்முயற்சி' யென்றனர். அதனைக் கேட்ட எனது தாய், அவர்களை நோக்கி 'நீங்கள் ஐயுற வேண்டாம் ; நீங்கள் இவனை அறியீர் ; இவன் எதையேனும் ஓர்தரம் கேட்க நேரினும், அதனை முழுமையும் மனக்கண் பதிய வாங்கி வைத்துக்கொண்டு, பின்னர் வேண்டியக்கால், அதனை அவ்வாறே வெளித்தர வல்லவன்' என்றாள். அவர்கள் எனது ஞாபகசக்தியை நேரே பரீக்ஷிக்கக்கருதி, பிராதிசாக்கியத்தை[14]

---

13. இறும்பூது = அதிசயம்.

14. **பிராதிசாக்கியம்** என்பது வேதாங்கங்களி லொன்றாகிய மூல வியாகரணமாகும். பாணினீயம் முதலிய இலக்கணங்கட்கு ஆதிவித்தாகும். வேதம் என்னும் விருக்ஷத்தினது சாகைகளைப் பற்றிக் கூறுவது.

ஸ்வரத்தோ டென்முன் கானஞ் செய்தனர். நான், அதனைப் பின்னர் அக்ஷரலோபமும் சுவர பேதமுமின்றி, யவ்வாறே திரும்பப் பாடிக் காட்டினேன். அவர்கள் என்னை மிகவும் கொண்டாடினார்கள். பின்னர், நானும் அவ்விருவரும் நாட்டியம் நிகழுமிடத்திற் போய்க் கூத்தையும் அபினயத்தையும் கண்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்தகாலை, நான் எனதன்னைக்கும் அவ்விருவர்க்கும் நாட்டியத்தை அவ்வாறே தரிசிப்பித்தேன். அதிதிகளிருவரும் மிகக் களிப்பெய்தினர். அப்போழ்து, இவ்விருவருள் ஒருவராகிய வியாடி எங்களிருவரையும் நோக்கி, தாம் வந்த உத்தேசத்தை எங்கட்குத் தெரிவிக்க வெண்ணங்கொண்டு தமது வரலாற்றினைக் கூறத் தொடங்கினார்,—

வியாடியின் சரிதம்

வேதசம் எனும் நகரில் தேவசாமி, கரம்பகர் என்றவிரண்டு அந்தணர்கள் சகோதரர்கள். அவர்கட்கு இவ்வதிதியாகிய இந்திரதத்தரும், யானும் முறையே புத்திரர்கள். எனது பிதா காலஞ் செல்தலும் எனதன்னை சககமனஞ் செய்துவிட்டாள். தனது சகோதரரது பிரிவை யாற்றாது, தேவசாமி என்பவரும் மரணமுற்றார். அவர் மனைவியும் அவரோடு சககமனஞ் செய்துவிட்டாள். நாங்கள் திக்கற்றவர்களாகி, எங்கட்கிருந்த செல்வத்தைக் கைப்பற்றிக்கொண்டு, எழுமைக்கும் உறுதி பயக்க வல்ல கல்விச்செல்வத்தைப்[15] பெறக் கருதி குமாரக் கட

[15]. கல்விச் செல்வம் எழுமைக்கும் உறுதிபயக்க வல்லதென்பதைப் பின்வருங் குறளாற் றெளிக.

> ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
> எழுமைக்கு மேமாப் புடைத்து.

ஞானமயமாகிய கல்வியே யொருவனை பிறவிகடோறும் தொடர்ந்து உடன் சென்று வினையொழித்து முத்திக்கரை சேர்த்தற்கு வாயிலாகும்.

வுனை நோக்கித் தவம் புரிந்தோம். சிவகுமாரன், எங்கட்குச் சொற்பனத்திற் பிரத்தியக்ஷமாகி, எங்களை நோக்கி 'பாடலிபுரத்தில் வருஷனெனப் பெயரிய அந்தணனொருவனுளன். அவன்பாட்டு சர்வ வித்யாதனமுளது. அவனையடைந்து நீங்கள் கலைஞானத்தைப் பெறக்கடவீர்' என வருள்செய்து மறைந்தனர்.

தெய்வம் அனுக்கிரகித்தவண்ணமே யாங்களிருவரும் பாடலிபுத்திர நகரைக் கிட்டி, வருஷரைப்பற்றி ஊராரை விசாரித்தபோழ்து, அவர்கள் 'அவன் ஒன்றுமே தெரியாத பேதையன்; அவனை நோக்கியோ, வித்யையைப் பெற வந்தீர்கள்' என வெங்களை ஏளனஞ் செய்தனர். யாங்கள் தெய்வ வாக்கை உல்லங்கனஞ் செய்தற்கஞ்சி, அவரது கிரகத்தைக் கேட்டறிந்து கிட்டியகாலை, அவ்வீடு நாலுபக்கங்களிலும் பெருச்சாளி பறித்துக், கண்டவிடமெல்லாம் புத்துவைத்துப், பார்ப்பதற்கு மிகவும் ஹீனமாயிருப்பதைக் கண்டோம். நாங்கள் கிரகத்தினுட் புகுந்தபோழ்து, வருஷர் ஓர் பக்கம் தியானத்தி லமர்ந்திருந்தனர். உத்தமியான வவர் பத்தினியோ, எங்களை மிக வுபசாரத்தோடு அதிதிபூஜை செய்தேற்றுக் கொண்டு, நாங்கள் எங்களது எண்ணத்தை வெளியிட்டபோது, அவள் எங்களை நோக்கி 'நீங்களோ எனது புத்திரர்கட்குச் சமானம், எனக்கென்ன கூச்சமுளது. நேர்ந்த விஷயங்களை யுங்கட்கு விளங்கக் கூறுவல், செவிகொடுத்துக் கேண்மின்' எனப் பகர்ந்து தனது கணவனது சரிதத்தைக் கூறலாயினள்,—

வருஷரது சரிதம்

இந்நகரில் சங்கரசுவாமிகளென்பவ ரொருவரிருந்தார். அவ்வந்தணற்கு இருவர் புத்திரர். அவர்கள் வருஷர் உபவருஷரெனும் பெயரினர். இவர்களுள், வருஷர் பேதைமையையும் நல்குரவையும் ஊழாற் பெற்றவர்; உபவர்ஷரோ நிரம்பக் கல்வியையும் செல்வத்தையும் படைத்தவர். மிக்க அறியாமையைத் தாங்கி என்னோடு தனது வாழ்நாளைக் கழித்து வந்த வருஷர், ஒருநாள் அறிவுடைய பார்ப்பானெவனும் ஏற்றுக் கொள்ள மாட்டாதவோர் ஹீனமான தானத்தை உபவர்ஷரது மனைவியிடம் ஏற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தபோழ்து, யான் அவர் செயலைச் சகிக்கலாற்றாது, அவரை நோக்கி 'நீர் குமாரக் கடவுளை நோக்கித், திடமான தவம்புரிந்து, மெய்ப்பொருளாகிய வித்யையைக் கட்டாயம் பெற்று வரவேண்டு,மெனக்கடிந்து கூறினேன். அருள்துணை நின்றதால், எனது வாக்கியத்தை யவர் சிக்கெனப் பிடித்து வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று ஏகாக்ர சித்தத்தோடு [16] சுப்ரமண்யக்கடவுளை நோக்கிப் பசி தாகங்களைத் துறந்து தவம்புரியவே, குமாரக்கடவுள் பிரத்தியக்ஷமாகி வித்யாதனத்தை அவர்க்கீந்து அவரைநோக்கி 'உன்

[16] ஏகாக்ரசித்தமென்பது ஓர் முனைப்பட்ட மனம். கவடுபடாத இத்தகைய மனமே யோகத்திற்குச் சிறந்த சாதனம். இதுவே நாடிய பொருளிற் பதிந்து அதனது இரகசியத்தைக் காணவல்லது.

கல்வியை யுள்ளவாறு விரும்புவோர் குமாரக்கடவுளை நோக்கித் தவஞ் செய்தலே நல்வழி. அவன் கடவுளுக்கும் பிரணவத்தை யுரைத்த ஞானபண்டிதனன்றோ! பிரமனைக் குட்டிச் சிறையிட்டவனும் கந்தனன்றோ!

பாற் கிட்டிய இவ்வரிய வித்யை (கல்விச்செல்வம் = கலைஞ் ஞானம்) ஒரே தடவையிற் கேட்டு மறவாது மனத்துட் டரிக்க வல்ல சதுர்த்தன்[17] உன்னைக் கிட்டியவழி, பிரகாசிக்கும். அத்தகைய தக்க மாணவகனைத் தெரிந்து, உனது கல்வியைக் கொடு' வென ஆக்ஞை செய்து அந்தர்த்தானமாயினர். அரிய வித்யாகலையை, இவ்வாறு சிவகுமாரனிடம் பெற்றுக்கொண்டு, இவன் வந்து நடந்த வரலாற்றினை எனக்குக் கூறித், தக்க மாணவகனை நாடினவராய்க் காலத்தை வீண்போக்காது சதா நிஷ்டாபரரா யிருக்கிறார். ஆகலின், நீங்கள் ஒரே தடவையில் கலையைக் கேட்டுள்ளத்தில் மறவாது பிணிக்கவல்ல சமர்த்தனை நாடிக் கடிதிற் கொண்டுவாரக் கடவீர்' என செப்பினள்.

உடனே, நாங்கள் நூறு பொன்னை யவட்குக் காணிக்கை யாகக் கொடுத்துவிட்டு, அவளது கோரிக்கையின்படி, தக்க மாணவகனைத் தேடிக்கொண்டு வருவதாக வாக்களித்து, பாடலி புரத்தைவிட்டு நீங்கி, ஏகச்சந்தக்கிராகி[18] யைக் காண நாடெல் லாம் தேடித் திரியாநின்றேம். புண்ணிய வசத்தால் உங்கள் கிரகத்தைக் கிட்டினேம். அம்மா, உனது குமாரன் ஏகச்சந் தக்கிராகி யென்பதற்கையமில்லை. ஆதலின், தயைசெய்து

[17]. சதுர்த்தன் = சதுரன், சாதுரியன், சாமர்த்தியன். பதப் பொருள் நான்காமவன். ஜாக்கிர சொற்பன சுழுத்திகளைக் கடந்து நான்காந்தானமாகிய துரிய பூமியைக் கண்டவன் என்பது விசேடப் பொருள்.

[18] ஏகச்சந்தக்கிராகி = ஓர்தரம் கேட்டமாத்திரையானே மறவா துள்ளிழுத்து வைக்கவல்லவன். ஏகம் = ஒன்று, சந்தம் = வண்ணம்; கிராகி = கிரகிப்பவன்.

இக்குழந்தையை, எங்களோடுகூட கலைஞ்ஞானம் பயிலுதற்காக, அனுப்புவிக்கவேண்டுமென எனதன்னையை வியாடி வேண்டிக்கொண்டனர்.

வரருசியென்ற பெயர் வந்த காரணம்

அப்போழ்தெனது தாயார் அவர்களை நோக்கி இப்புத்திரன் எனக்குப் பிறந்தபோழ்து ஆகாயவாணி 'இவன் ஓர்தரம் கேட்பினும் எதனையும் கிரகித்து மறவாமல் மனத்துட்டரிக்க வல்ல தீரனாவன். இவன் வரமானதை (நல்லபொருளை) விருப்பத்தோடும் ருசிக்க வல்லவனாதலின் இவனது நாமம் வரருசியென வெங்கணும் பிரசித்திப் பெறும். இவன் வருஷரிடம் பிரம்மவித்யையை முழுமையும் கிரகிப்பன் எனச் செப்பியதுண்டு.

நான் இதுவரை யொன்றுமே தோன்றவில்லையே யெனக் கவலைகொண்டிருந்தேன். உங்கள் வரவால், எனக்கிருந்த கவலை நீங்கிற்று. இவன் எனக்கேக புத்திரன். நீங்கள் இவனை சிரத்தையோடு ஆதரித்து, மூவரும் வருஷரிடம் கல்வி பயிலுங்கள். இவனைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு" எனக் கூறினன். உடனே வியாடி என்னை வேதபாடத்திற் கருகனாகும்படி, எனக்கு வேதோக்தமாக [19] உபநயனம் [20] செய்

[19] வேதோக்தம் என்பது வேதத்தின்படி பொருத்தமானது. வேதம் + யுக்தம்.

[20] உபநயனம் = சகாயமான கண் = ஞானக்கண் ; அந்தணர்களது எக்ஞோபவீதமாகிய பூணூல் கல்யாணம். வேதவிதிப்படி நடக்கும் இச்சடங்கால் ஞானக்கண் திறக்கப்படும். இஃது மறைவிருக்கும் ஞானத்தைப் பிறப்பித்தலில் அந்தணர் இருபிறப்பாளர் எனப்படுகின்றனர்.

வித்தார். பின்னர் நாங்கள் மூவரும் எனதன்னையிடம் செலவு பெற்றுக்கொண்டு, கௌசாம்பி நகரத்தைவிட்டு நீங்கிக் கூடிய சீக்கிரத்தில் பாடலிபுத்திர நகரை யடைந்தோம்.

வருஷரது கிரஹத்தில் நாங்கள் பிரவேசித்த காலையில் அவர் என்னை, ஸ்கந்தப்பிரஸாதமே [21] மூர்த்திகரித்து வந்ததாக வெண்ணி, மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்.

வரருசிவருஷரிடம் கல்வி பயிலல்

பின்னர், அவ்வாசிரியர், எங்கட்கு முத்திக்கு வித்தாகிய பிரணவத்தை [22] யுபதேசித்து, வேதாதி கலைகளை யெல்லாம், ஒழுங்காகப் பயிற்றுவித்தனர். வரருசியாகிய யான் எக்கலையையும் எனதாசிரியர் வாய்திறந் தோர்தரம் சொன்னவளவில், சிக்கென மறவாமற் கிரகிக்கும் ஆற்றலுடையவனானேன். வியாடியோ, ஆசிரியரிடம் கேட்டபின் என்னிடமும் கேட்டு இருதரத்தில் எதனையும் கேட்டுத் தரிக்க வல்லவராயிருந்தார். இந்திரதத்தர் எம்மூவரிடத்திலும் வரிசையாய் கேட்டு மூன்று தரத்தில் கிரகிக்கலானார். இவ்வாறு, வருஷர் வேதாதி கலைகளை யெல்லாம் ஓதுவித்து வரும்போழ்து, அவரது புகழ் எங்கணும் ஓங்கி பரவ வாரம்பித்தது. அந்நகர்க்கதிபனான நந்தன், வருஷ

[21] ஸ்கந்தப்பிரசாதம் = ஸ்கந்தனது அருள்.

[22] பிரணவம் : ஒலிமயமாய் சகல மந்திரங்கட்கு மூலமந்திரமாகிய ஓங்காரம். ஓங்காரம் பிரணவமெனப் பெயர்கொண்ட காரணத்தைக் கேட்டறிந்துகொள்க.

" உய்யவென்னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற மெய்யா " என்றன ரடிகளும்.

ரது கிரகத்தைச் சொர்ன மயமாக்கி மற்றும் வேண்டிய தனத்தை யவர்க்குதவினான். இவ்வாறு, நாங்கள் பிரம்ம வித்தையை வருஷரிடம் பயின்று வருநாளில், ஓர் தினம் நாங்கள் எங்கள் ஆசிரியரோடு கங்கையாடப் போயிருந்த பொழுது, நான் அவரை நோக்கி 'பகவ, இப்பாடலிபுத்திரம், எக்காரணத்தால் பூமகளும் நாமகளும் ஒன்றுகூடி ஐக்கியமாயுறைந்தாங்கு, கல்விச்செல்வத்தாலும் பொருட்செல்வத்தாலும் மேம்பட்டு விளங்காநின்ற' தெனக் கேட்டேன்.

உடனே வருஷர் பாடலிபுத்திர நகரத்தின் வரலாற்றை எங்கட்கு விளங்கக் கூறத்தொடங்கினார்,—

மூன்றாந்தரங்கம்

பாடலிபுத்திரத்தின் வரலாறு

கங்காநதி, மலையைவிட்டிறங்குமிடமாகிய கனகலம்[23] என்ற க்ஷேத்திரத்தில், தக்ஷணத்திருந்து ஓர் அந்தணன் வந்து

[23] கனகலம்: இஃது அற்புதமான வோர் க்ஷேத்திரம். சப்த மோக்ஷதானங்களிலொன்றாய் கருதப்படும் மாயாபுரியாகிய ஹிரித்துவாரத்திற் கருகேயுள்ளது. கங்கை மலையைக் கிழித்துக்கொண்டு பூமியிலிறங்கும் தானம் ஹிரித்துவாரம். ஹரித்துவார ஸ்நாநத்தை விரும்புவோர், அதன் சமீபத்திலுள்ள கனகலத்தில் வசிப்பது வழக்கம்.

கனகலத்திற்றான், சிறுவிதியாகிய தக்ஷன் தனது யாகத்தை நடத்தியது. இவ்விடத்திலேயே சதி யுடலத்தை விட்டதூஉம். வீரபத்திரக்கடவுள் தக்ஷயாகத்தை யழித்துத் தேவர்களைத் தண்டித்த விடமு மிஃதேயாம்.

இத்தலம் மகா கவியாகிய காளிதாசனால் மேகதூதத்திற் கூறப்படுகின்றது.

தவம் செய்துகொண்டிருநதான். அவனுக்குப் புத்திரர் மூவர். தாய்தந்தையர் காலஞ் சென்றபின் அம்மூவரும் கல்வியை நாடி ராஜக்கிரகத்தை [24] யடைந்தனர். அவண் வித்தைகளைப் பயின்றபின் சிவகுமாரனது கிருபையை நாடி தெற்கு நோக்கிச் சென்று கடற்கரையை யடுத்த சிஞ்சினியெனப் பெயரியவோர் நகரத்தை யடைந்தனர். இவர்கள் போஜிகன் எனும் அந்தணனால் மிகவும் உபசரிக்கப்பெற்றுப் பின்னர் அவனது புதல்வியர் மூவரையும் முறையே வதுவை செய்துகொண்டனர். போஜிகனுக்கு ஆண் சந்ததி கிடையாமையால், அவன் தனது தனத்தை யவர்கட்குக் கொடுத்துவிட்டுத் தவஞ்செய்யக் கானகஞ் சென்றான். பின்னர் ஓர் பெரும் பஞ்சமுண்டான காலை, அம்மூவரும் தமது மனைவியரைப் போஷித்துக் காப்பாற்ற முடியாமையால் தமது தேவியரைத் துறந்து தேசாந்தரஞ் சென்றனர்.

இவர்கள் தம் மனைவியரை விட்டுப் பிரியும்போழ்து, அப்பெண்டிருள் நடுவுள்ளவள் கர்ப்பவதியாயிருந்தாள். தங்காதலர்கள் பிரிந்தபின் அம்மூன்று ஸ்திரீகளும் தம் பிதாவின் சிநேகனாகிய எக்ஞதத்தனை யடுத்து, அவனாற் போஷிக்கப்பட்டு தமது கணவர்களது வரவை எக்கமாக எதிர்நோக்கி யிருந்தனர்.

---

[24] இராஜக்கிரகம் : இஃது பாடலிபுத்ர நகரமுண்டாகுமுன் மகதநாட்டின் தலைநகராய் நாமகள் விளையாடிக்கொண்டிருந்தவிடம். இவண் ஓர் குகையுள்ளதுபோலும். பலதடவைகளில் புத்தசங்கமிவண் கூடியது. இஃது பாடலிபுத்திரத்திற்குத் தெற்கண் சிறிது தூரத்திலிருப்பது. சீனயாத்திரவாசியாகிய பாஹியான் (Fahian) என்பவரால் நேரே தரிசிக்கப்பட்ட தலங்களிலொன்று.

காலக்கிரமத்தில் நடுவுள்ளவள் ஓர் ஆண் மகவை யீன்ருள். அக்குழந்தையை யவர்கள் செப்புதற்கரிய ஆதரவோடு சீராட்டி வளர்த்து வராநின்றனர். ஓர் நாள் ஆகாய வீதியில் சம்புவின் மடியிலிருந்து காலத்தை உல்லாசமாகக் கழித்த பார்வதிதேவி, அக்குழந்தையை அன்னையர் மூவரும் ஒப்பரிய பரிவுடன் சீராட்டி வளர்ப்பதைக் கண்ணுற்றனள். உடனே அம்பிகைக்குக் அக்குழந்தையின் மாட்டு அருள் சுரத்தலும், அவள் பரமனை நோக்கி 'இம்மாதர் மூவரும் எவ்வளவன்போடும் தம் புதல்வனைப் போற்றுகின்றனர். இவனால் மிகவும் க்ஷேமத்தைப் பெறலாமென்றல்லவோ அவர்கள் கருதாநின்றனர். சிறிது இவர்கள்மேல் கடாக்ஷத்தைக் காட்டியருள்க' வெனப் பிரார்த்தித்தனள். அதற்குப் பரமன் 'இக்குழந்தை, முற்பிறவியில் என்னை மிகவும் பூஜித்து வழிப்பட்டவன். ஆதலின் இப்பிறவியில் ஏற்கனவே இக்குழந்தைக்கு நல்ல போகம் ஏற்பட்டுளது. முற்பிறவியில் இக்குழந்தைக்கு மனைவியாயிருந்தவள் இப்போது மகேந்தரவர்மனது புத்திரியாய்ப் பாடலி எனும் நாமத்தோடு வளரா நின்றனள்' என்றம்பிகைக்குரைத்துப் பின்னர் அம்மாதரார் கனவிற்றோன்றி 'இக்குழந்தை நீங்கள் செய்த பூஜாபலத்தால் உங்கட்கு மகவாய் உதித்தான். இவனுக்குப் புத்திரகன் எனும் நாமஞ் சூட்டுக; இவன் தூங்கி விழித்தெழும்போதெல்லாம், இவன் சிரசிலிருந்து லக்ஷம்பொன் விழும்; இவனரசனுவான்' என அனுக்கிரகஞ் செய்தார். அன்னையர் களிபேருவகையெய்தினர்.

ஈசனருளியவாறே பிரதி தினமும் பொன்விளையா நின்

றது. அவர்களைப் பிடித்திருந்த தரித்திரம் ஓட்டெடுத்தது', சிவாக்ஞையை சிரமேற்கொண்டு அவர்கள் தம் புதல்வனுக்குப், புத்திரகன் எனும் நாமஞ் சூட்டினர். பின்னர் அச்சிஞ்சினி நகர்க்குப் புத்திரகன் அரசனானான். ஓர்நாள் எக்ஞதத்தன் புத்திரகனை நோக்கி 'நீ யுனது பிதாக்களைக் காணும்படி விரும்புகின்றாயாதலின், பிரதி தினமும் பிராமணர்கட்கு சுவர்ண தானஞ் செய்துவா. உனது கொடை எங்கணும் புகழ்பரவி உனது பிதாக்களும் செல்வங்கருதி யிந்நகர்க்கு வரக்கூடும். முயற்சியாற் கைகூடாத காரியம் கிடையாது. ஓர் சரிதமுமுளது அதனைக் கேளெனக் கூறுவனாயினன்,—

பொன்னிற அன்னங்களின் சரிதம்

பிரமதத்தனென்றவோர் அரசனிருந்தான்-ஓர் நாள், அவனெதிரில் அநேக அன்னப்பக்ஷிகள் பறந்து செல்லுகையில், அவற்றின் மத்தியில் இரண்டு சுவர்ணமயமான அன்னங்கள் காணப்பட்டன. அரசனுக் கவ்விரண்டு அன்னங்களையும் பிடித்தற்கு மிக விருப்பமுண்டாயிற்று. இவ்வாசை யவனது மனக்கண்மீதூர்ந்தெழுந்ததால், அவன் தனது அரசாட்சியைப் பேணாது அவற்றைத் திரும்பக் காண்பதுவே கருத்தாய், ஓர் அற்புதமான தடாகத்தை யுண்டுபண்ணினான். அவன் புரிந்த சூழ்ச்சியால், அவனெண்ணிய வண்ணம் அவ்வன்னங்கள் அத்தடாகத்தை நோக்கித் திரும்பவும் வந்தன. தங்கமயமான அவ்வன்னங்களை யவன் விளித்து 'உங்கட்குச் சிறகுகள் எவ்வண்ணம் சொர்ணமயமாயின?' வெனக் கேட்டான். அவையவனைப் பார்த்து, 'பூர்வம் நாங்கள் காகங்கள். ஓர் நாள் பாழடைந்தவோர் சிவாலயத்தில் சிலர் காகங்கட்குப் பலிபோட்டார்கள்.

அப்பலியைப் புசித்தற்காக, நாங்களிருவரும் மிகப் போராடி விதிவசத்தால் ஓர் நீர் நிரம்பிய பாத்திரத்தில் வீழ்ந்து உயிர் துறந்தோம். சிவசந்நிதானத்தில் எங்கட்குற்ற மரணத்தால், இப்பிறவியில் சொர்ணமயமான ஹம்சங்களாக அவதரித்தோம்' என்றன. அரசன் தனது விடாமுயற்சியைப் பற்றுக் கோடாய்க் கொண்டுகிடைத்தற்கரிய தெய்வீக அன்னங்களைத் தன்பால் வர வழைக்கும் சாமர்த்தியத்தைப் பெற்றானன்றே! ஆதலின் திட மான சங்கல்பம் எதனையுங் கைகூட்டுவிக்கு'மென எக்ஞதத் தன் புத்திரகனுக்கு உறுதி கூறினன்.

எக்ஞதத்தன் செப்பியாங்கு, புத்திரகன் அநுதினமும் அந்தணர்கட்கு சொர்னதானஞ் செய்து வருங்கால், அவனது புகழ் எங்கணும் பரவ அவனது பிதாக்கள் தமது மிடிதீர வோர் நற்சமயம் வாய்த்ததெனவெண்ணி, சொர்னதானத்தைக் கருதி யந்நகரத்தை யடைந்தனர். புத்திரகன் தனது பிதாக் களை மிக மகிழ்ச்சியோடு வரவேற்றான். ஆயினும், அவனது தந்தையர், தீவினையின் வலியால், தமது புத்திரனிடம் அன்பை வகிக்காது, அவனது சம்பத்தை நோக்கிப் பொச்சாப்புற்றனர். அவனது செல்வத்தையும் அரசையும் தாம் கைப்பற்றிக்கொள் ளலாமென்ற விபரீத வெண்ணத்தை அவர்கள் தமது மனத் துட்கொண்டு, ஓர் தந்திரத்தால் அவனைக் கொல்லக்கருதி யவனை நோக்கி 'நாம் தேவியைத் தரிசிக்க விந்தியவாசினிக் குச் செல்வா'மெனச் சாக்குக்காட்டித் தமது புத்திரனை அவ் ஆலயத்திற் கழைத்துக்கொண்டு சென்றார்கள். ஆலயத்தை யணுகலும் அவர்கள் அவனை நோக்கி 'நீ முதற்கண் ஆலயத் துட்செல் ; நாங்கள் பின்னால் வருகிறோம்' எனச் செப்பலும்,

புத்திரகன் அவர்களது வஞ்சனையையறியாது கோயிலுட் புகுந்தான். இவனைக் கொலைபுரிதற்காக முன்னரே ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்த கொலைஞர், இவனைப் பிடித்துக் கொல்ல வந்தார்கள். இவன் அவர்களை மிகவும் இரந்து கேட்டுக்கொண்டு, தனது இரத்தின மாலையை யவர்கட்குக் கழற்றிக் கொடுத்துவிட்டு, உயிர்தப்பி, அவ் ஆலயத்தைவிட்டு நீங்கிக், காட்டுவழி, துரிதமாய்ச் சென்றான். கொலையாளிகளோ, அவனது பிதாக்களினிடம் தாம் அவனை வினைமுடித்து விட்டதாக, ஏற்கும் வண்ணம் பொய்கூறி மகிழ்வித்தலும், அவர்கள் தமது நகரத்தை நோக்கித் திரும்பிச்சென்றனர். புத்திரகனது மந்திரிகள் புத்திரத் துரோகிகளாகிய இக்கொடியவரைச் சந்தேகத்தாற் சிறைப்படுத்திப் புத்திரகன் திரும்பாமை பற்றி யவர்கட்கு மரணதண்டனை கொடுத்தார்கள். கெடுவான் கேடு நினைப்பானென்றபடி யாயிற்றன்றே !

புத்திரகன் சித்திபெறல்

புத்திரகன் தெய்வாதீனமாகத் தப்பிப்பிழைத்து விந்தியாடவியிற் பிரவேசித்துச் செல்லுங்கால், அசுரதச்சனான மயனது புதல்வரிருவர் ஒருவரோடொருவர் ஓயாது மற்போர் புரிவதைக் கண்ணுற்றான். 'இவ்வாறு நீங்கள் ஒருவருமறியா வண்ணம் ஏன் ஏகாந்தமான விடத்தில் ஒருவரோடொருவர் இடையறாது போர் புரியாநின்றீர்' எனப் புத்திரகன் அவர்களை வினவியபோழ்து அவர்கள் 'நாங்கள் மயனது புத்திரர்; இதோவிருக்கும் மூன்று பொருள்களையும் பற்றி மல்லாடாநின்றோம்' என்றனர். புத்திரகன் அவண் ஓர் பாத்திரம், மாத்திரைக்கோல், பாதுகையாகிய மூன்று பொருள்களிருப்பதை

நோக்கி 'நீங்கள் இவ்வற்பமான பொருள்களின் பொருட்டோ உயிரை வெறுத்துப் போராடா நின்றீர்கள்' எனச் செப்பலும், அவர்கள், புத்திரகனை நோக்கி 'நீர் இப்பொருள்களது அருமையை யறியீர், ஆதலின் இவ்வாறுரையாநின்றீர். இப்பாத்திரத்தை யொருவன் கைக்கொண்டு எவ்வித ஆகாரத்தை யிச்சிக்கின்றானோ அவ்வித ஆகாரம் உடனே இதனுள்விளைந்து நிற்கும்; இப்பாதுகையை ஒருவன் காலிலணிந்துகொண்டு ஏதேனுமோரிடத்திற்குப்போக உத்தேசிப்பானாயின் உடனே ஆகாசகமனமாய் அவ்விடத்தைக் கடிதிற் கிட்டுவன்; இக்கோலைக்கொண்டு நிலத்திலெதனையெழுதினும் அஃது உடனே கண்கூடாகச் சித்திக்கும்' என்றனர். அப்பொருள்களது இரகசியமான மகத்துவத்தை யுணர்ந்துகொண்ட புத்திரகன் அவர்களை நோக்கி 'ஆயின் ஒன்று செய்மின். அதோ தோன்றும் அக்குறியை உங்களுள் எவன் முதற்கண் ஓடித் தொட வல்லனோ அவனே இம்மூன்று பொருட்கும் பாத்திரமாவான்' என்று ஓர் தந்திர வசனங் கூறினன். இவர்கள் இவனது கபடச் சிந்தையை யோராது அவன் சுட்டிக்காட்டிய குறியை நாடி மிக வேகமாக வோட வாரம்பித்தனர். அவர் தூரத்தே யோடுவதைக் கண்ட புத்திரகன் அவணிருந்த பாதுகையைக் காலிற் பூட்டிக்கொண்டு மற்றிரு பொருள்களையும் கையிலிடுக்கிக்கொண்டு ஆகாயவீதி வழி நெடுந்தூரஞ் சென்று ஆகர்ஷிகை யென்ற வோர் நகர் தென்படலும் அதன் கண்ணிறங்கினன். அந்நகருள் தாசிகள் வீட்டிலேனும் வணிகர் வீட்டிலேனும் பிரவேசிக்கின் கைப்பொருள் பறிமுதலாய் விடுமெனக்கருதி, ஓர் பாழ்மனை தோன்ற, புத்திரகன் அவ்வீட்டினுட் புகுந்தான். அவண் ஓர் கிழவி யிருந்தாள்.

அவளவனை மிகவுமுபசாரத்தோடு வரவேற்றாள். புத்திரகன் அவள் மனம் மிகமகிழ, வேண்டிய நிதியை யவட்குதவினான். பாட்டியார் புத்திரகனை மிக வாதரவோடு தக்கபோஜனாதிகளை யுதவி பரிபாலனஞ் செய்துவந்தாள். இவ்வாறாகச் சில தினங்கள் புத்திரகன் அந்நகரில் மறைவாய் வசித்து வந்தான்.

புத்திரகனும் பாடலியும்

இவ்வாறு காலஞ்செல்லாநிற்புழி யோர் நாள் பாட்டியார் புத்திரகனை நோக்கி 'என் கண்மணியே, நீ தக்க யௌவனமும் ஓவியத்தெழுதவொண்ணா வனப்பும்[26] வாய்ந்திருக்கின்றாய். உன் அழகுக்கும் குணத்திற்குமிசைந்த வடிவழகியைப்பற்றி யுன்னிடம் பேசவேண்டும். இவ்வூரரசனுக்கு ஊர்வசியினும்[27] மிக்க தேசுலாவண்ணியமுடைய குமாரத்தி அவனதரிய தவத்தாலுதித்தனள். அரசன் அவளை மிக வினயத்துடன் வளர்த்துவாராநின்றான். கன்னிகாமாடத்தில் மிகக்காவலோடு வளரா

[26] ஓவியத்தெழுத வொண்ணா வனப்பு=சித்திரத்தாற் சித்திரிக்க முடியாத பேரழகு.

கம்பர் ஸ்ரீராமபிரானை,

'ஓவியத்தெழுதவொண்ணாவுருவத்தாய்'

எனக் கூறியுளார்.

[27] ஊர்வசி=இவள் மிக வனப்பினள், தேவகணிகையருள் ஒருத்தி. இவளது பெயர்ப்பொருள் தொடையழகி.

இவள் புரூருவச் சக்கரவர்த்திக்குக் காதலியாக வமைந்ததையும், பின்னர் தனது காதலுக்குக் காண்டீப னிணங்காமையால் அவனை நபுஞ்சகனாகும்படி சபித்தவரலாறுதிகளையும் பாரதத்திலுணர்க. வசிட்ட முனிவனுக்கு ஊர்வசியே தாய்.

நின்றாள். அவளது நாமம் 'பாடலி' யெனக் கூறிக் காதலை யூட்டினள். இம்மாற்றம் செவிவழி புத்திரகனது நெஞ்சத்துட் புகவே அவன்காமஞ்சான்ற அவ்விளையாள்வயின் ஏமஞ்சாலாவிடும்பை எய்தினன்.[28] காமத்தீயால் மீதூரப்பட்ட அவ் இளைஞன் அன்றிரவே தனது பாதுகையைக் காலிற் பூட்டிக்கொண்டு அம் மடமாது கண்வளரும் உப்பரிக்கையை யடைந்து அவளருகே சென்றான். அவள் அயர்ந்து நித்திரை புரியினும் அவளது வடிவழகு அவனது கண்வழியுட்சென்று அவனது மனத்தை யடிமைப்படுத்தியது. அவளை நித்திராபங்கஞ்செய்வது தகுதியோ வென வையுற்று அவன் மனந்தடுமாறு நிற்புழி, ஒவ்வொரு ஜாமத்திற்குந் தக்க கானங்களைப் பாடும்படி ஏற்பட்ட யாமிகருள் அந்த ஜாமத்திற்குரிய யாமிகன் மிகவும் சிங்காரரசம்[29] ததும்பக் 'காளைப்பருவத்தார் தம் காதலிகளை எழுப்பியின் புறுவதே சாலவழகிதாம்' எனும் பொருடோன்றப் பாடினன். உடனே புத்திரகன் நித்திரை புரியும் பாடலியைத் தனது தோள்கள் இறுக ஆலிங்கனஞ் செய்தான். அவள் திடுக்கிட்டு விழித்தெழலும் தன்னை யொப்புயர்வில்லா வடிவழகன் இறுகப் புல்லுவதைக்கண்டு 'இஃது தெய்வம் நமக்குச் செய்த பேருதவி'

[28] காமஞ்சான்ற இளையாள்வயின் ஏமஞ்சாலா விடும்பை யெய்தினன் = பெண்ணலங் கனிந்துநின்ற அம்மெல்லியல் மாட்டு அவளையன்றி வேறு மருந்தாற் றீரமாட்டாத துன்பநோயைக் கொண்டனன். ஏமம் = காப்பு, புகலிடம்

[29] சிங்காரரசம் = காமச்சுவை. வடநூலார் ஒன்பதுவகை ரசங்களுளவென்ப. தொல்காப்பியர் சுவை எண்வகைத் தெனக்கூறினர். பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியலில் சுவையினது இலக்கணத்தைக்காண்க.

யென மனமுவந்து அவனை இன்புற நோக்கிப் பின்னர் இருவரும் ஏகபோகமாயினர். நான்காம் ஜாமம் விட்டிடுதலும் புத்திரகன் தனது பாதுகையை யணிந்து தனது இடிந்த மனைக்கு வந்து கண் வளர்ந்தான். இவ்வாறாகச் சில தினங்கள் இருவரும் இரவில் ஒருவருமறியாவண்ணம் ரமித்து வந்தனர். பின்னர் காவலாளர் பாடலிபால் புணர்ச்சிக் குறிகள் தோன்றுவதை நோக்கி அரசனுக்கு இரகசியத்தை வெளியிட்டனர். அவன் மிகவும் தந்திரமாக ஓர் ஸ்திரீயை நியமித்து பாடலி தூங்கும் சயனக் கிரகத்தில் அவளறியாவண்ணம் மறைந்திருந்து இரகசியத்தை யுள்ளவாறு கண்டறிந்து வந்து தனக்கு வெளியிடும்படி ஆக்ஞை செய்தான்.

பாடலிபுத்ர நகரநிர்மாணம்

அவ்வாறு அம்மாது மறைவிருந்த போழ்து புத்திரகனும் பாடலியும் காந்தர்வமாகப் போகித்துப் பின்னிருவரும் அயர்ந்து நித்திரை புரியுங்கால், அவள் ராஜகுமாரனது வஸ்திரத்தில் அடையாளத்திற்காக வோர் அலக்தகத்தை (செங்குழம்பை) யோர் பக்கத்திற் றடவினள். அக்குறியினை யறியாது புத்திரகன் விழித்தெழுந்து தனது கிரகத்திற்கு வந்து விட்டான். மறுநாள் விடிந்த பின் அரசனது சேவகர்கள் வீடுவீடாய்ச் சென்று ஆராயுங்காலை அவ் அலக்தகக் குறியால் அவனைக் கண்டுபிடித்து அரசன் முன்னர் கொண்டுவந்து விட்டனர். அரசன் அவனை வெகுண்டு நோக்கிப் பேசவே புத்திரகன் தனது பாதுகையின் வலியால் உடனே யவ்விடத்தை விட்டு மறைந்து பாடலியது உப்பரிக்கை வந்து சேர்ந்து நேர்ந்த விபத்தை யவட்கெடுத்துக் காட்டி, அவளையுடன்கொண்டு ஆகாச வீதிவழியாக அந்நக

ரத்தை விட்டு நெடுந்தூரஞ் சென்றான். பின்னர் இருவரும் களைப்பெய்திக் கங்கைக் கரையிலிறங்கினர். மிக்க பசி நோய் அவர்களை வாட்டா நிற்கவே, புத்திரகன் சித்திவாய்ந்த தனது பாத்திரத்தை யெடுத்து, அக்காலத்திற் புசித்தற்கு மிகவுசிதமான ஆகாரத்தை மனத்தால் உத்தேசித்தான். உடனே யவன் காமித்த போஜனம் அப்பாத்திரத்துட் கடிதில் அமைந்து தோன்றிற்று. இவ்வற்புதத்தைக் கண்ட பாடலி தனது காதலன்பால் மற்றுமடங்கா மோகங் கொண்டாள். தமக்குக் கிடைத்த போஜனத்தை இருவரும் மிகவுருசியுடன் புசித்து கங்காஜலத்தைப் பானம் பண்ணித் தமது களை தீர்ந்தனர்.

பின்னர் புத்திரகன் தனது மாத்திரைக்கோலால் நிலத்தில் 'சதுரங்க பலத்தோடும் இவ்விடத்தில் தெய்வீகமாக வோர் நகர் அமைக' வென வெழுதினன். மாயையின் வலியால் உடனே அதியற்புதமான வோர் நகர் தேர், யானை, இவுளி, காலாள் ஆகிய நால்வகைத் தானையோடும் தோற்றுவாய் செய்தது. அந்நகரத்தைப் புத்திரகன் பாடலியோடும் அரசாண்டு வந்தான்.

இவ்வாறு பாடலிக்காகப் புத்திரகனால் நிர்மாணஞ் செய்யப்பட்டவந்நகரம் அவ்விருவர் பெயராலும் பாடலிபுத்ரமென உலகெங்கும் பிரசித்திபெற்றது.

பின்னர் புத்திரகன் பாடலியின் தந்தையாகிய மகேந்திரவர்மனை தன்னருகே வரவழைத்துத் தக்காங்கு உபசரித்து வெகுமதி செய்து அவனைத் தன் கீழரசனாக வாக்கிக்கொண்டான்.

தெய்வீக சக்தியால் நிர்மாணஞ் செய்யப்பட்ட நகராதலின்

இந்நகருள் இலக்ஷ்மியும் சரஸ்வதியும் சதா குடிகொண்டு சகலர்க்கும் பொருட்செல்வத்தையும் செவிச்செல்வத்தையுங் கொடுத்தாதரிக்காநின்றனர்,

என வருஷர் பாடலிபுத்ர நகரத்தின் வரலாற்றை எங்கட்கு விளக்கமுற வெடுத்துரைத்தார். நிற்க.

நான்காம் தரங்கம்

வரருசி உபகோசையை மணம்புரிகை

நாங்களிவ்வாறு வருஷரிடம் வித்யையைப் பயின்று வருங்கால் வருஷாவருஷம் இந்திரனுக்குத் திருவிழாக் கொண்டாடுவதுபோல், ஓர் வருஷம் இந்திரனுக்கு உற்சவம் நடந்து வராநிற்புழி, திவ்விய சௌந்தரியம் வாய்ந்த வோர் கன்னிகையை நான் தெய்வாதீனமாய்க் காண நேர்ந்தது. அவளும் என்னை அன்போடும் நோக்கினள். 'காகத் திருகண்ணிற்கு ஒன்றே மணிகலந்தாங்கு' [30] யாங்கள் உடலிரண்டாய் மனமொன்றான வோர் அரிய பிராணியாயினோம். எனது நெஞ்சத்தைத் தன் வயிற்படுத்திய வப்பெண்கனி உபவருஷரது புதல்வி. அவள் பெயர் உபகோசை. எனது மனம் உப

[30] 'காகத்திரு கண்ணிற் கொன்றே மணிகலந்தாங்
கிருவர் ஆகத்துள் ஓருயிர் கண்டனம்யாம்' என்பது திருக்கோவையாருட் கண்டது. இஃது, காதலாலொத்த தலைவன் தலைவிகளின்மாட்டு உடலிரண்டேயாயினும் உயிரொன்றே யிருப்பதுபோற் றோன்று மதிசயத்தைத் தோழி கண்டு தன்னுள் மகிழுந் துறை.

கோசையின் மாட்டு தாரணை [31] கொண்டதால் வேறொன்றுஞ் செய்தற்கியலாது, மனதிற் பதிவுற்ற வவளது உருவமே தியான மாக, வோர் தனியிடத்தில் யோகநித்திரை [32] புரியாநின்றேன். அப்போழ்து அதியற்புதமான வோர் சொற்பனம் எனக்குத் தோன்றிற்று. அதில் வெள்ளைக்கலையுடுத்த வோர் அணங்கு தரிசனமாகி என்னை நோக்கி 'உபகோசை பூர்வம் உனது மனைவியே. அவள் உன்னையன்றி வேறொருவரையும் மனத்தாற் காமியாள். அவள் உனக்கே கடிதில் மனைவியாவள். நானே வுன்னை விட்டோர்போழ்தும் பிரியாது உடனுறையும் சரஸ்வதி. [33] நீ துக்கமுறுவதை எவ்வாறு சகிக்க வல்லேன்! ஆதலின் உறுதிகூறி யுனது மனக்கவலையை யொழித்தற்காக விவ்வாறு பிரசன்னமாயினேன்' எனச் செப்பி உருக்கரந்தாள். நித்திரை நீங்கிய பின்னர், நான், உபகோசையது கிரகத்திற் கயலே

---

[31] தாரணை யென்பது அட்டாங்க யோகத்தின் ஓர் கூறு. மனம் அசையாது ஓர் பொருளின்கண் பூட்டப்பட்டிருப்பதென்பது பொருள். தமிழ்க்கண் இஃது பொறையெனப்படும். 'மனத்தினை யொரு வழி நிறுப்பதுபொறையே' என்பது பழஞ்சூத்திரம். இதன்பின் நிகழ்வது ஞானதிருஷ்டியாகிய தியானம்; அதன்பின் கை கூடுவது சமாதி.

[32] யோக நித்திரை யென்பது அறிதுயிலாகிய தூங்காத்தூக்கம். விண்டு பாற்கடல் நாப்பண் ஆலிலைமேல் அறிதுயில்கொள்வர்.

[33] சரஸ்வதி எப்போழ்தும் எவரிடத்தும் கூடவே யுறையும் தெய்வீக சக்தி. இவள் நீர் மயமாய் அறிவாகிய தீயோடு கலந்துநின்று அதனை விடாது தூண்டிக்கொண்டிருக்கும் வாக்கு. இதுவே காயத்திரியிற் கூறப்படும் சவிதா. இஃது ஒருவனைவிட்டு நீங்குமாயின் பிரக்ஞை தொலையும். சரஸ்வதி யெனும் பதப்பொருளை நோக்குக.

இவளே தமிழில் நாமகளெனக் கூறப்படுவள்.

நிழல் பயந்துநின்ற மாமரத்தடியில், விரகத்தோடே நின்றேன். அப்பொழுது உபகோசையிடமிருந்து ஓர் சகி தனிநின்ற வென்னைக் குறுகி உபகோசை என்மீது அடங்காவிரகம் பூண்டிருப்பதாக மொழிந்தாள். இம்மாற்றம் எனது காதலை முன்னினும் ஓர் மடங்கதிகமாகத் தூண்டிற்று. நான் அவ்வுயிர்ப் பாங்கியை நோக்கி 'குரவர்களது அனுமதியின்றி யான் ஒன்செய வல்லேன். வேண்டுமாயின் நீ யவளது தாய்தந்தையர்க்குச் சமயமறிந்து தெரிவித்துக் காரியத்தை முடிவிக்கப் பார்' என விடையளித்துத் தோழியை உபகோசையிடம் திரும்ப வனுப்பிவிட்டேன். இதனை யவள் உபகோசைக் கறிவித்தாள். உபகோசை தனது தாபத்தைத் தனது அன்னைக்கு வெளியிட்டாள். அவள் இதனை உபவருஷருக்கெடுத்துக் கூறினள். பின்னர் எங்களது விரகம் எமது ஆசிரியராகிய வருஷருக்கும் எட்டிற்று. உடனே பெரியவர்கள் ஒன்றுகூடி விவாக முகூர்த்தத்தை நிச்சயஞ் செய்துகொண்டு வியாடியைக் கௌசாம்பி நகர்க்கனுப்பி எனது தாயாராகிய வசுதத்தையைப் பாடலிபுத்ரத்திற்கு வரவழைத்தனர். உடனே சுப முகூர்த்தத்தில் வேதவிதிப்படி கனல்சான்றாக[34] உபகோசையை எனக்குப் பாணிக்கிரஹணஞ் செய்வித்தார்கள். உபிரோவியம் போன்ற உபகோசையது இளநலத்தைத் தேவாமுதத்தைப் பருகுவதுபோல் மனம் பூரிக்கவுண்டு களித்து வந்தேன். காமச்

[34] கனல் சான்றாக = அக்னி சாக்ஷியாக. அக்னிதான் சகல தேவர்களுக்கும் முகமாக விருப்பவன். அவனது சொரூபம் சத்தியம். சத்தியஞ் செய்வோர் தீபத்தைப்பற்றி சத்தியஞ் செய்வது வழக்கமன்றோ! பதினெண் புராணங்களுள் அக்கினிதேவனுக்கோர் புராணமுளது.

சுவையும் கல்விச்சுவையும் என்னிடம் ஓங்கி வளர்ந்தன. நிற்க.

பாணினி வரலாறு

வியாடி இந்திரதத்தர் வரருசியாகிய நாங்களேயன்றி, மற்றும் பல மாணவகர்கள் வித்தியாநிதி படைத்த உபவருஷரை யடைந்து கலைகளை யோதிவந்தனர். இம்மாணுக்கருள் பாணினி[35] யென்பவ ரொருவர். இவருக்குப் புத்தி மிக மந்தமாயிருந்தது. ஆயினும் ஆசிரியர்க்குத் தொண்டு புரிவதில் மிக விநயமுடையவர். இவருக்கு வித்தை வறுமையை நோக்கி வருஷாது பத்னி மிகப் பரிவெய்தி யவரை நோக்கி 'நீ ஹிமாசலத்தை யடைந்து இந்துசேகரனாகிய மகேஸ்வரனைநோக்கித் தவஞ்செய்து அவனது அனுக்கிரகத்தால் பூரண பாண்டித்துவத்தை எளிதே பெறக்கடவாய்' என வாக்ஞாபித்து அவரைத் தவஞ்செய்வதற்காக வனத்திற்கனுப்பினள். அவளது வாக்கை சிரமேற்கொண்டு பாணினியார் கானகஞ் சென்று உமாமகேஸ்வரனை நோக்கி யருந்தவஞ் செய்தலும், சிவபெருமான் பிரசன்னமாகி யவருக்கு சர்வவித்தியாமுக

[35] பாணினி : இவர் பணின் எனும் வமிசத்துதித்தவரென்ப. இவர் காந்தாரதேசத்திலோர் நகராகிய சாலதூரமென்பதனை விட்டு நீங்கி வித்தை பயிலுதற்காகப் பாடலிபுத்ரம் வந்து வருஷரிடம்தொண்டு பூண்டனர்போலும். தாம் பிறந்த பதியால் சாலதூரிய னெனப்படுவர். இவர் பிதா தேவலன், தாய் தாக்ஷி. ஆதலின் தாக்ஷேயனெனும் நாமமும் இவர்க்குளது. இவர் தவஞ்செய்து மகேஸ்வரனிடமிருந்து வாக்கின் தந்திரத்தைப் பதினன்கு சூத்திரமாகப் பெற்று தேவபாஷையின் உள்ளீட்டைக் கண்டு தெய்வீகமாகிய பாணினீயமெனும் வியாகரணத்தைக் கண்டார்.

னித்தபோழ்து, அவள் அவனை நோக்கி ‘ கணவன் தேசாந்தரம் போனவட்கு அக்கணவனுல் யாது சுகம் ? நடுவழியில் நாமேன் ஊர்வசைக்காளாய்ப் பேரைக் கெடுத்துக்கொள்ள வேண்டும் ; நீர் வசந்த உத்சவத்தில் முதல்நாளிரவில் ஒருவருமறியாது முதல் ஜாமத்தில் எனது கிரகத்தை யடையும். மனோரதம் நிறைவேறும் ’ என வவனையோர் படைத்த மொழியால் [39] ஏய்த்துவிட்டு சுரேலென வீட்டைநோக்கிச் செல்வாளாயினள். ஆயினும் வீட்டை யடையுமுன் ஓரிடத்தில் புரோகிதன் குறுக்கிட்டு வம்புபண்ண எத்தனிக்கையில் அவனுக்குமவ்வாறே போக்குக் காட்டி முன், மந்திரி குமாரனுக்குக் குறிப்பிட்ட அற்றையிரவின் இரண்டாம் ஜாமத்தில் தன் வீட்டுக்கு வந்து மனோரதத்தை நிறைவேற்றலாமென வீணைசைக் காட்டி யவனை யொதுக்கி விட்டுக் கடிதாக வீட்டை நோக்கிச் செல்லாநின்றாள். ஆயினும் மற்றுமோர் இடையூறு நேரிட்டது ; நடுவழியில் தண்டாதிபன் குறுக்கிட்டு அக்கிரமத்திற் கெத்தனித்த போழ்து அவனையும் மருட்டி அற்றையிரவின் மூன்றும் யாமத்திற் றன்னைவந்து கிட்டும்படி போக்குக் காட்டிவிட்டு மனம் மிகவும் நொந்து தனது இல்லத்தை யடைந்தாள்.

தனது கணவனது பிரிவாற்றாமையாகிய நோய் மனத்தை யோர்பக்கம் புண்படுத்த, துஷ்டர்களது கொண்டாட்டத்திற்குப் பதிவிரதை யென் செய்வாள் ! உபகோசை துக்கத்தைத் தாங்க லாற்றாதவளாய்த் தனது சகியைநோக்கி ‘புருஷன் தேசாந்தரஞ் செல்ல நேரின் கற்புடைய மாது மரணமுறுவதே நலம் ; துக்கத்தை யடக்கிக் கற்பைப் பழுதுறாவண்ணம் பெண்டிர் காப்

[39] படைத்தமொழி = பொய்வார்த்தை.

பாற்ற முயல்வது எவ்வளவு கஷ்டம் பாராய்! யாது செய்வது? மற்றுஞ்சிறிது இத்தேகத்தைக் கணவன்பொருட்டுத் தாங்கி நிற்பல். தெய்வம் துணை செய்யவேண்டும். பிராமணர்களைப் பூஜித்து க்ஷேமத்தைப் பெறக்கூடும். ஆதலின் நீ ஹிரண்யகுப்தனிடம் சென்று பிராமண பூஜையின்பொருட்டு சிறிது திரவியம் பெற்றுவருதி' யெனச் செப்பித் தனது தோழியை இரத்ன வியாபாரியிடமனுப்பினாள். பாதகத்திற் கஞ்சாத அந்தத் துரோகி உபகோசையை யடைந்து 'நீ யுனது வடிவழகோடு மன்மதலீலை செய்ய எனக்கிடங் கொடுப்பையாயின், உனது கணவன் ஒருவருமறியாவண்ணம் என்வசமொப்புவித்த தனத்தை யுனக்குத் தருவேன். இல்லையாயின் தரேன்' எனக் கபடஞ் செய்தான். செட்டி மோசஞ்செய்ய எத்தனித்ததைக் கண்ட உபகோசை அவனது சொற்கிணங்கினவள் போல் நடித்து, முன்னமே மூன்று துட்டர்களையும் எவ்விரவிற் றன்னிடம் வரும்படி ஏற்பாடு செய்திருந்தனளோ அவ்விரவின் நான்காம் ஜாமத்தில் அவனையுந் தன்னிடம் வந்து போகந் துய்க்கும்படி யிணக்கங் காட்டினள். செட்டி உட்சூதை யறியாது மனமகிழ்ச்சியோடும் வீட்டுக்குத் திரும்பிச் சென்றான்.

பாவத்திற்கஞ்சாது தன்னைப் பெண்டாளக் கருதிய நான்கு துட்டர்களையும் இவ்வாறு போக்குக்காட்டிப் பொய்யாசை யூட்டிவைத்த உபகோசை, அவர்களை யூர்சிரிக்க வவமானஞ் செய்ய வுன்னித் தனது சகிகளை யழைத்து ஓர் கொப்பரையில், தைலமும் கத்தூரியும் மையுங் கலந்து நான்கு துண்டு வஸ்திரங்களை யதனிற் றோய்த்தெடுத்து வைத்திருக்கும்படி

ஏற்பாடு செய்து வெளித்தாழ் போடக்கூடிய வோர் பேழையை சித்தப்படுத்தினாள். குறிப்பிட்ட தினம் வரவே அற்றை யிரவின் முதல் யாமத்தில் மந்திரி குமாரன் பரபரப்பா யொரு வருமறியாது வீரமாதாகிய உபகோசையது கிரகத்தை யடைந்தான். உபகோசை அவ் அறிவிலியை நோக்கி 'நீர் அசுசியாக வென்னைத் தீண்டத் தகாது; உட்சென்று அப்பியங்கனம் செய்து வருதிர்' எனச் சொல்லவே மூடசிரோமணி யுட்சென்றான். சகிகள் அவனது ஆடையாபரணங்களைக் களைந்துகொண்டு நான்கு கரித்துணிகளி லொன்றை யிடுப்பிற் கட்டிக்கொள்ள வுதவி கருந்தைலத்தை யவன் சென்னியிற்றேய்த்துத் தாளம் போடவாரம்பித்தனர். இவ்வாறு பணிவிடை நடந்துவருகையில் இரண்டாம் ஜாமம் கிட்டியதால் புரோகிதன் காலந்தாழ்க்காது வந்து கதவைத் தட்டினான். இச்சத்தம் மந்திரிகுமாரனது செவியில் விழுந்து அவன் திகிலுறவே, அத்தோழிகள் 'ஐயோ வருசியது சிநேகிதரொருவர் கதவைத்தட்டாநின்றனர். என்ன மோசம்! நீர் ஒருவருமறியாவண்ணம் இப்பேழையுட் புகுந்து கொள்ளும், அவர் போனபின் ஸ்நானாதிகளை முடிக்கலா' மென விரகசியமாகச் செப்பிப் பயமுறுத்தி யவனைப் [40] பேழைக்குட் புகுத்தி வெளித்தாழை யிறுகப் போட்டனர். புரோகிதனுக்கும் தண்டாதிபனுக்கும் அவரவர் முறையில் இவ்வாறே மரியாதைகளாயின. மூவரும் பேழையுள் ஒருவரையொருவர் இடித்துக்கொண்டு நெருங்கி யிருப்பினும் நாணத்தாலும் பயத்தாலும் நாவெழாதும் ஒருவரையொருவ ரின்னாரென்பதைத் தெரிந்துகொள்ளாதும் பல்லைக் கடித்துக்கொண்டு மௌனமா

[40] பேழை=பெட்டி.

கத் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கும்படி நேர்ந்தது நான்காம் ஜாமத்தில் வந்த ஹிரண்யகுப்தனுக்கு யாது கதி நேர்ந்ததெனின், உபகோசை யவனையும் முன்னை மூவரையும் உள்ளே யனுப்பியவண்ணம் அனுப்பி அவனது ஆடை ஆபரணங்களைக் களைந்து கரித்துணி யுதவிப் பாங்கிகள் தைலமிட்டுத் தாளம் போடுங்காலை, வீரபத்னி யவனைக் கிட்டித் தனது கணவன் அவனிட மொப்புவித்த தனத்தைத் தனக்குத் திரும்பக் கொடுப்பதாக வாக்குத்தத்தஞ்செய்யும்படி குறை யிரப்ப, அக்கபடி. சம்மதிக்கவே, யவள் 'நீர் இந்தப் பேழை யறிய நிதியைக் கொடுப்பதாக வாக்களிப்பின் சாலும்' எனலும், சூதை யறியாத வாணிபன் 'நான் இந்தப் பேழையறிய வாருசி யென்னிட மொப்புவித்த நிதியை உனக்குக் கொடுப்பேனாக' வெனச் சத்தியம் செய்தான். இவ்வாறு நிகழ்கையில் பொழுது விடிய வாரம்பித்தலும், பாங்கியர் 'இனி நீர் இங்கிருத்தல் அழகிதன்று, சீக்கிரம் இவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடியும்' எனச் செப்பி யவனை வீட்டைவிட்டு துரத்திவிட்டார்கள். கரித் துணியைக் கௌபீனமாகக் கட்டிக்கொண்டு கருங்குழம்பால் தேகாதி முழுமையும் வெகு விகாரமாகத் தோன்றிய யவனது உருவத்தைக் கண்டு ஊர்நாய்கள் பலவும் அவன்மேற் பாய்ந்து அவனை யோடவோடத் துரத்திக் கடித்தன. வழியில் மிக்க அவமானத்தையும் கஷ்டத்தையும் அனுபவித்து ஹிரண்ய குப்தன் தனது இல்லம் வந்து சேர்ந்து தனது பணிவிடைக் காரர்களால் அழுக்குப்போக ஸ்நானஞ் செய்விக்கப் பெற்றுத் தலையை வெளிக்காட்டாது வீட்டினுள் ளிருந்தான்.

தனது நிறையை யழிக்கக் கருதிய நால்வரையும் இவ்

வாறு சிக்ஷை செய்த உபகோசை, யவர்களது அயோக்கியத்தை அரசனுக்குத் தெரிவிக்க வெண்ணங் கொண்டவளாய், அந்நகர்க் கரசனான நந்தனது அவைக்களத்தை யடைந்து 'ஹிரண்யகுப்தன், எனது கணவ னொப்புவித்த தனத்தைக் கவர்ந்து கொண்டு தான் ஓர் தனமும் பெறவில்லை யெனச் சாதிக்கின்றான், அவனை வரவழைத்து எனது கணவன் என்னைப் பாது காப்பதற்காக நம்பி யவனிட மொப்புவித்த நிதியை எனக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டு' மென விண்ணப்பஞ் செய்து கொண்டாள். நந்தபூபதி சேவகர்களை யனுப்பி ஹிரண்யகுப்தனைக் கடிதிற் றன்னிடம் கொண்டுவரும்படி ஆக்ஞாபிக்க வவர் அவ்வாறே ஹிரண்யகுப்தனை நியாய சபைக்கு இட்டுக் கொண்டு வந்தனர். அரசன் அவனை அவ்விஷயத்தைப்பற்றி உசாவியபோழ்து அபகார சிந்தையனான அவ்வியாபாரி தான் ஓர் பொருளையும் வரருசியிடமிருந்து பெறவில்லை யெனச் சாதித்தான். அப்போழ்து உபகோசை 'இவர் ஒப்புவித்த தனத்தை எனக்குத் திரும்பக் கொடுத்து விடுவதாக வெனக்கு வாக்களித்திருக்கிறார். அதற்குச் சாக்ஷியாக வோர் பேழையுமுளது' எனக்கூறினள். அரசனதிசயித்து அப்பெரும் பெட்டியைக் காவலாளர்களால் நியாய சபைக்கு எடுத்து வரும்படி செய்தான். அப்போழ்து கற்பிற்கரசியாகிய உபகோசை, மிகச் சாதுரியமும் படைத்தவளாதலின், அப்பெட்டியை நோக்கி 'பேழையுள்ளிருக்கும் தேவதைகாள், இவஹிரணயகுபதன தனணடம கணவன் ஒப்புவித்த தனத்தை என்னிடம் திரும்பக் கொடுப்பதாக நீங்களறிய என்னிடம் உறுதிமொழி கூறினனல்லனோ? நீங்கள் மெய்யை வாய்திறந்து செப்பாது மௌனஞ் சாதிப்பிரா

யின் உங்களை இச்சபைக்கண் மானபங்கஞ் செய்வேன்'என்றாள். உடனே அப்பேழையுள்ளிருந்து மூன்று குரல்கள் 'உபகோசை சொல்வது சத்தியம் சத்தியம் சத்தியம்' எனக் கேட்டன. அரசன் வியப்புற்றான்; ஹிரண்ணியகுப்தன் நடுக்குற்றான். பேழையைத் திறத்தலும் அதனுட் பதிவிருந்த துட்டர் மூவரும் மூன்று கரும்பூதங்கள் புறப்பட்டாங்கு பெட்டியிலிருந்து வெளிப்பட்டனர். அரசனும் சபையாரும் சூதை யறிந்து கொண்டார்கள். பின்னர் உபகோசை அந்நால்வரது தீய வொழுக்கத்தையும் சவிஸ்தாரமாக அரசனுக்கு அறிக்கையிட்டாள். அரசன் அவளை மிக்க கொண்டாடி அந்நால்வரையும் தக்கபடி சிக்ஷைசெய்து உபகோசைக்குச் சேரவேண்டிய நிதியைச் செட்டியிடமிருந்து இறுத்துக் கொடுத்தான். உபகோசையைத் தனது தங்கையாகப் பாவகஞ்செய்து மரியாதைப் படுத்தினான். அவளது கற்பும் அறிவும் நாடெங்கும் புகழ் பெற்றுப்பரவ வாரம்பித்தது. அவளைத் தெய்வமாகக் கொண்டாடாதா ரொருவருமிலர். நிற்க.

வரருசி

தவம் முடித்து ஆசிரியரை யடைதல்

நான் சம்புவை நோக்கி இடையறாத்தவம் பயின்றதால் மகேஶ்வரன் எனக்குப் பிரத்தியக்ஷமானார். உடனே யவரிடமிருந்து பூரண பாண்டித்துவத்தைப் பெற்றேன். என்றாற் பாணினீயம் விளக்கம் பெற்றது. அஃது என்றாற் பூரண முற்றது

[41] வரருசி பாணினீயத்தை நன்குணர்தற் கின்றியமையாத வார்த்திகத்தை யியற்றி பாணினீயத்தைப் பூரணஞ்செய்தார். அதன்

சிவபெருமானது அருளைப்பெற்றபின் நான் ஹிமாசலத்தைவிட்டு நீங்கிக் கூடிய சீக்கிரத்தில் பாடலிபுத்ரத்தை யடைந்தேன். உபகோசையது செயல்களைக் கேட்டு அவளது கற்பின் பெருமையையும் புத்திக்கூர்மையையும் கொண்டாடி யவளோடு மகிழ்வுற்றேன்.

பின்னர் எனதாசிரியராகிய வருஷரிடஞ் சென்று நான் பெற்றுவந்த புதிய வியாகரணத்தை யவர்க்குபதேசித்தேன். குமாரக்கடவுள் அவரது அறிவைப் பிரகாசிப்பித்தார்.[42] பயில வேண்டிய கலைகளெல்லாம் சம்பூரணமாகிவிட்டபடியால் வியாடியும் இந்திரதத்தரும் யானும் வருஷக்குரிய குருதக்ஷிணையைச் சமர்ப்பிப்பதற்காக வவரை உத்தரவு கேட்டோம். அவர் கோடிபொன் குருதக்ஷிணையாகக் கேட்டார்.

அவ்வளவு பெருந்தொகைக் கென்செய்வதென நாங்கள் வாட்டமுறு நிற்கையில் நந்தனிடம் யாசகங்கேட்டு அப்பெருந்தொகையை எளிதே பெறலாமென வெமக்குத் தோன்றிற்று. ஏனெனில் அவனிடமொன்று குறைய நூறு கோடி திரவிய முண்டெனத் தெரியவந்தது. அன்றியும் அவன் உபகோசையைச் சகோதரிகாபாவஞ் செய்திருந்தானன்றே!

பின்னர் மற்றும் விரிந்த விளக்கமாகிய மகா பாஷ்யத்தைப் பதஞ்சலி பகவான் அனுக்கிரகித்தார்.

[42] வியாகரணம் சர்வவித்தியாமுகம், மோக்ஷத்திற்கும் வாயில். குமாரக்கடவுள் ஞானபண்டிதனுய் முக்திநிலையைக் காட்டும் அழியா இளமையனுன தெய்வம். கந்தழிச்செல்வத்தை யளிக்கும் பரமகுரு வென்பதனைத் திருமுருகாற்றுப்படையா னுணர்க.

எழுத்தாகிய சரஸ்வதியைக் காட்டும் பரமகுரவன் அறுமுகப் பெருமானென்பதனைப் பின்வரும் சர்வவர்மன் சரிதத்தாலும் தெளிக.

யோகநந்தன் வரலாறு

அப்பொழுது நந்தன் அயோத்தி நகர்ப்புறத்தே[43] விஜயம் செய்துகொண்டிருந்தான். நாங்கள் மூவரும் குருதக்ஷிணைக்குரிய பொன்னையவனிடம் யாசிக்க வுத்தேசங்கொண்டு அவண்சென்றோம். "கைக்கெட்டியது வாய்க் கெட்டாமற் போவதுபோல்" நாங்கள் அவனைக் கிட்டி யாசிக்கு முன்னர் வினைவலியால் அவ்வரசன் உடல் நீத்தான். இன்னது செய்வதெனத் தோற்றாது மூவரும் திகைத்தோம். அப்பொழுது எங்களுள் இந்திரதத்தருக்கு ஓர் சூழ்ச்சி மனக்கண் தோன்றிற்று. அவர் யோகசித்தி கைவந்தவர். அவர் எங்களை நோக்கி 'யான் எனது யோக மாயாசக்தியால் எனது கூட்டைவிட்டுப் பிரிந்து இறந்து கிடக்கும் நந்தனது சரீரத்திற் பரகாயப் பிரவேசஞ்செய்து அத்தேகத்தை உயிர்ப்பிக்கின்றேன். உங்களுள் வாருசி யத்தருணம் என்னைவந்து குருதக்ஷிணைக்காக யாசிக்கட்டும். வியாடி எனது தேகத்தைச் சிறிது நேரம் பாதுகாத்துக்கொண் டிருக்கட்டு' மெனச் செப்பினர். இத்தந்திரம் எங்கட்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றிற்று. இவ் இரகசியச் செய்கையை நடத்த வெண்ணங்கொண்டு மூவரும் ஜனங்கள் மிக நாடாத வோர் பாழ்ங்கோயிலை யடைந்தோம். இந்திரத்தர் தமது யோகவலியால் தமது ஹம்சத்தை[43]த் தமது தேகத்தினின்றும் வெளியேற்றி இறந்து

---

[43] நந்தன் மகதநாட்டை யாண்டபோழ்து அயோத்தி நாடும் ஜயிக்கப்பட்டு மகதநாட்டோடு கூடியிருந்தது.

[43] ஹம்சம் என்பது வாசி. இஃது கீழும் மேலுமாயும் வலசாரி இடசாரியாகவும் நின்று பிறண்டுகொண்டிருக்கும். வாசியை யறிந்த

கிடக்கும் நந்தனது உடலுட் பாய்ந்து அதனை யுயிர்ப்பித்து விளங்கினர். நந்தபூபதி குபீரென உயிர்பெற்றெழுந்ததை நோக்கி யாவரும் அதிசயமுற்றனர். வியாடி தனது சகோதரனது தேகத்தைப் பாழ்ங்கோயிலிற் பாதுகாத்துக்கொண்டு நிற்ப, யான் யோகநந்தனை [44]க் கிட்டி குருதக்ஷிணையைச் சமர்ப்பிப்பதற்காக ஒருகோடி பொன் எனக்கீயும்படியாக வினயமாக யாசித்தேன். உடனே யோகநந்தன் சகடாலனெனும் மந்திரியைக் கூப்பிட்டு 'குருதக்ஷிணைக்காக இந்தப் பிராமணர் என்னை ஒருகோடி பொன் யாசகங் கேட்கிறார், தடை நோராது உடனே ஒருகோடி பொன்னையும் தானமாக வவருக்குச் செலுத்துக, வென ஆக்ஞையிட்டான். புத்திக் கூர்மையனான சகடாலனோ, பணத்தை யவ்வாறே செலுத்தி விடுவதாகச் சொல்லிக் காலஹரணஞ் செய்தான். ஏனெனில் நந்தன் திடீரென வுயிர்த்தெழுந்ததே யோர் வியப்பு; அக்கணமே யோர் பிராமணன் அவனிடம் அளவிறந்த தொகையைத் தானங் கேட்டது அதனினும் வியப்பு; அத்தகைய பெருந்தொகையை நந்தன் ஓர் சிறிதும் பெரிதெனை மதியாது கடிதிற் செலுத்தும்படி யுத்தரவளித்தது அதனினும் வியப்பென மந்திரிக்குத் தோன்றி, அவன் எங்களது சூதை யூகத்தாற் கண்டுகொண்டான். தானவன் பிராண தந்திரங் கைவந்தவன். அவன் பரகாயப் பிரவேச முதலாகிய சித்திகளை யெல்லாஞ் செய்ய வல்லவன்.

---

[44] **யோகநந்தன் :** இந்திரதத்தன் யோகவலியால் தனதுடலினின்று நீங்கி இறந்து கிடந்த நந்தனது தேகத்துட் புகுந்து அதனை யுயிர்ப்பித்தபின் நந்தனுனையினும் பூர்வ நந்தனல்லன். பூர்வ நந்தனை நிஜநந்த னென்றும் புதியவனை யோகநந்த னென்றுங் கொள்க.

மாக வாக்களித்த திரவியத்தை செலுத்தாது சகடாலன் வீணே நேரம் போக்குவதைப்பற்றி யான் யோகநந்தனிடம் முறையிட்டபோழ்து, அவன் சகடாலனே யழைத்துக் காரணங் கேட்டலும்,அவன்,தாங்கள் 'தெய்வாதீனமாய் உயிர்த்தெழுந்த அற்புதத்தை நோக்கி யாவரும் பரவசப்பட்டு ஆனந்த முறுவ தால் பண்டார அதிகாரிகளும் தத்தந் தொழிலே மறந்து தங்க ளது நற்பாக்கியத்தைப்பற்றியே பேசாநின்றனர். ஆதலின் தங்களது உத்தரவின்படி பணம் கடிதிற் செலுத்தப்படவில்லை. கூடிய சீக்கிரத்தில் உத்தரவு நிறைவேறும்' எனத் தந்திரமாக விடையளித்தான். பணத்தைச் செலுத்தாது இவ்வாறு நேரத் தைக் கடத்திக்கொண்டே சகடாலன் யோகநந்தனும் நானும் அறியாவண்ணம் இரகசியமாகக் காவலாளரை யழைத்து இவ்வூரில் எங்கெங்கு பிணங்கள் காணப்படுமோ அவற்றை யெல்லாம் உடனே பொசுக்கிச் சாம்பராக்குக' வெனவாக் ஞைபிட்டான். அவனது உத்தரவின்படி காவலாளர் எங் கணும் சோதனை செய்தபோழ்து பாழ்ங்கோவிலில் இந்திரதத் தாது தேகத்தை வியாடி காத்துக்கொண்டிருப்பதை யவர்கள் கண்டுபிடித்து அவர் என்ன தடுத்துங் கேளாது அந்தப்பிரா மண தேகத்தைக் கொளுத்திச் சாம்பராக்கினர். வியாடி அரச னது அவைகளத்திற் கழுது கொண் டோடி வந்து 'ஏ நந்த பூபதி, உமது காவலாளர் அநியாயமாகத் தூங்கிக்கொண் டிருந்த வோர் பிராமணனே சுட்டெரித்து விட்டார்கள்' என முறையிட்டார். யோகநந்தனுக்குச் சகடாலன்பால் அடங்கா வெகுளி யுண்டாயிற்று, ஆயினும் அதனே யடக்கிக்கொண்டு தானே பொக்கிஷத்தைத் திறந்து ஒரு கோடிபொன்னேயும்

வியாடியிடங் கொடுத்து குருதக்ஷிணையைச் செலுத்தும்படி சொல்லித்தனக்கு பிராமணத்துவம் நீங்கிச் சூத்திரத்துவம்[45] வந்தடைந்ததைப்பற்றி வியாடியோடு மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான்.

வியாடி ஏகாந்தத்தில் யோகநந்தனைக் கிட்டி 'சகடாலன் மகா தந்திரசாலி; உன்னைக் கொல்வதற்காகப் பல்வகைச்சூழ்ச்சி செய்யாநின்றான். ஆதலின் அவனது மோசத்திற்காளாகாத படி நீ பாடலிபுத்ரம் சென்றதும் சகடாலனைச் சிறையிற்போட்டு விட்டு வரருசியை யுனக்கு மந்திரியாக்கிக்கொள். வரருசி யுனக்குத் துணைநிற்கும் வரையும் உன்னையோர் பொல்லாங்கும் அணுகா'தென வுறுதி கூறிவிட்டு வியாடி வருஷருக்குக் குரு தக்ஷிணையைச் சமர்ப்பித்தற்பொருட்டு செலவு பெற்றுச் சென்றார்.

வரருசி யோகநந்தனுக்கு மந்திரியாதல்

பின்னர் யோகநந்தன் தனது பரிவாரங்களோடு பாடலி புத்ரத்தை யடைந்தான். உடனே தண்டமாக்களைக் கூவி சகடா

---

[45] பூர்வநந்தன் அரசனுயினும் க்ஷத்திரியனல்லன் போலும். இந்திரதத்தனுக்கு அறிவு மாறுதிருந்தும் தான் புகுந்த தேகத்திற்குரிய சூத்திரவொழுக்கமே யவனை நடாத்திற்று. ஒவ்வொரு தேகமும் தான் மொண்டு வந்த வினைவழி தன்னுட் குடியிருக்கும் அறிவனை ஆட்டுவிக்கு மென்பதனைத் தெளிக.

இவ்வாறே ஜடபரதர் ஞானங்குன்றுது மான்பிறப்பெடுக்க நேர்ந்தபோழ்து மானுகவே யொழுகும்படியாயிற்று.

சுத்த அறிவிற்கும் ஜாதி கிடையாது. ஜாதியேற்பட்டது தேகத்தைப்பற்றியே.

லனையும் அவனது புத்திரர் நூற்றுவரையும் சிறைப்படுத்தி, யவர்களை ஓர் இருட்கிடங்கில் அடைத்துவிட்டு என்னைத் தனக்கு முதன்மந்திரியாக்கிக் கொண்டான்.[46] இருட்டறையி லடைபட்ட சகடாலனாதியோர்க்குப் பிரதிதினம் ஓர் கிண்ணம் மாவும் சிறிது ஜலமும் ஆகாரமாகக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். இவ்வற்ப வுண்டி ஏக மனுஷனது உயிரைக் காப்பாற்றுதற்கும் போதுமானதன்று. அதனைக்கொண்டு நூற்றொருவர் எவ்வாறுயிர்தாங்கி நிற்கமாட்டுவர்?

சிறைச்சாலையில் சகடலானது புத்திரர் நூற்றுவரும் மரணமுறுகை

பசி தாகங்களைத் தாங்கமாட்டாது சகடாலனும் அவனது புத்திரரும் தம்முட் சிந்திப்பாராயினர், 'பிரதிதினமும் நமக்குக் கிட்டாநின்ற இவ்வற்ப வாகாரத்தைக்கொண்டு நாம் அனைவரும் பிராணனைத் தாங்கமுடியாது. நம்முள் எவரேனும் ஒருவனே அதனைப் புசிக்கட்டும். மற்றை நூற்றுவரும் பிராணனை விட்டுவிடுவோம். அவன் நமது பழியை யோகநந்தனிடம் வாங்கவல்ல சமர்த்தனாக இருக்கவேண்டும்.' இவ்வாறு சங்கற்பஞ் செய்துகொண்டு அவர்கள் தங்கள் பிதாவாகிய சகடாலனையே சத்துருவைச் சமயம் பார்த்துப் பழி வாங்கும்

---

[46] முத்திராராக்ஷசம் என்னும் நாடகத்திற் கூறப்படும் சரிதத்திற்கும் இதற்கும் மிக்க வேறுபாடுளது. அதன்படி சிறையுற்றவர் மௌரியனும் அவனது புதல்வராய சந்திரகுப்தன் முதலிய நூற்றுவரும். மந்திரியாயது ராக்ஷசன். இவண் ராக்ஷசன் வரருசிக்கு நண்பனாகிய வோர் பெரும்பூதம்.

படி நியமித்து அவ்நூற்றுவரும் தமது வல்லுயிரை மாய்த்துக் கொண்டனர். வீரர் சத்துரு நாசத்தைத் தமதுயிரினும் பெரி தாக மதிப்பரன்றோ ! நிற்க

வியாடியின் துறவு

வருஷரிடம் குருதக்ஷிணையைச் செலுத்தச் சென்றிருந்த வியாடி, யவ்வாறு செய்து குருவை மகிழ்வித்துவிட்டுத் திரும்ப பவும் யோகநந்தனிடம் வந்தார். நீங்காச் சூத்திரத்துவம் தன்னைப் பீடித்ததைப்பற்றி யோகநந்தன் தனது பிராதாவோடு துக்கித்துப் பின்னர் ராஜபோகத்தைத் தன்னோடு கூடவிருந்து யனுபவிக்கும்படி தனது சகோதரரை வேண்டிக்கொண்டான். வியாடியோ வதற்கிணங்காது யோகநந்தனை நோக்கி 'க்ஷண நேரத்தில் ஒன்று மற்றுப்போகும் பெற்றியதான சரீரத்திடத் தும் சாரமற்ற சம்சார சாகரத்தும் அறிஞன் எவன்தான் குருட்டுத்தனமாய் முழுகுவன் !

'பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம்'[47]

[47] பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக் கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதை குணமாகமே
தீர்த்தாய் * * * *
* * * * * *

என்பது திருவாசகம்.

வெய்யிலின் கொடுமையால் மலர்நிறைந்த தடாகம்போற் றோன் றும் பொய்த்தோற்றமாகிய கானலை, இஃது நன்மை பயக்கவல்ல மெய்யான மலர்ப்பொய்கை யெனக் கருதி யதனை நாடிச்சென்று வீணே தவிப்பதை யொத்த பேதமை தன்னை யுள்ளவா வுணர்ந்த

தன்னறிவைப் பெற்றனை மயக்கவல்லதாமோ வெனப் பல கடைப்பிடியான வுறுதிகளை எடுத்துக்காட்டி பிராமணத்துவம் நீங்கிய அறிவனை விட்டுச் செலவுபெற்றுப் பிறப்பறுக்கும் பெற்றியாராய்த் தவமுடிக்கக் கானகஞ் சென்றார்.

நான் மந்திரித் தானத்திருந்து ராஜகாரியங்களைச் சரிவர நடத்தி வந்தேன்.

ஐந்தாம் தரங்கம்

வரருசி சகடாலனைச் சிறைமீட்டல்

இவ்வாறு ராஜ்யபாரம் நடைபெற்று வருங்கால் யோகநந்தன் நாளுக்கு நாள் பெண்டிரது மோகவலைக்குட் சிக்குண்டான். எதிர்பாராது கிடைத்த ராஜபோகத்தால் உன்மத்தனாகிக் கட்டுக்கடங்கா மதயானை போன்றான்.[48] அவனைச்

அறிஞனை வாதிக்க வல்லதோ? பேதமை யென்பது இவண் அசத்தாகிய ஜகத்தை சத்தென நினைத்து பிறப்பதற்கேயாளாகி யிறத்தல். ஜகம் அசத்தென்பதனைத் தாயுமானசுவாமிகள் நன்கு விளக்கியதனை யோர்க—

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னால் நாட்டிய வகில மாயை
கான்முயற் கொம்பே யென்கோ கானலம் புயலே யென்கோ!
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்பல் வேண்டும்!

[48] பிராமணனும் நல்வழிக்கண் ஒழுகிவந்த இந்திரதத்தன் பிராமண வுடலத்தை நீக்கி நந்தனது சரீரத்துட் புகுந்தபின் அவன் அத்தேகம் உடன்கொண்டு வந்த வினைவழியே மென்மேலு மொழுகும்படி நேர்ந்தது. சுதந்தரமான அறிவிருந்தும் அஃது ஆத்மலாபத்தை நாடாது புகுந்த தேகத்திற்கியைந்த நாடகத்தையே வாட வாரம்பித்

சாதுரியமாக வடக்கிச் சரியான வழிக்கண் செலுத்துவதில் யான் அங்குசம்போலொழுக வேண்டியதாயிற்று. எனது சக்தியை இவ்வாறு அரசனை யடக்கிக்கொண்டு வருதற்கண்ணேயே செலவிடின் யான் எவ்வாறு ஆத்மலாபத்தை யடையலாமெனுங் கவலை என்னுள் ளெழாநின்றது. எனது காலமெல்லாம் ராஜதந்திரத்திலேயே செலவழிக்கப்படின் அதன் முடிவில் எனக்கென்ன கதி விளையுமோ வெனுந் திகிலெழுந்ததால் அவ் அச்சத்தை மிகத் தணித்து ஆத்மலாபத்திற்கு வழியை யுண்டாக்கக் கருதிச் சகடாலனையும் இரண்டாம் மந்திரியாக வாக்கிக்கொள்வது மிக நலமெனக் கண்டேன். சகடாலன் எனக்குத் துணைமந்திரியாக வமையின் ராஜ்யபாரம் அவனாலும் தாங்கப்பட்டு என்னை யதிகமாகக் கீழழுத்தாதன்றே! அன்றியும் யான் முதன் மந்திரியா யிருப்பதால் என்னை யறியாது சகடாலன் அரசனுக்கு வஞ்சகத்தாற் றீங்கிழைக்க முடியா தென்பதனையும் நன்குணர்ந்தேன். இவ்வாறு இவ்வுறுதியை மனத்துட்கொண்டு தக்க சமயமறிந்து அரசனைக் கிட்டிச் சகடாலனது பெருமையை யெடுத்துரைத்து நந்தனைத் திருப்திசெய்து அவனது அனுமதியால் சகடா

தது. இவ்வாறே சங்கராச்சாரிய சுவாமிகள் காமதந்திரத்தை யுணர்தற்காக வோர் அரசனது தேகத்துட் பரகாயப் பிரவேசஞ்செய்தகாலை ராஜபோகத்தும் சிற்றின்பத் துறைக்கண்ணும் மூழ்கி தம்மை ஒரோவழி மறக்கலானார்.

திருமூலராகிய சிவயோகியோ மூலனெனும் இடையனது உடலத்துட் கூடுவிட்டுக் கூடுபாய்ந்தாராயினும் அதன் வயமா யொழுகாது அதனையே சிவராஜயோக பாட்டைக் கண் செலுத்திய சதுர்த்தர்,

லனைச் சிறைக்கூடத்திருந்து மீட்டித் துணைமந்திரியாக வாக்கிக்கொண்டேன். ஆயினும் அவன் அரசனுக்குத் தீங்கிழைக்கா வண்ணம் அவனது செயல்களை யுற்றுநோக்கி வந்தேன். நான் கொண்ட வெண்ணப்படி ராஜ்யபாரம் செவ்வனே நடந்துவரா நின்றது.

ஐந்துவிரலும் இரண்டுவிரலும்

(அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை)

நாங்கள் இருவேமும் யோகநந்தனுக்கு மந்திரியாயிருந்து அரசனது செங்கோலை [49] நடாத்தி வருங்கால், ஓர் தினம் யோகநந்தன் வேட்டையாடித் திரும்புங்காலை கங்கையின் மத்தியில் ஐந்து விரல்களையும் உயரக் காட்டிக்கொண்டு ஓர் பஞ்சா (ஹஸ்தம்) தோன்றுவதைக் கண்டான். அதன் பொருள் இன்னதென விளங்காது அரசன் என்னைக் கூப்பிட்டு அதனை யெனக்குக் காண்பித்தான். யான் அதனது குறிப்பை யறிந்து கொண்டு எனது விரல்களில் இரண்டை ஒன்றுசேர்த்து அக்குறியின் முன் நீட்டினேன்; உடனே அவ்விரல்களைந்தும் உள் வாங்கிமறைந்தன. அரசன் ஆச்சரியமுற்று என்னை நோக்கலும் யான் அவனை நோக்கிப் 'பஞ்சாவின் தோற்றம் ஐவரால் ஆகாதது ஒன்றுமில்லை [50] யென்பதை யுணர்த்திற்' றென்றும், யான்

---

[49] செங்கோல் = ஓர் பக்கமும் வளையாது நேரிதாகச் சென்ற கோல். பக்ஷபாதமில்லாது நடக்கும் அரசாட்சி செங்கோலெனப்படும். வலியரென்றும் மெலியரென்றுங் கருதாது நீதியை நெறிவழுவாது நடாத்துதல் செங்கோல்.

[50] பாண்டவர் ஐவரால் மஹாபாரதம் முடிந்ததன்றே!

இரண்டு விரல்களை யொன்றுகூட்டி அதனெதிர் நீட்டியபோழ்து பஞ்சா மறைவுற்ற இரகசியம் ஐவர் எற்றிற்கு! இருவர் ஏக சித்தமாக வொன்றுகூடி நிற்பின் அசாத்தியமான தோன்றுமின்[51] றென்பதனை யுணர்த்திற் றென்றுங்கூறி யரசனை மகிழ்வித் தேன். எனதறிவின் நுண்மையையும் மகத்துவத்தையுங் கண்டு கொண்ட சகடாலன் தன்னறிவால் என்னை வெல்ல முடியா தென்பதையோர்ந்து மனஞ்சோர்ந்து என்னிடம் பய பக்தியை வகித்தான்.

செத்த மீன் சிரித்தவிந்தை

மற்றோர் நாள் ஓர் விப்பிரன் யோகநந்தனது மாளிகையின் மேல்மாடியில் ஓர் ஸ்திரி நிற்பதைக் கீணின்று அண்ணாந்து நோக்குவதை யோகநந்தன் கண்ணுற்று, அந்தப் பிராமணனை அவனது அக்கிரமத்திற்காகச் சிரச்சேதஞ் செய்யும்படி ஆக்ஞை செய்தலும், தண்டஞ்செய்வோர் அவனைக் கடைவீதி வழியாகக் கொலைக்களத்திற் கிழுத்துக்கொண்டு செல்லுகை யில், கடைத்தெருவில் விற்பனைக்காகக் கொண்டுவந்திருந்த செத்த மீன்களிலொன்று அவர்களைப்பார்த்துக்கெக்கெக்கெனச் சிரித்தது. இவ்விந்தையைக் கொலையாளிகள் அரசனிடஞ் சென்று அறிக்கை செய்தபோழ்து, யோகநந்தன் அந்தணனுக் கிட்ட மரணதண்டனையை நிறுத்திவைத்து, என்னை யழைத்து

---

[51] ஐவராகிய பாண்டவர் ஒருவாறு ஒற்றுமையுடையராயினும் சிறிது மனம் வேறுபட்டவர். இராமலக்ஷ்மணராகிய இருவரோ மாறாது ஒன்றுகூடி மூன்றரைக்கோடி யாயுள்பெற்ற லங்கேசனை முடிவு கண்டனர்.

அவ் ஆச்சரியத்தின் இரகசியப்பொருளைத் தனக்கு விளக்கும் படி வேண்டிக்கொண்டான்.

நான் அவ்விரகசியத்தைத் துலக்குதற்காக வரசனிடம் சிறிது ஆவகாசத்தைப் பெற்றுக்கொண்டுபோய் தனியிடத் திற் றியானத்திலமர்ந்து நின்றேன். உடனே ஜகம் மறைந்து சொற்பனந்தோன்ற அதனுள் நாமகள்[52] (சரஸ்வதி) பிரத்தி யக்ஷமாகி ஓர் பனையைச் சுட்டிக்காட்டி 'நீ யின்றிரவு இவ்விரு க்ஷத்தின் மறைவிலிருந்து இரகசியத்தைத் தெரிந்துகொள்தி' யென வுறுதிகூறி அந்தர்தானமாயினள். கலைமகள் எனக்கு வற்புறுத்திய வண்ணம் அற்றையிரவு அப் பனை மரத்தை யணுகி அதன் மறைவிலிருந்து நான் விந்தையை நாடி நோக்கங் கொண்ட போழ்து ஓர் ராக்ஷசி தனது குழந்தைகள் தன்னைப் புடைசூழ அவ்விடத்திருப்பதைக் கண்டேன். அக்குழந்தை கள் அவளை ஆகாரத்திற்காக மிகவும் தொந்தரித்தன. அவள் அவர்களை நோக்கி 'குழந்தைகாள்! சிறிது பொறுத்திருங்கள் ; உங்கட்கு ஓர் பிராமணனது மாம்சத்தைக் கொண்டுவந்து தரு கிறேன். இன்னமவனைக் கொல்லவில்லை. சற்றே பொறுத்திருங் கள், என்றாள். அதற்கவர்கள் 'ஏன் அந்தப் பிராமணனை இன் னங் கொல்லவில்லை யம்மா'வென்று கேட்டார்கள். அதற்கவள் ' ஓர் செத்த மீன் சிரித்தது, அதுபற்றி யவனைக் கொல்லாது தாழ்க்கின்றார்க' ளென்றாள். பின்னரும் அக்குழந்தைகள் தமது தாயை நோக்கி 'ஏனம்மா செத்தமீன் சிரித்தது ?' என்று கேட்டார்கள். அதற்கவள் ' அந்தப்புரத்தில் மகளிரெல்லாம்

---

[52] நாமகள், கலைமகள், நாவின் கிழத்தி, வாணி, சரஸ்வதி என் பன வொருபொருட் கிளவி. சிந்தாதேவியென்றுங் கூறப்படுவள்.

நடைகோணினர். புருஷரோ பெண்டிர் வேடம்பூண்டு அந்தட் புரத்தில் சுயேச்சையாய் வதியாநின்றனர். பெண் வேடம்பூண்டு நின்றவோர் ஆடவனை மற்றோர் ஆடவன் பார்த்ததைக்குற்ற மாகக்கொண்டு அரசன் மரணதண்டனை விதித்த விபரீதத்தைக் கண்டு செத்த மீனும் விந்தைகொண்டு நகைத்தது' என்றாள். இவ்வாறு வெளிப்படுக்கப்பட்ட விரகசியத்தை யான் உணர்ந்து வீடுவந்து சேர்ந்து யோகநந்தனைக்கண்டு நடந்த விந்தையை யவனுக்கு வெளியிட்டேன். மெய்யை யுள்ளவாறு காண்பதற் காக அரசன் அந்தப்புரத் திருந்தாரைச் சோதனை செய்வித்த போழ்து சேடியரென வெளிக்குத் தோன்றிய ஆட்களெல்லாம் புருஷராகவே காணப்பட்டார்கள். அரசன் என்னை யொரு வாறு மெச்சி அநியாயமாக மரண தண்டனைக்கு ஆளாகிநின்ற ஏழைப்பார்ப்பானை இக்கட்டு நின்றும் நீக்கிவிட்டான்.

ஓர் விசித்திர சித்திரம்

பின்னர் ஓர் சமயம் படமெழுதுவதில் மிகக் கைதேர்ந்த சிற்பி யொருவன் அரசனைக் கண்டான். அரசன் தனது தேவி யின் படத்தைச் சித்திரிக்க அவனுக்கு அநுமதி கொடுத்தான். அவ்வாறே அவ்வினைஞன் அவ்வுருவத்தை வரைந்து அரச னிடம் அப்படத்தைக் காட்டியபோழ்து அவ்வோவியம்[53] தனது பட்ட மகிஷியே யுயிரோடும் அசைவின்றி மௌன மாகத் தன்னெதிர் நிற்பதுபோற் றோன்றிற்று. அரசன் மிகவும் மனமகிழ்ந்து சிற்பிக்குத் தக்கபடி வெகுமதி யளித்துத் திருப்தி செய்வித்தான். உயிரோவியம் போன்ற அவ்வற்புத

[53] ஓவியம் = சித்திரம்; எழுதிய படம்.

மான படத்தை யோகநந்தன் அந்தப்புரத்தில் ஓர் சுவரிற் றெங்கவிட்டிருந்தான். நான் அவண் போக நேர்ந்தபோது அப்படத்தை நோக்கும்படி சம்பவித்தது. அதனை யுற்று நோக்கியபோழ்து அஃது பட்டமகிஷியின் சாயையாய்க் காணப்படினும் ஓர் லக்ஷணத்தில் அஃது அரசனது தேவி யினுருவத்திற் கிணங்கவில்லையென யோக திருஷ்டியாற் கண்டு அக்குற்றத்தை நீக்குதற்காக எழுதுகோலில் மையைத் தோய்த்து ஓர் மருவை யிடுப்போரத்தில் பொட்டிட்டதுபோ லமைத்தேன். அரசன் அவணுற்றகாலை அச்சித்திரத்தின் இரக சியத் தானத்தில் மருவமைந்திருப்பதைக் கண்டு 'என்னையன்றி எனது தேவியின் இரகசியத்தானத்திருக்கும் குறிகளை எவர் காணவல்லார்'ரென வெகுண்டு 'இச்செயல் எவர' தென வுசாவி னன். அவணுள்ளார் 'ஆடவருள் வாருசியைத்தவிர வேறொருவ ரும் அந்தப்புரத்திற்கு வர அதிகாரங்கிடையாது. வேறொரு வரு மிவண் வந்தில'ரென விடைகூறி அரசனுக்கு என்பேரில் ஐயத்தை விளைவித்தனர்.

வரருசி கரந்துறைதல்

அரசனுக்கென்பேரில் அடங்காச் சீற்றமுண்டாகவே அவன் சகடாலனை யழைத்து என்னைச் சிரச்சேதஞ்செய்யும்படி யவனுக்குக் கட்டளையிட்டான். சகடாலனோ இன்னது செய்வ தெனத் தோன்றாது என்னைக் கொல்ல மனமும் துணியாது என்னைத் தனது வீட்டிற் கழைத்துக்கொண்டுபோய் சிறிது காலம் மறைந்துறையும்படி வேண்டிக்கொண்டு அரசனுக்குப் போக்குக் காட்டுவதற்காக வேறொருவனைக் கொல்வித்து அவனைச் சாந்தப்படுத்தினன்.

இராக்ஷதன் வரலாறு

நான் ஓர்நாள் சகடாலனை விளித்து 'நீ என்னை யெத்திறத்தாலும் கொல்ல வொண்ணாதென மனவுறுதி கொண்டாயன்றோ? நீயே மந்திரி,[54] ஏனெனில் நீ என்னை யுள்ளவா கொல்லத் துணிந்தாலும் என்னைக் கொல்ல வுன்னால் சாத்தியப்படாது. யான் ஓர் இராக்ஷதனால் காக்கப்பட்டிருக்கிறேன். அவ்விராக்கதன் இவ்வுலகத்தை வேண்டுமானாலும் விழுங்கவல்ல பேராற்றலை யுடையோன். நீ மிக்க நிபுணன்' என்றேன்.

உடனே சகடாலன் என்பால் முன்னினும் மிக்க பயபக்தியைக் கொண்டான். நான் அவனை நோக்கி மிக விரகசியமாக யோகநந்தனது வரலாற்றை யவனுக்கு விளக்க வெண்ணங்கொண்டு 'இந்திரதத்தன்தான் யொகநந்தனானான். நீ யவனை மாற்சரியங்கொண்டு கொல்லற்க' வென வேண்டிக்கொண்டேன். அவன் எனது சொல்லை அங்கீகரித்தவன்போற் றோன்றினான்.

பின்னர் சகடாலன் என்னை மிகவும் பிரார்த்தித்துத் தனக்கவ்விராக்கதனைத் தரிசனஞ் செய்து வைக்கும்படி கேட்டுக் கொண்டான். அவனது வேண்டுகோளுக்கிரங்கி நான் சிறிது நேரம் மனத்தைத் தாரணை செய்து தியானத்தி லமர்ந்தேன். உடனே சகடாலனுக்கு இராக்ஷதன் பிரத்தியக்ஷ மானான். இராக்ஷதனைத் தரிசித்தபின் சகடாலன் எனக்கெவ்வாறு இரா

[54] நீயே மந்திரியெனும் சொற்பொருத்த முடையாய்; நீயே மறைவை யூகத்தாலுள்ளவா கண்டனை.

க்ஷுதனது சிநேகமும் காப்பும் ஏற்பட்டதென்பதை விளக்கும் படி இரந்து கேட்டான்.

நானவனை நோக்கி ' யோகநந்தன் அரசுபூண்டகாலை இப் பாடலிபுத்ர நகரை இரவிற் காத்து வரும்படி ஓர் ரக்ஷகனை (காவலாளியை) நியமித்தான். அக்காவலாளன் மறுநாள் காணப்படாதாயினன். உடனே யரசன் மற்றொரு ரக்ஷகனை நியமித்தான். அவனும் விடிந்தபோது மாயமாய்க் காணுமற் போயினன். இவ்வாறு பிரதிதினமும் நேர்வதை நோக்கி யோகநந்த னித னுண்மையைக் கண்டறிந்து கூறும்படி எனக் காக்ஞையிட்டான். நான் அவ்வாறே யோரிரவு காவலைப் பூண்டு வீதிகடோறும் சுற்றி வரலாயினேன். அப்போழ்து இராக்ஷதன் ஓரிடத்திற் றோன்றி யென்னை நோக்கி 'இவ்வூரில் எவள் மிக்க வனப்பினள் ?' எனக் கேட்டான். அம்மாற்றத்தை யேற்றுக்கொண்டு நான் சிறிது புன்முறுவல் செய்து அவனை நோக்கிப் ' பேதாய், அழகென வோர் பொருள் வேறுளதோ ? எதனை மனம் மிகக் காமிக்கின்றதோ அதுவே யம்மனத்திற்கு எவற்றினுஞ் சிறந்த சௌந்தரியமுடையதாகும் ' என்றேன். உடனே அவ்நிசிசரன்[55] என்னை வியந்து நோக்கி ' நான் உன் பால் மிகவும் மகிழ்ச்சியுறுகின்றேன். நானுனக்குச் சிநேக னாயினேன் ; நீ நினைத்த போழ்தில் உன் முன் தோன்றி நீ கோறுங் காரியத்தை முட்டின்றி முடித்துவைப்பேன் " என வெனக்கு வாக்குத்தத்தஞ் செய்தான். அதுமுதல் இராக்ஷதன்

---

55 நிசிசரன் = இரவிற்றிரிவோன், இராக்ஷதன், அரக்கன்.

எனக்கு ஆப்த சகாயனாய் என்னைவிட்டு நீங்காது நின்று காத்துவராநின்றான்' [56] எனக் கூறினேன்.

வரருசிக்குக் கங்கை பிரத்தியக்ஷம்

பின்னர் ஓர் சமயம் கங்காதேவியைத் தியானஞ் செய்தேன். அவ ளென் முன் பிரசன்னமாகித் தோன்றினள். நான் அவளை மிக பயபக்தியோடும் தோத்திரஞ்செய்து மகிழ்வித்தேன்.

இவற்றையெல்லாங் கண்ட சகடாலன் எனது பாதத்தில் வீழ்ந்து தன்னை பிரக்ஷிக்கும்படி வேண்டிக்கொண்டான். இருவரும் பரஸ்பரம் மிக்க வன்பினராயினோம்.

மறைந்துறையவேண்டி யிருந்ததால் என் மனம் புண்பட்டிருப்பதைச் சகடாலன் கண்டு என்னை நோக்கிப் "பரமஞாதாவாகிய வுமக்கு விசனமென்பதேது ? அரசனது புத்திக் குறுக்கத்தை நீர் உணர்வீரன்றே. நீர் கடிதிற் சுத்தியைப்[57] பெறுவீர். ஓர் கதை கூறுவல் கேண்மின்' எனச் சொல்லத் தொடங்கினான்:—

சிவவர்மன் சரிதம்

ஆதித்திய வர்மனெனுமோர் அரசனுக்குச் சிவவர்மன்

---

56 இவ்வாறே வோர் இராக்ஷதன் துரோபதையை விட்டு நீங்காது நின்று கீசகன் அவளைப் பலாத்காரஞ் செய்யாவண்ணம் காத்து வந்தான்.

57 சுத்தியென்பதிவண் பகைநீக்கத்தை யுணர்த்தும், பயமின்மையெனும் பொருளையும் தரும். யோகநந்தனது பகையே வரருசியின் மனத்தை வாதித்து வந்தது.

எனப் பெயரிய வந்தணன் மந்திரியாக விருந்தான். இவ்வந்தணன் அரசனுக் குயிர்போன்ற நண்பன்.

ஏதோ காரணத்தால் அரசன் அந்தப்புரத்தைச் சிலகாலம் நாடாதிருந்தான். அவ்வாறிருப்பவும் அவனது தேவியருள் ஒருத்தி கற்பவதியானாள். இவ்விஷயம் அரசனுக்கெட்டிய காலை யவன் மிக வெகுண்டு 'யான் இரண்டு வருஷ காலமாக வந்தப்புரத்தை நாடாதிருப்பவும் எவ்வாறு அவள் கற்பமுதயமாகு' மெனத் துவாரபாலகரை உறுக்கிக் கேட்டபோழ்து அவர்கள் நடுநடுங்கி 'ஏந்தலே, சிவவர்மரைத்தவிர வேறொருவரும் அந்தப்புரத்தைக் கிட்டினதில்லையே. யாங்கள் என்செய்வ' தென விடை கூறலும் அரசனுக்குத் தனது மந்திரியின் மாட்டுத் துவேஷம் உண்டாயிற்று. அரையன் கபடத்தை யுள்ளடக்கித் தனது மந்திரியாகிய சிவவர்மனை யருகழைத்துத் தன் கீழரசனாகிய போகவர்மனிடஞ் சென்று ஓர் வினையை முடித்துவரும்படி ஆக்ஞையிட்டான். மற்றும், அம்மந்திரி யறியாது வேறோர் தூதுவனை யழைத்து அவன் கையில் 'சிவவர்மன் உன்னிடம் வந்தவுடன் அவனைச் சிரச்சேதஞ் செய்க' வென வெழுதியவோர் ஓலைச்சுருளைக் கொடுத்து 'இதனைக் கடிதிற் கொண்டுபோய் போகவர்மனிடம் சேர்ப்பி' என வாக்ஞையிட்டான். சிவவர்மனும், அவனறியாது தூதனுப்பப்பட்ட வொற்றனும் போகவர்மனது நகரைக் கிட்டுதற்கு ஏழுநாட் சென்றன.

இதன் மத்தியில் அரசன், ஓர்நாள், தனக்கு ஐயத்தை விளைவித்த சூல்கொண்ட மாது ஓர் தோழியைத் துணைக்கூட்டிக்கொண்டு அரண்மனையை விட்டுத்தப்பியோடப்பார்ப்பதைக்

கண்டு இருவரையும் பிடித்துச் சோதித்தபோழ்து தோழி போல் வெளித்தோன்றிய ஆள் பெண்வேடம் பூண்ட ஆடவனாக அறியப்பட்டது. உடனே ராணியின் படிற்றொழுக்கம் அரசனுக்குப் புலப்பட்டுச் சிவவர்மனிடத்து பச்சாதாப[58]முண்டாயிற்று.

இதுநிற்க ; சிவவர்மனையும் இரகசியமாகத் தூதோலை கொண்டுவந்த ஒற்றனையுங் கண்டு விஷயத்தைத் தெரிந்துகொண்ட போகவர்மன் சிவவர்மனைத் தனியிடத்திற் கழைத்துக்கொண்டுபோய் ஆதித்தியவர்மன் செய்த கபடத்தையவற்கு வெளியிட்டான். அதனைக்கேட்ட சிவவர்மன் ஓர் சிறிதும் மனந்தடுமாறாததுபோல் நடித்து அச்சிற்றரசனை நோக்கி 'நீர் காலந்தாழ்க்காது என்னைச் சிரச்சேதஞ் செய்துவிடு' மெனக் கூறினன். போகவர்மன் ஆச்சரியமடைந்து 'நீர் ஏன் மிக வெளிதாகச் சாகத் துணிந்தீ' ரென வுசாவினன். அதற்கம்மந்திரி 'என்னை எவ்விடத்திற் கொல்வார்களோ அத்தேயத்திற் பன்னீராண்டு வற்கடம்[59] உண்டாகு' மென்றான். உடனே போகவர்மன் அச்சமுற்று 'எனது நாட்டைப் பாழாக்கவன்றோ ஆதித்தியவர்மன் கொடிய பிரஹ்ம

---

[58] பச்சாதாபம்=பின் இரக்கம் (பதப்பொருள்) ; ஐயோ வென் செய்தோ மெனவெழும் இரக்கசிந்தனை;பின்புத்தியால் மனம்தவித்தல்.

[59] வற்கடம்=மழை பெய்யாமை, நீரறுகை, க்ஷாமம்.

பெரும்பாதகங்கள் பூமியில் நிகழின் கோள்கள் நிலைதிரிந்து வற்கடம் நிகழும் ; வருணஜபம் பிராயச்சித்தம்.

கோவலவன் அநியாயமாய் வெட்டுண்டதால் பாண்டிநாடடைந்த க்ஷாமத்தைச் சிலப்பதிகாரத்திற் காண்க.

ஹத்தியைப் புரியும்படி எனக்குக் கட்டளையிட்டான்' எனச் சீற்றங்கொண்டான். ஆயினும் வலியான் மேற்செல்லலாகா வெகுளியை மனத்தடக்கிச் சிவவர்மனைத் தனது நாட்டிலிருத்திக்கொள்ளுதற்கு மஞ்சி சிவவர்மனுக்குத் தக்க காப்பமைத்து அவனை வேறோர் தேசத்திற் போய்ச் சஞ்சரிக்கும்படி யனுப்பி விட்டான். பார்த்தீரோ, சிவவர்மன் தனது சமயோசித புத்தியால் தனது பிராணனைக் காப்பாற்றிக்கொண்டு மரணபயந் தீர்ந்தான். உமக்கும் சுத்தி கடிதிலுண்டாகும். இன்னுஞ் சிறிதுகாலம் மறைந்துறைதி'ரென வேண்டிக்கொண்டான்.

அவ்வாறே யவனது கிரஹத்தில் சில நாட்களை யோட்டி வந்தேன்.

சினேக வஞ்சகத்தால்
நந்தகுமாரனுக்குப் பைத்தியம் பிடித்தல்

இவ்வாறு காலஞ்செல்லா நிற்புழி, யோர் நாள் யோகநந்தனது குமாரன் ஹிரண்யகுப்தன் என்பவன் வனத்தில் வேட்டையாடச் சென்றிருந்தான். பொழுது விழுந்து இருள் வந்து கவிந்து கொண்டமையால் அரசகுமாரன் தங்கி இரவைக் கழிக்க வேறு புகலிடமின்றி யோர் மரத்திலேறினான். அப்போழ்தோர் கரடி யோர் சிங்கத்தால் துரத்தப்பட்டுத் தான் அரண்கொண்டிருந்த மரத்தை நோக்கி யோடிவருவதைக் கண்டான். இவன் யாது நேருமோவெனத் திகிலுறுங்கால் அக்கரடியும் தனது உயிரைக் காப்பாற்றுதற்காக அம்மரத்திலேயே ஆரோகணித்தது. அரசிளங்குமரன் இருதலைக் கொள்ளி எறும்புபோல் அச்சமுற்றான். தெய்வீகத்தால் அக்கரடி அவனை நோக்கி 'நீ என்னைப்பற்றி பயப்படாதே;

உன்னை நான் சிங்கத்தினின்றும் பாதுகாப்பேன் ; நீ பயத்தை யொழித்து எனது மடியில் நித்திரை புரி' யெனச் செப்பிற்று. ஹிரண்யகுப்தன் அச்சத்தை விட்டுக் கரடியின் மடியிற் கண் வளர்ந்தான். அப்போழ்து சிங்கம் கரடியை நோக்கி 'நான் உன்னையே நோக்கிப் பக்ஷிக்க வந்தேனாயினும், நீ யப்புருஷனை என்னிடம் தள்ளி விடுவையேல் யான் அவனை பக்ஷித்து உன்னை வாளா விட்டுவிட்டுப்போய்விடுகிறேன்' என்றது. கரடி மிருகேந்திரனை நோக்கி 'அபயமடைந்தவரைக் கைநழுவ விடுவது பெரும் பாதகம்'எனச் செப்பிற்று. பின்னர் பையன் விழித்துக் கொண்டான். அப்போழ்து கரடி யவனை நோக்கி 'எனக்குச் சிறிது நித்திரை வாராநின்றது. யான் உனது மடியிற் றலைவைத்துக் கொஞ்சம் தூங்குகிறேன். நீ ஜாக்கிரதையாயிரு' வெனச் சொல்லி நித்திரைகொண்டது. அப்போழ்து சிங்கம் விழித்திருக்கும் ராஜகுமாரனை நோக்கி 'கரடி தூங்கியெழுமாயின் தனது பசியைத் தீர்க்க வுன்னைத் தின்றுவிடும். கரடியைக்கீழே தள்ளிவிடுவையாயின் உனதுயிரை நீ தப்பிக்கொள்ளலா' மெனக் கூறிற்று. பேதைபன் சிங்கத்தினது துரோக வார்த்தையை உறுதி பயப்பதாகக்கொண்டு கரடியைக் கீழே தள்ள முயன்றான். [60] உடனே நல்வினைப்பயனால் கரடி விழித்

---

[60] பசியென்பது மக்கள்மாட்டும் விலங்குகள் மாட்டும் வயிற்றினிடத்தே யமைந்த தீயாகும். 'அன்னையிட்ட தீ யடிவயிற்றினி' லென்றான்றே! விலங்குகட்குப் பகுத்தறிவின்மையின் பாவபுண்ணியங் கிடையா. மாந்தர்க்கோ அவ்வறிவுண்மையின் அவர்கள் பாவபுண்ணியங்கட்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். 'அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டி' யென்றன ரடிகளும். பசி மூண்டெழின் நல்லாரையும் பாவத்திற்காளாக்கப் பார்க்கும். ஆதலின் பசிப்பிணியின்

தூக்கொண்டு ஓர் கிளையைப்பற்றித் தன்னைக் கீழே விழாமற் காத்துக்கொண்டு நந்தகுமாரனை நோக்கி 'ஏ சிநேகத்துரோகி, நீ பைத்தியங் கொள்ளக்கடவாய்' எனச் சபித்தது. உடனே ஹிரண்யகுப்தனைப் பைத்தியம் பிடித்துக்கொண்டது.

உள்ளீட்டை யறிந்து அதனை யறத்தின்வழி நடாத்துவது மாந்தர்க்குச் சதுர்ப்பாடு.

பசியை யுள்ளவா தெரிந்துகொண்டவன் எல்லாம் வல்ல சிவனு கின்றான். ஆதலின் பசியை யோம்பி வாழ்க. பசியையாற்றுதற்கியன்ற வன்னம் பிரமசொரூபமே. ஆதலின் நமக்குணவாகி அறிவையும் ஆற்றலையும் பயத்தற்கேதுவாகிய அன்னத்தை வழுத்தவேண்டும். பிராண நிலையமான அன்னத்தின்பால் செய்ந்நன்றி மறவற்க.

அன்னத்தைப் புசிப்பதே கண்ணுகவிருக்கும் பசியென்னும் நமது தோழனை யுற்றுநோக்கின் அதுவே உயிராகும். பசிமயமே உயிர். சகல ஜீவராசிகளும் தம்முயிரை யோம்புதற்காக மறதியுற்ற உயிர்கள் பதுங்கிக்கிடக்கும் ஆகாரங்களை யருந்தாநிற்கும்.

இக்கதையில், கரடி தனதுயிரைப் பாதுகாக்க மரத்திலேறிற்று. ஹிரண்யகுப்தன் பயமெய்தினன். கரடி யபயங்கொடுத்தது. ஹிரண்ய குப்தனே பழிபாவங்கட் கஞ்சாது கரடியைச் சிங்கத்திற் குணவூட்டப் பார்த்தான். இவருள் தனது காரியமே கண்ணுயிருந்த சிங்கம் அரு ளின்மையாகிய மறத்தைக் குறிக்கும். கரடியோ அருள்மயமான அறத் தைக் குறிக்கும். ஹிரண்யகுப்தனே புண்ணிய பாவங்களை யறியும் பகுத்தறிவைச் சுயநலங் கருதிக் கைவிட்டுப் பாவியானன். தன் னுயிர்க்கு ஹானிவருங்கொலோவென வேறுயிரைக் கொன்று தன் னைக் காக்கநோக்குதல் அறமாமோ!

'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை'

எனப் பொய்யாமொழியன் கூறினன்.

அவன் வீடுவந்து சேர்ந்தபோழ்து, யோகநந்தன் தனது மகனுக்கு நேர்ந்த இக்கட்டைக் கண்டு சோகக்கடலு ளாழ்ந்தான். மணிமந்திர ஔஷதங்களால்[61] நானுவித வுபாயங்கள் செய்தும் விபரீத புத்தி தொலையவில்லை. அப்போழ்து அரசன் சகடாலனை நோக்கி "ஐயோ இச்சமயம் நமது வாருசி யிருப்பானாயின் எவ்வளவெளிதி லிவ்விக்கட்டு நீங்கும்!" என மிகவும் பச்சாதாபத்தோடு மொழிந்தான். சகடாலன் "இதுவே வாருசிக்கு நற்கால"மென மனத்திலுன்னி மிகவும் பரவசப்பட்டு யோகநந்தனது பாதங்களில் வீழ்ந்து 'அரச, திருவருளால் வாருசி யுயிரோடிருக்கின்றார். அவருக்கும் எனக்கும் அபயங் கொடுக்கவேண்டு' மெனப் பிரார்த்தித்தான். இம் மாற்றம் அரசனது செவியிற் புகவே சோகக்கடலு ளாழ்ந்து கிடந்த வரசன் மனம் ஆனந்த சாகரத்தில் மூழ்க வாரம்பித்தது. உடனே யரசன் "நமது காத்தியாயனைக் கடிதிற் கொணர்தி" யென வாக்ஞையிட்டான். சகடாலன் ஓடோடியும் வந்து என்னை மகிழ்வித்து என்னை யரசனிடம் இட்டுக் கொண்டுபோய் விட்டான். அரசன் என்னை நல்வரவேற்றபின் நான் அவனது வியாகூலத்தைத் தணித்தற்காக நாமகளைச் சிறிதுநேரம் தியானித்தலும் அவள் எனது

[61] மணி யென்பது கண்ணினுள் நோக்கத்திற் கேதுவாயிருக்கும் ஜோதிமணியை யுணர்த்தும்; "காகத் திருகண்ணிற் கொன்றே மணி கலந்தாங்" கென்பதா லுணர்க. சில நோய்கள் பார்வையாற் றீரும்; அவ்வாறு முடியாதாயின் மந்திரத்தாற் றீரும்; அதனுனு முடியாதாயின் மருந்தாற் றீரும். மணிமந்திர ஔஷதங்களாற் றீராதாயின் தெய்வமே தீர்க்கவேண்டும்.

நாவிலெழுந்தருளவே யான் நடந்த விர்த்தாந்தம் அனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கக் கண்டு அவற்றை யெடுத்துரைத்து இளவரசின் பைத்தியம் மித்துருதுரோகத்தால் விளைந்ததெனச் செப்பினேன். கலைமகள் கடாக்ஷத்தால் அவ் இளைஞனது விபரீதபுத்தி மாறி நல்லறிவு தோன்றிற்று. அரசன் மன முவந் தென்னைக் கொண்டாடிப் பின்னர் 'இவ் இரகசியம் உனக்கெவ்வாறு வெட்டவெளிச்சமாயிற்' றெனக் கேட்டான். நான் அவனை நோக்கி 'மறைவாயிருக்கும் இரகசியத்தை அறிஞர் மூன்றுவித பாட்டைகளாலுணரவல்லார். அவை லக்ஷணம், அனுமானம், பிரதிபா[62] வாகிய மூன்றும். பேரறிஞர் எதனையும் தமது ஞானதிருஷ்டியாற் கண்டு கூறக்கூடும். உனது தேவியின் இரகசியத்தானத்திருந்த மச்சத்தை அன்று எவ்வாறு காணாதே கண்டு படத்

---

[62] சாமான்யருக்குப் புலப்படாத விரகசியங்களை அறிஞர் மூன்றுவித மார்க்கங்களா லுணரவல்லர். அவை இலக்ஷணமாகிய வெளிக்குறி அனுமானமாகிய ஊகம், பிரதிபாவாகிய உள்ளுணர்வு. [These may be construed in English as Signs, Inference and Intuition.]

ஒருவனை யேதேனுமோர் விஷம் தீண்டி யவன் அவத்தை யுற நிற்ப 'இஃது இன்ன விஷத்தால் நேர்ந்த'தெனச் செப்புதற்கு வாயில் சாத்திரங் காட்டும் லக்ஷணம்.

புதிதாய் ஆற்றிற் பிரவாகமுறுவதை நோக்கி 'மழை பெய்ததுண்'டெனக் கோடற்கு வாயில் அனுமானம்.

தான் ஓர் விஷயத்தை நேரிற் கண்டறியாதிருப்ப வோர் குறியேனும் ஊகத்திற்கோர் பிடியேனும் கிட்டாதிருப்பவும் அம் மறையை வெளிப்படுப்பதற்கு வாயில் பிரதிபாவாகிய அருளாம்.

தில் மருவை யமைத்தேனே அவ்வாறே உனது மைந்தனுக்குப் பைத்தியம் வந்த காரணத்தை இன்றும் காணாதே கண்டு சொன்னேன். புத்திமான்கட்கு ஒழுக்கத்தின் மிக்க தனமுளதோ[63] வென்றேன். யோகநந்தன் லஜ்ஜையையும் பச்சாதாபத்தையுங்கொண்டு என்னை மிக வுபசரித்து மரணதண்டனையினின்றும் நீக்கினான். நான் அவனிடம் செலவுபெற்று வீடு வந்து சேராநின்றேன்.

வரருசி துக்கசாகரத்திலாழ்ந்து கரையேறல்

நான் எனது கிரகத்திற்கு வந்தபோழ்து எனதுத்தம பத்தினியாகிய உபகோசை யான் மரணதண்டனையுற்று மாண்டு விட்டதாக வெண்ணி அக்னிப்பிரவேசஞ் செய்ததாகவும் என தன்னையாகிய வசுதத்தை ஏகபுத்திரனாகிய நான் அரசனாக்கினை யால் சிரச்சேதமுற்றதாகக் கேள்விப்பட்டு ஹிருதயம் நொந்துடைந்து இறந்துபோய் விட்டதாகவுங் கேள்விப்பட்டேன். எனக்கப்போழ்துண்டான சோகம் அளவிட்டுரைக்கற் பாலதாமோ! மிதமிஞ்சிய துக்கத்தால் மூர்ச்சித்து வீழ்ந்தேன். பின்னர் பிரக்ஞையுற்றெழுந்தேன். உபகோசையாகிய பெண் மணியை யிழந்த உபவருஷர் என்னை நோக்கி 'ஓ காத்தியாயனரே, நீர் ஒன்றுமறியாத பேதையரைப்போல் வீணே துக்கமுறுகின்றீர். இம்மண்ணுலகில் எல்லாம் அநித்தியமன்றி நித்

[63] இவ்வாறு வரருசி கூறியது அரசன் தனது பேரறிவையும் தனது சீலத்தையும் நோக்காது வீண்பழிக்காளாய்த் தன்னை ஐயுற்றுத் தனக்கு மரணதண்டனை விதித்த மௌடீகத்தை யெடுத்துக் காட்டி யதனைக் களைதற்கெண்க.

தியப்பொருளெஃது. ஈசனது மாயப்பிரபாவத்திற் சிக்குண்டு[64] சத்தை நோக்காது வீணே யேன்தவிக்கின்றீர். ஞானக்கண் கொண்டு நோக்கின் துக்கம் எங்கணுளது, எல்லாமாயமன்றோ. பிறர்மனம் தடுமாறின் அவர்க்குறுதி காட்டி யவரை நல்வழிப் படுத்த வல்ல பேரறிஞராகிய நீர் அவ்வுறுதியை நோக்காது அலமருவது இறும்பூதே' யெனவெனக் கறிவைத் தூண்டி விட்டார்.

வரருசி துறவு பூணல்

உடனே யென்மாட்டு தைரியமூற்றெடுப்ப நெஞ்சம் விரக்தி பூண்டது. சாந்தியே பெரும்பேறாகத் தோன்றலும் நான் அதனை நாடி பாடலிபுத்ரத்தைவிட்டு நீங்கிக் காட்டுவழிக் கொண்டு ஓர் தபோவனத்தை யடைந்து சாந்தியே கண்ணாகத் தவஞ்செய்ய லுற்றேன். அவண் நான் உறைதரா நிற்கையில் ஓரந்தணன் அயோத்திமா நகரினின்று அவ்வழியாக வந்தனன். உலகவிஷயம் எட்டாத தானத்திருந்தமையால் அப்பார்ப் பானைக் கேட்பின் லோக விஷயம் புலப்படுமென வெண்ணி பாடலிபுத்ர நகரவிர்த்தாந்தத்தை யவனிட முசாவினேன். அவன் யோகநந்தன் கதியை யுரைக்கலாயினன்—

---

[64] இப்பிரபஞ்சம் ஈசன் விளையாடும் களம். ஜீவர்கள் அவனால் ஆட்டுவிக்கப்படும் மாம்ச பொம்மைகள்; தம்மை மறந்து பரதந்திரரா யிருப்போர்.

'ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யினியேலோ ரெம்பாவாய்'

என்றெழுந்த வாக்கைக் காண்க.

சாணீக்கியனது விரோதத்தால் யோகநந்தன் மரணமுறல்

'வரவர யோகநந்தன் சகடாலனது சூழ்ச்சி வயப்பட்டான். மந்திரியாகிய சகடாலன் யோகநந்தனைக் கொல்லுதற்குகந்த வழியை நாடி நின்றான். இந்நோக்கத்தோடு சகடாலன் காலத்தைத் தள்ளி வருங்கால் ஓர் நாள் ஓர் பிராமணன் ஓரிடத்திலிருந்து நிலத்தை வாளாதோண்டுவதைக் கண்டான். உற்று நோக்கிய போழ்து சாணீக்கியனாகிய அந்த விப்பிரன் ஓர் அறுகம்புல்லை வேரொடுங் களைந்து பொடியாக்கி நீரிற்கலந்து உட்கொள்ளுவதைக் கண்டான். 'ஈதென்ன காரியஞ் செய்கிறு' யென வவனைக் கேட்டபோழ்து, அவன் 'இவ்வறுகு நான் அதற்கோர் ஊறுபாடும் செய்யாதிருப்பவும் என்னை எவ்வளவு கடுமையாய்க் காலிற் றுக்கிற்று! வீணாக வெனக்குத் துன்பமூட்டிய அவ்வறுகம்புல்லை நான் சமூலமாய்க் களைந்து அதற்குச் சர்வ நாசத்தை யுண்டுபண்ணினேன்' என்றான். சாணீக்கியனது மனநிலையை யுணர்ந்த சகடாலன், சிந்திப்பான் 'இந்தப் பிராமணன் யார்மேலாயினும் வைரங்கொள்வானாயின் தனது க்ஷாத்திரத்தை எவ்வழியானும் முற்றுவிப்பன். இதற்கைய மின்று.' இவ்வாறு சிந்தித்து யோகநந்தனது முடிவை யிவனாற் சாதிக்கலாமெனத் துணிவைக்கொண்டு சாணீக்கியனைத் தனது கிரகத்திற் கழைத்துக்கொண்டு சென்றான். சகடாலன் சாணீக்கியனை மிகவும் உபசரித்துப் பின்னர் அவனைநோக்கி 'வருகின்ற திரயோதசி யன்று அரசனது பிதாவிற்குச்சிரார்த்

தம்.[65] உமக்கு அக்கிராசனம்[66] கிடைக்கும்படி செய்கிறேன். லக்ஷம் பொன் தத்தம் கிடைக்கு' மென வவனுக்கு உவகை யூட்டி வைத்தான். சிரார்த்த தினத்தில் அவ்வாறே சாணக்கியன் அக்கிராசனத்தை வகித்தபோழ்து சுபந்துவெனப் பெயரிய மற்றோர் பார்ப்பான் சாணக்கியனோடு அந்தப் பிரதம ஸ்தானத்தைப்பற்றி வாதாடினன். இப்போராட்டத்தைச் சகடாலன் அரசனுக்குத் தெரிவித்தான். அரச னவன் குறிகி சாணக்கியனை வெகுண்டு சுபந்துவிற்கு அக்கிராசனத்தைக் கொடுத்தான். அரசன் இவ்வாறு தன்னை அவமதித்ததைக் கண்ட சாணக்கியன் பொறையிழந்து கோபாவேசத்தோ டரசனை நோக்கி 'இன்னம் ஏழுநாளையிலுன்னைத் தொலைத்துப் போடுகிறேன், பார்' என வெஞ்சினங் கூறினன். வெகுளி பொங்கிய வரசன் அவனை யூறு செய்யுமுன்னம் சாணக்கியன் தப்பியோடிப் போய்விட்டான். சகடாலன் சாணக்கியனுக்குத் தனது வீட்டில் மறைவிடம் தந்தான். சாணக்கியன் ஓர் அபிசாரஹோமஞ்[66] செய்து ஓர் கிருத்தியத்தை (மாவாற் செய்த பொம்மையைச்) சாதனஞ்[67] செய்து

---

[65] இறந்துபோன மூதாதைகளான பிதுர்க்களுக்கு அவர்கட்குரிய தினத்தில் பலியூட்டுகை. இஃது சிரத்தையோடு செய்யப்பட வேண்டிய கர்மமாதலின் சிரார்த்தமெனப்படும்.

[66] அக்கிராசனம்=முதல் இடம்; பிரதமஸ்தானம்.

[66] அபிசார ஹோமம்=பிறரது கேட்டைக் கருதிச்செய்யும் அக்னி காரியம்.

[67] சாதனம் இவண் சக்தி யேற்றுவதை யுணர்த்தும். மாப்பொம்மையில் மாந்திரீகன் தான் கருதும் சக்தியை யேற்றித் தனது மனோரதத்தை முடிக்கப் பார்ப்பான்.

அதனை யரசன் பேரில் பிரயோகித்தான். அதனால் யோகநந்தனை நாவறட்சியோடு கடுமையான சுரம் தாக்கிற்று. வரவரக் காய்ச்சல் முதிர்ந்து சாணக்கியன் கூறியபடி ஏழாம்நாள் யொகநந்தன் மண்ணோடு மண்ணானன். யோகநந்தன் மரண முற்றபின் சகடாலன் அவனது புத்திரனான ஹிரண்யகுப்தனை யும் கொல்வித்தான். வைரத்தை விடாது சகடாலன் தனது பழியைத் தீர்த்துக்கொண்டான். பின்னர் பூர்வ நந்தனு யிருந்தவனது குமாரனான சந்திரகுப்தனுக்குப் பட்டங் கிடைத்தது. சாணக்கியனுக்கு மந்திரித்தானத்தைக் கொடுத்துவிட்டு சகடாலன் தனது பழிதீர்ந்தும் புத்திரசோகத்திற் காற்றாய்த் தவஞ்செய்ய வனஞ்சென்றான். இவ்வாறு அயோத்தியிலிருந்துவந்த பிராமணன் சொல்லக்கேட்டு எல்லாம் சஞ்சலத்திற்கே யிடமாகின்றதென வெண்ணி அந்தத் தபோவனத்தை விட்டு நீங்கி விந்தியவாசினியைத் தரிசிக்க விவண் வந்தேன். எனக்குப் பரஞானக்கண் திறந்து பூர்வ ஞானம் உதயமாகாநின்றது. எனது சாபமும் என்னைவிட்டு நீங்காநின்றது. நான் தேகத்தை விடப்போகிறேன்.

வரருசி காணபூதிக் குறுதிகூறல்

நீ யிவண் சிறிதுகாலம் காத்திரு. குணாட்டியன் தனது சீஷர்களோடு மிவண் வருவன். அவன் ஓர் பிரதிக்ஞையால் சம்ஸ்கிருதம், பிராகிருதம், தேசபாஷைகளாகிய மூன்று பாஷைகளையுந் துறந்தவன். அவன் பிரமத கணத்திலொருவன். பெயர் மாலியவான். தேவி சாபத்தால் மானிட யாக்கை கொண்டான். யான் உனக்குக் கூறிய மகா கதைகள் யாவற்

றையும் அவனுக்குக் கூறு. இருவீரும் சாபவிமோசனம் பெறுவீர். நான் பதரிக்குச் செல்லாநின்றேன் என வரருசி தனது கதையை முடித்தான்.

வரருசி தங்நிலை யடைதல்.

பின்னர் வரருசி பதரியை [68] நோக்கிச் செல்லுங்கால் ஓர் பிராமணத் தவசி தர்ப்பை கொய்துகொண் டிருக்கும்போழ்து அஃது கையை யறுத்து இரத்தம் ஒழுகாநிற்ப, வரருசி அத் தவசி யகங்காரத்தை யொழித்தானோ வில்லையோ வென்பதை பரிக்ஷித்தற்காக அவனது கையினின்று பொழியும் குருதி யொழுக்கை மாற்றிச் சாகா விரச [69] மாகத் திரித்தான். அத

---

[68] பதரி: இஃதோர் புண்ணிய க்ஷேத்திரம்; அளகநந்தம் ஹிமாசலத்தி லுற்பத்தியாகு மிடத்திற்குச் சமீபமாயுளது. இதுவே நாராயணன் மகேஸ்வரனது அனுக்கிரகத்தைப் பெற்ற விடமாகப் பாரதம் கூறும். இலந்தமரங்கள் மிக நிரம்பியதால் இத்தலத்திற் கிப்பெயர் போந்த தென்ப.

கங்கை ஹிமாசலத்தி லுதயமாகு மிடத்தின் சமீபத்தே யுள்ளது கேதாரம். பதரியும் கேதாரமும் சிவ நாராயணர்கட் குகந்த தலங்கள்.

[69] சாகாரசம் = சாகை + ரசம்; இலைகிளைகளிற் பாயும் இரசம்.

விலங்குகள் மாட்டும் மாந்தர்மாட்டும் இரக்தமுள்ளதுபோல் விருக்ஷங்களில் அவற்றிற்குயிராய் ஜீவரசம் ஓடாநிற்கும். தேவர்களது சரீரத்தில் நமது சரீரங்களுட்போல் இரக்தம் பாயாது சாகாரசமே பாயும். இந்தச் சாகாரசமே தேவர்கள் சாகாமைக்குக் காரணம். இவ் இரதம் பொழியா நின்றதாலன்றே விருக்ஷாதிகள் துண்டிக்கப்படினும் உயிர் நீங்காது திரும்பவும் தளிர்க்கவல்லனவா யமைந்தன. இரக்தமாகிய இரதம் பாயும் ஜீவர்கள் துண்டிக்கப்படின் உயிரைத் தாங்கி நிற்கப்பாலனவோ!

கிரீக்கரும் தேவசரீரங்களில் சாகாரசம் பாயுமெனக் கொண்டார்கள்.

னைக் கண்ட தவசி தனக்குத் தனது தவவலியால் தெய்வீக சக்தி கைகூடியதென்று செருக்குற்றான். அவனை நல்வழிப் படுத்த வெண்ணங்கொண்ட வாருசி யவனைநோக்கிப் "பேதாய் பெருந்தவ முடிப்பவனுக்கு அகங்கார மெற்றிற்கு? அகங் காரமோ அற்பத்தின் மகிழுறும் பெற்றியது. அகங்காரம் நசி யாதவரை அகண்டாகார பிரஹ்மசொரூபம் எவ்வாறு விளங்கு' மென்றான். தவசி யுடனே செருக்கொழிந்து வாருசியைப் பணிந்து நின்றான். அவனுக் கருள்புரிந்து அவனை நல்வழிப் படுத்திவிட்டு வாருசி பதரிகாசிரமத்தை யடைந்து மனத் தைத் தாரணைசெய்து யோகாக்னியைத் தேகத்தி லெழுப்பி அவ் அக்னியாற் றனது ஜடத்தைத் தகித்து கைலாசத்திற் றனது பூர்வநிலையை வகித்தான்.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே.

ஓம் திருச்சிற்றம்பலம்.

ஆறாம் தரங்கம்

குணாட்டியன் வரலாறு

தேவிசாபத்தால் பிரமத கணத்தனை மாலியவான் மனித வுடம்பெடுத்து குணாட்டியனெனும் நாமம் பூண்டு சாதவாகன பூபதிக்கு மந்திரியாகவிருந்து ஓர் பிரதிக்ஞையால் சம்ஸ்கிருதம் பிராகிருதம் தேசபாஷை மூன்றையுந் துறந்து வாட்டத்தோடு தேவியது கடாக்ஷத்தை நாடி விந்தியவாசினிக்கு வந்து தூர்க்

கையைப் பிரார்த்தித்தகாலை தேவி பிரசன்னமாகி யவனை நோக்கி 'நீ காணபூதியைக் காணக்கடவாய்' என வாக்னை யிட்டாள். அவ்வாறே குணாட்டியன் அவ்வடவியிலிருந்த காணபூதியைக் கண்டதும் குணாட்டியனுக்கு ரிதம்பரப் பிரக்ஞை [70] உண்டாயிற்று. உடனே தனது பூர்வநிலை ஆதியோடந்தமாகத் தனது ஞாபகத்திற்கு வந்தது. குணாட்டியன் பைசாச பாஷை மூலமாகத்தான் இன்னானென்பதைக் காணபூதியாகிய பிசாசத்திற் குணர்த்திப்பின்னர் 'நீ புஷ்பதந்தனிடம் கேட்ட மகா கதைகளை எல்லாம் விரைவில் எனக்குக் கூறு; அதனால் இருவருக்கும் சாபவிமோசன முண்டாகு' மென்றான். அதற்குக் காணபூதி மிகவும் மனமகிழ்ந்து சம்மதித்துக் குணாட்டியனை வணங்கி 'நான் நீர் கேட்டபடி கதைகள் அனைத்தையும் உமக்குக் கூறுமுன்னம் நீர் தயைசெய்து உமது வரலாற்றினை எனக்குணர்த்தும்படி பிரார்த்திக்கிறே' னென்றான். உடனே குணாட்டியன் தனது மண்ணுலக வாழ்வை விளக்கத் தொடங்கினான்,—

குணாட்டியன் அவதாரம்

பிரதிஷ்டான தேசத்தில் [71] சுப்பிரதிஷ்டமெனும் நகரில்

[70] ரிதம்பர ப்பிரக்ஞை=நேரிதான மெய்யறிவு. ஒருவன் றனக்கெவ்வாறு அனாதியிலிருந்த அத்துவித நிலைவிண்டு பிறவி நேர்ந்ததெனும் காரணத்தை யுள்ளவா காண்கையே மெய்யறிவு.

அனாதி சிவரூப மாகிய ஆன்மா
தனாதி மலத்தாற் றடைப்பட்டு நின்றது
தனாதி மலமும் தடையற்ற போழ்து
அனாதி சிவரூப மாகிய வாறே. — திருமந்திரம்

[71] இத்தேசம் கோதாவரியின் கிளைநதிகளிரண்டின் நடுவணமைந்துள தேசமாகத் தோன்றுகின்றது. தற்காலம் பீரார் எனும் நாடு

சோமசர்மனெனும் அந்தணனுக்கு வத்சன் குல்மகன் எனும் புத்திரரிருவரும் சுருதார்த்தை(கேள்விச்செல்வி)எனும் புதல்வி யும் உதித்தார்கள். தாய்தந்தைய ரிறந்தபின் சகோதாரிரு வரும் தமது தங்கையாகிய சுருதார்த்தையைக் கன்னிப்பரு வத்திற் காத்துவாநின்றனர். இவ்வா றிருப்பவும் தெய்வீகத் தால் சுருதார்த்தை சூலாயினள். சகோதரிருவரும் ஒருவர் மேலொருவர் சந்தேகங்கொண்டு கவலைக்கடலு ளாழ்ந்தனர் நிரபராதிகளாகிய தனது சகோதரர் வீணாக வொருவர்பே லொருவர் துவேஷமுற்று துக்கத்திலாழ்வதைக் கண்ட அ கன்னிகை அவர்களைநோக்கி ' நீங்கள் துயருறவேண்டாம். நான் சொல்வதைக் கேண்மின் ; நாகராசனுகிய வாசுகிக்கு ஓர் சகோ தரனுளன் ; அவனது புத்திரனை கீர்த்திசேனனெனும் நா குமாரன் நான் தீர்த்தமாடும்போழ்து என்னைக்கண்டு மிகவு காமங் கொண்டான். அவன் மிகவும் என்னை வேண்டிக்கொண் தால் யான் அவனது கருத்துக்கிசைந்து இருவரும் காந்தர் மாக மணந்துகொண்டோம். அவனே பிராமணன். இந்த கற்பம் அவனால் விளைந்த' தென்றாள்.

அண்ணன்மார் அவளது மாற்றத்தைக் கேட்டு ' நீ சொ லும் வசனத்தை எங்கட் குறுதிப்படுத்திக்காட்' டென வேண் னும் அவள் மனத்தால் கீர்த்திசேனனை நாடினாள். உடனே

இதுவேபோலும். சுப்ரதிஷ்ட நகரம் சாலியவாகனன் காலத்தி மிகப் பிரசித்திபெற்ற விடமாக விருந்தது. இதன் சமீபத்தில் தே கிருத் எனும் தெய்வீக நந்தவனம் இருந்தது. மகமதீய அரசர்க லொருவனை டோக்லாக் என்பவன் டில்லியைக் கைவிட்டு இவ்விட த்தையே தனக்குத் தலைநகராக்கக் கருதினான்போலும்.

அவ் நாககுமாரன் அவர்கள்முன் தோன்றி யவர்களை நோக்கி 'நானே யிவளை வரித்துக்கொண்டேன். இவள் பூர்வம் ஓர் நீரரமகள் (அப்சரஸ்). சாபத்தாலுந்தப்பட்டு மண்ணுலகிற் பிறந்தாள். நீங்களும் சாபபிரஷ்டமுற்று இவளோடு மண்ணி லுதித்தீர்கள். இவளது கற்பத்தினின்றுதிக்கும் புதல்வனால் நீங்கள் மூவரும் சாபவிமோசனம் பெறுவீர்க'ளெனச் செப்பித் தன்னிடத்திற்குச் சென்றான்.

கீர்த்திசேனன் செப்பியவாறே சுருதார்த்தை வயிற்றி லோர் புத்திரன் பிறந்தான். அக்குழந்தைதான் யான். நான் புவியிற் றோன்றியகாலை ஓர் அசரீரி பிறந்து 'இக்குழந்தை யோர் கண வவதாரம். இவனுக்குக் குணாட்டியனெனும் நாமத் தைச் சூட்டுக' வெனச் செப்பிற்று. பின்னர் சிறிது காலங் கடந்து எனதன்னையும் மாமன்மாரும் சாபவிமோசனம் பெற் றுத் தத்தங் கதியைக் கிட்டினர்.

குணாட்டியன் தக்ஷணம் சென்று கல்வி பெற்றுத் திரும்புகை

நான் அவர்களை இழந்தபின் தனியனானேன். என்னைப் பற்றிய பாரம் முழுமையும் நானே தாங்கவேண்டிய தாயிற்று. கல்விச்செல்வத்தை நிரம்ப பெறுதற் கவாகொண்டு, தக்ஷணம் சென்றேன். அவண் பயிலவேண்டிய கலைகளையெல்லாம் பயின்று, வித்தியாதனம் நிரம்பி, என்னைப் பல மாணவர்கள் புடைசூழ நான் திரும்பவும் ஜனன பூமியை நாடி சுப்ரதிஷ்டா நகரத்தை யடையாநின்றேன்.

குணாட்டியன் சுப்ரதிஷ்டா நகரப் பிரவேசஞ் செய்தல்

அந்நகரத்தை நான் உட்புகுங்கால், அஃது பல்லாற் றானும் மிகச் சிறப்பாய்ப் பிரகாசியாநின்றது. ஓர்பால்

சாமகான வோசை செவிக்கமுதை யூட்டிற்று. ஓர்பால் ப
குழுவி, வேதத்திற்குப் பொருளுரைப்பாராயினர். ஓர்ப
சூதாடுவோரிலொருவன் 'சூதாடத் தெரிந்தவனே செல்
தைத் தன்பாலிழுக்கவல்லவ'னென வவ்வாட்டத்தின் பெ
மையைக் கழறுகின்றான். வணிகர் பலர் குழுவி, வாண
தந்திரத்தைப்பற்றி சம்பாஷித்து வருங்கால், அவருள் ஒ
வன் 'பணத்தைக்கொண்டே பணத்தைப் பெருக்குவதில் என்
வற்புதமுளது! நானோ மூலதனமின்றியே, தனவந்தனானே
எனக்கூறித் தானொரு செத்த பெருச்சாளியை [72] முதலா
கொண்டு, வாணிபஞ் செய்து பெருஞ் சம்பத்தைப் பெற்

---

[72] செத்த பெருச்சாளியை மூலதனமாகக்கொண்டு குபேர
யொத்த சம்பத்தைப் பெற்றான் சரிதத்தைச் சிறிது செவிக்கொ
மின்,—

இளமையிலேயே தகப்பனை யிழந்து வறுமை யுற்றவோர் வா
பச் சிறுவன் தனதன்னையாற்றூண்டப்பட்டு ஓர் தனவந்தனிடம் வி
பாரத்திற்காகச் சிறிது மூலதனம் பெற்று வரும்படியனுப்பப்பட்டா
அவ்வாறே, வேண்டியவர்க்கு மூலதனமுதவும் விசாகிலனென்னு
செட்டியாரைப் பையன் கிட்டியகாலை, மற்றோர் வாலிபன் தன
முன் கிடைத்த மூலதனத்தை யவலமாக்கிவிட்டு மற்றுமோர்தரம் மூ
தனம் பெறக்கருதி அச்செட்டியாரிடம் பேசிக்கொண்டிருக்கும்போ
அந்நிதிவந்தன் 'உனக்கு நல்ல புத்தியும் ஊக்கமுமிருப்பின் இந்
செத்த பெருச்சாளியை மூலதனமாகக்கொண்டு நீ நிதிக்கு வழிகா
வுங்கூடு'மென மொழியாநிற்ப, அம்மாற்றம் ஒருவற்குச் செய்த
தேசம் மற்றொருவற்குப் பயன்படுமாபோல் இச்சிறுவன் செவி
விழவே இவ்வரிஞன் 'செத்தவிப் பெருச்சாளியை எனக்குத் தரு
நான் ஏதோ வழிகாணப் பார்ப்பேனென்று சொல்லி யந்த மூஷி
தைப் பெற்றுக்கொண்டான். அதனை யெடுத்துக்கொண்டு விற்ப
கருதிச் செல்லுகையில் மற்றோர் வணிகன் தான் வளர்க்கும் பூனை
காகாரமாக வுதவுமென வதனை வாங்கிக்கொண்டு இரண்டு சிரங்
(சேரங்கை) கடலையை யள்ளி யவனிடம் போட்டான். அக்கட
யைப் பக்குவம் பண்ணிச் சிறிது நன்னீரையும் கொண்டு காட்

தனக்குத் தக்க தருணத்தில், அப்பெருச்சாளியை மூலதனமாக வுதவிய விசாகிலன் என்ற வியாபாரிக்கு, ஓர் சொர்ணப் பெருச்சாளியைத் திரும்பக் கொடுத்து, முதலை வட்டியோடுஞ் செலுத்தி, அவனது புதல்வியை விவாகஞ் செய்து குபேர சம்பத்தோடும் தான் விளங்கும் அதிசயத்தைக் கேட்

விறகு வெட்டி ஊரிற்கொண்டு வந்து விற்றுப் பிழைப்பார்வரும் வழியில் ஓர் குளிர்ந்த மரத்தடியிலிருந்து அவர்கட்குச் சிறிது கடலையும் குடிக்கத் தண்ணீரும் கொடுத்து அவர்களது களைப்பைத் தீர்த்தான். அவர்கள் முகமலர்ச்சியோடும் ஒவ்வொருவனும் இரண்டு விறகுக்கட்டைகளை யவனுக்குக் கொடுத்தார்கள். அவ்வாறு கிட்டிய விறகையெல்லாம் ஒன்றுசேர்த்து வாலிபன் கடலைக்கு மாறினான். மறுநாள் முன்னாளினும் எத்தனையோ மடங்கு மிகுந்த இக்கடலையைப் பொரியாக்கி பக்குவப்படுத்திக்கொண்டு சென்று அந்நகர்க்குட் புகும் விறகுதலையர் யாவர்க்கும் கடலையும் தண்ணீருமுதவிச் சிரமப் பரிஹாரஞ் செய்து அவரொவ்வொருவரிடமும் இவ்விரண்டு விறகுகளைப் பெற்றுக்கொண்டு வீடு சென்றான். பின்னர் அவற்றுட் சிலவற்றை மட்டும் கடலைக்கு மாறி மற்றை நாளும் அவ்வாறே விறகைப் பெற்றுக் கொண்டான். இவ்வாறு பல தினங்கள் செய்து வராநிற்புழி பிரதி தினமும் சிறிதுசிறிதாய்ச் சேர்ந்த விறகெல்லாம் ஓர் பண்டாரமாயின. செல்வமோங்குங் காலங் கிட்டுவதுபோல் ஓர்நாள் பெருமழை பொழிய வாரம்பித்து எழுநாள்மட்டும் விடாது பெய்தது. அப்போழ்து விறகு மிக வருந்தலாக விருந்தமையின் இளைஞனிட்ட விலைக்கு அவனிடம் அந்தச் சுப்ரதிஷ்டா நகரவாசிகளெல்லாம் விறகை விலைக்குப் பெற்றுக்கொண்டனர். இதனாற் பெரிய முதலுண்டாயிற்று. பின்னர் செட்டியச் சிறுவன் விறகுதலையர் கொண்டுவரும் விறகையெல்லாம் தானே மொத்தத்தில் வாங்கி நகரத்தார்க்கெல்லாம் விற்று வந்தான். அப்பெரு நகருள் விறகு வேண்டியவர்க்கெல்லாம் இவனே வாயிலானான். சிறிது காலத்தில் இவனிடம் திரவியம் நிரம்பவுண்டாயிற்று. பின்னர் இச்சிறுவன் உயர்தரமான இரத்தின வியாபாரத் துறைக்கண் இறங்கினான். கடிதில் எவரும் சீமானென மெச்சும் வண்ணம் லக்ஷாதிபதியானான். அவ்வாறாதலும் தனக்குச் செத்த பெருச்சாளியை மூலதனமாக வுற்ற சமயத்திற் கொடுத்துதவி புரிந்த விசாகிலனுக்கு மூலதனத்தை உயர்தரமான வட்டியோடும் திரும்பச்

பார் இறும்பூதெய்த வோர்பால் உரையாநின்றான். மற்றோ
பால் ஓர் விப்பிரன் உளுந்தளவினதாய் எட்டுப் பொன்னைத்
தானம் பெற்றுவர, அவனை யோர்விடன் 'நீ யிதனைக்கொண்டு
என் செய்யப் போகின்றாய்' யெனலும், அவன் 'நீதான் சொல்
லேன் பார்ப்போ'மெனலும், அவ்விடன் 'நீ யிதனைக் கொண்டு
போய் சதுரிகாவெனும் தாசியிடம் சமர்ப்பித்து அவளெதி
நின்று சாமகானத்தை [73] முறை பிறழாது கானஞ்செய்
யெனலும், அம்மூடன் அவ்வாறே யவளது கிரகத்தை
கிட்டி, அவள் உபசரிக்கவே, தன்னிடமிருந்த எட்டு
பொன்னையும் அவளிடங் கொடுத்துத் தனது விரல்களை
கோகர்னம் [74] போலமைத்துக்கொண்டு கம்பீரமான கு
லால் சாமகானஞ் செய்தலும், அவண் விடபுருஷர் பல
கூட்டங்கூடப் பின்னர் அவருட் சிலர் 'இவனை அர்த்தசந்திர

செலுத்துவான்போல் சொர்னத்தா லொரு பெருச்சாளியைச் செ
வித்து அதனை யவனிடம் வினையமாகச் செலுத்தினான். இதனு
விசாகிலன் மிகவும் உவகை யெய்தித் தனதரும் புதல்வியை செட்டி
குமரனுக்குக் கல்யாணஞ் செய்வித்து அவனைத் தனக்கு மருகனாக்
னான். செட்டியச்சிறுவன் சிறிது காலத்திற் கோடீசுரனானான்.

ஊக்கத்தோடு தெய்வஸகாயத்தையும் நாடி எவ்வினை புரியினு
அஃது முட்டின்றி முடியுமெனத் தெளிக.

[73] சாமகானம்: சாமம் என்பது நான்கு வேதங்களுளொன்று
எவர்க்கும் சமத்துவமாகிய இனிமையைக் கொடுத்தலால் அதற்
பெயரமைந்தது. சூரியன் எவர்க்கும் சமானமாய்த் தோன்றுவதா
சாமம் சூரியனையுமுணர்த்தும்.

[74] கோகர்னம்=பசுவின் காது. இஃதோர் முத்திரை. கோகர்
மெனப் பெயரிய ஓர் சிவக்ஷேத்திரமுமுளது. இராவணனால் அ
தலத்து இலிங்கம் அவ்வாறமைந்தமையின் அத்தலம் அப்பெயர் பெ
றது. மகாபலேஸ்வர மென்பதும் இதுவே.

பிரயோகம்[76] செய்தனுப்புங்கள்' எனலும், அப்பேதையன் 'எங்கே நமது தலைபோய்விடுமோ' வெனப் பயந்து அவ்வீட்டை விட்டோடி முன்கண்ட தூர்த்தனை[77]க்கிட்டித் தான் செய்த பணியைக் கூறலும், அவன் மிக நகைத்து அம்மூடப் பிராமணனை அத்தாசி வீட்டிற்குத் திரும்ப வழைத்துவந்து அவளை நோக்கி 'இந்த இரண்டுகாற் பசுவிற்கு அவ்வற்பத் தங்கப்பொடிகளைத் திரும்பக் கொடுத்தனுப்பிவி'டெனலும், அவளவ்வாறே புரிய அவ்வறிவிலி 'தலைபிழைத்தது தம்பிரான் பாக்கிய' மென்று தனது கிரகத்தை யடையாநின்றனன்.

குணாட்டியன் சாதவாகனனிடம் மந்திரித்தானத்தைப் பூணுதல்

இவ்வாறு பல விநோதங்கள் நிறைந்த வந்நகர்க்கண் எனது மாணவர்களோடு பிரவேசித்து சாதவாகன பூபதியின் அரண்மனையைக் கிட்டினேன். எனது மாணவர்கள் அரசனிடஞ் சென்று எனது வரவை யவற்குணர்த்தினர். அரசன் வரும்படி அனுமதி செய்தலும், யான், அவனை யோர் அத்தாணி மண்டபத்தில் இரத்தின சிங்காசனத்தில் தேவேந்திரன் கொலோ வெனச், சர்வவர்மன் முதலாகிய மந்திரிகள் புடைசூழக்,

---

[76] 'அர்த்தசந்திரப்பிரயோகம்' என்பது இவண் 'கையை பாதி நிலாவைப் போலமைத்துப் பிடறியைப் பிடித்துத் தள்ளல்' என்பதை யுணர்த்தும். இக்கருத்தை யோராது அம்மூடன் அர்த்தசந்திரப்பாணப் பிரயோகஞ்செய்து தலையைக் கொய்துவிடுவார்களோவென நடுக்க முற்றான்.

[77] தூர்த்தன் = விடன், ஸ்திரிலோலன், பெண்டிர்வழிநிற்போன், காமனுக்கடிமை.

கொலுவீற்றிருக்கக் கண்டு 'சுவஸ்தி' என வாசி கூறி யடு
தேன். மன்னர் பெருமான் உடனே என்னை நல்வரவேற்று
எனக்கினிய வாசனமொன்றை யளித்தலும், யான் அதன்கண்
வீற்றிருந்தேன். மந்திரிகளும் தந்திரிகளும் எனது குணத்தை
யெடுத்தரசனுக்கு விளக்கி, இம்மகான் குணாட்டியனென்
நாமத்திற்குத் தக்கவாறே பொருத்தமுடைய குணக்குன்றம்[78]
எனப் புகழ்ந்தனர். அரசன் என்னைப் பேரன்போடு மிக
கொண்டாடி என்னையுமோர் மந்திரித்தானத்தை வகிக்க
செய்தான்.

எனது காலம் மூன்று பிரிவாய் நடையுற்றது. ராஜ
காரியம், வித்தியா போதனை, குடும்ப விவகாரம் மூன்றும் செ
வனே நடந்தன. ஓர் நாள் கோதாவரியின் கரையருகே இந்தி
னது நந்தன வனம்போற் சிறப்புற்றவோர் உய்யான வனத்தை
கிட்டினேன். தேவகிருதி[79] யெனப் பிரசித்திபெற்ற அ
சிங்கார தோட்டத்தின் வரலாற்றினை யறிந்து கொள்த
பொருட்டு அத்தோட்டக் காவலாளனை வினவியபோழ்
அவன் அஃதுண்டான சரித்திரத்தைக் கூறுவானாயினன்,—

தேவகிருதியேனும் நந்தனவனத்தின் வரலாறு

பெரியவாள் (பெரியவர்கள்) ஏதோ சொல்கிறார்கள். ஒ
தவசி மௌன விரதங்கொண்டு அன்னபானாதிகளை நீத்து

---

78 'குணமென்னுங் குன்று' என்றான் பொய்யாமொழியனும்,—

> குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயுங் காத்த லரிது !

79 தேவகிருத் எனும் இதுவே Deogir எனவும் Daulataba
எனவும் ஹிந்துசரித்திரத்திற் கூறப்படுகின்றது. முன்னர்ப் பார்க்க.

இவண் உறைந்தனராம். அவராலேயே இந்த உய்யானம் உண்டாயிற்றாம். இதிலோர் ஆலயமுளது. இதன் கீர்த்தி எங்கணும் பரவவே பற்பல தேயத்திருந்தும் ஏராளமான பிராமணர் வந்தனராம். ஓர்நாள் இவண் வந்த அந்தணர் பலரும் அத்தவசியைக் கிட்டித் 'தங்களை இன்னாரென் றறிகின்றிலம்; தயைபுரிந்து தங்கள் வரலாற்றினைக் கூறவேண்டு' மென மிகப் பிரார்த்தித்துக் கேட்டபோழ்து அவ் மௌனி தனது மௌனத்தைத் துறந்து தனது சரிதத்தை யவர்கட்குச் சொன்னாராம். எவ்வாறெனில்,

மௌனி

தேவகிருதியுண்டான இரகசியத்தை வெளிப்படுத்தல்

நர்மதா தீரத்தை யடுத்து பர்கச்சு [80] எனும் தேசமுளது. நான் அவண் பிறந்து வளர்ந்த பிராமணன். ஓர்நாள் நான் பிக்ஷைக்கு வெளிப்பட்டகாலை ஒருவன் தனது சோம்பேறித் தனத்தால் பிக்ஷையிடாது வாளாவிருந்தான். அதனால் எனக்கு ஓர் விரக்தி தோன்றி தீர்த்தபாத்திரை செய்ய நிச்சயித்து ஊரைவிட்டு வெளியேறி வழிநடந்து விந்திய வாசினியை யடைந்தேன். அவ்வாலயத்துட் புகுந்து தேவியை வணங்கலும் எனக்கோர் எண்ணம் தோன்றிற்று. 'பிறர், தேவி கிருபையை அபேக்ஷித்து பற்பல ஜந்துக்களைப் பலிகொடுக்காநின்றனர். அஃதவ்வளவு யுக்தமன்று; எனது

---

[80] பர்கச்சு என்பது தத்காலம் புரோச் (Broach) எனவும் பரோடா (Baroda) எனவும் பேர்பெறும். இஃது நருமதையின் வடகரையில் கடலையொட்டி நிற்கும் நாடாம்

தேகத்தையே நான் அம்பிகைக்குப் பலியூட்டி யவளது பி
சாதத்தைப் பெறுவதே எனக்கு மேம்பாடாகு'மென வுறு
கொண்டு கத்தியை யுருவி என்னையே வெட்டிப் பலிகொடு
வாரம்பித்தேன். எனது திடசங்கற்பத்தைக் கண்ட தே
விம்மிதத்தோடும் உடனே பிரசன்னமாகி என்னைநோக்கி '
யொப்பரிய சித்தனாய், நீ சிறிதுகாலம் என்பாலுறை
யென வாக்களித்திட்டாள். அவ்வாறே விந்தியவாசினியி
யான் உறையுங்கால், எனக்குத் தெய்வீகம் பிறந்தது. ப
தாகங்களாகிய தேக வைரிகள் என்னைவிட்டு நீங்கின. பின்ன
ஓர்நாள் தேவி யென்முன் தோன்றி, ஓர் பீஜத்தை (விதை
என் கையிற் கொடுத்து 'இதனைக் கொண்டுபோய் பிரதிஷ்டா
தேசத்தில் கோதாவரிக் கரையில் ஓர் நந்தவனத்தை யுண்
பண்' ணெனக் கட்டளையிட்டனள். அவள் உத்தரவைச் சி
மேற்கொண்டு இவண்போந்து இவ் உய்யான வனத்தை அ
சீக்கிரத்தி லுண்டுபண்ணினேன். என்பணி முடிந்தது. நீவ
இவ்வனத்தைப் போற்றுதிர்' எனக் கூறி மௌனி உருக்காந்த
ராம். இதுவே நான் கேட்டபடி யிவ்வனத்தின் வரலாறும் என்
னன்.

இவ்வாறு தோட்டக்காரனிடம் அச்சிங்காரவனத்தி
மகாத்மியத்தைக் கேட்டுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன்.

சாதவாகனப் பெயர்க் காரணம்

இவ்வாறு குணாட்டியன் தனக்குற்ற மண்ணுலக வாழ்
கையைக் காணபூதிக்குக் கூறிவருங்கால், காணபூதி, யவனை
நோக்கி " உமதரசனுக்குச் சாதவாகனனென்ற நாமம் எ

வாறு போந்தது. அதனை யெனக்குத் தெரியக் கூறி என்னை மகிழ்விக்க வேண்டு" மெனப் பிரார்த்தித்தான்.

குணாட்டியன் அதன் வரலாற்றைக் கழறுவானாயினன்,—

சாதவாகனன் பிறப்பு

தீபகர்ணி என்ற வரசனுக்குச் சக்திமதி யென்ற தேவி யிருந்தாள். இருவரும் பரஸ்பரம் மிகக் காதலுடையவர்கள். இணையன்றிற்[81] போன்ற இவ்விருவரும் ஓரிரவு உய்யானத்தில் மெய்ம்மறந்து கண் வளர்கையில் தீவினைப்பயனால் அரசன் றேவி யோர் சர்ப்பத்தாற் றீண்டப்பெற்று உயிர் நீத்தாள். தபுதார நிலை[82]யை யடைந்த வரசன் தனது காதலியின் பாலுள்ள அன்பின் பெருக்கால் வேறு மாதை மணஞ்செய்யாது பிரம்மச்சரியத்தை யனுட்டித்து வந்தான். ஆயினும் தனக்குப்பின் தனதரசுரிமையைத் தாங்குதற்குத் தக்கவோர் புத்திரன் தனக்குச் சித்திக்க வேண்டுமென்ற அவா அவன் மனத்துட் குடிகொண்டிருந்தது. ஓர்நாள் அரசன் நித்திரை புரியாநிற்கை

[81] அன்றில் நாரைபோன்ற வோர் பறவை. ஆண் பெண் இணை பிரியாதன. பிரிவு நேரின் மரண முறும். கிரவுஞ்சம் எனும் புள் இதுவே.

ஓர் கிரவுஞ்சப்புள்ளை யோர் வேடன் அம்பெய்து கொன்றகாலை வான்மீகி பதைப்புற்ற வதன் பேட்டைக் கண்டு மனமுடைந்து அவ் வேடனைச் சொர்க்கம் புகாமற் சபித்த மொழி ஓர் சுலோகமாக வமைந்து பின்னர் ராமாயணத்தைப் பயந்ததன்றே!

[82] தபுதாரநிலை = கணவன் மனைவியை யிழந்த நிலை, widowerhood. மனைவி கணவனை யிழந்த நிலை தாபதநிலை, widowhood.

யில் ஓர் திவ்விய சொற்பனமுண்டாக, அதன்கண் சிவபெருமான் பிரசன்னமாகி யவனை நோக்கி 'நீ வேட்டையாட வனத்திற்குச் செல்வாய்; அவண் ஓர் சிங்கத்தின் முதுகில் ஓர் ஆண் குழந்தையைக் காண்பாய்; நீ யந்தக் குழந்தையை யெடுத்துக்கொண்டு வந்து உனக்குப்புத்திரனுகப் பாவித்துக்கொள்தி' யென வருளி உருக்கரந்தார். சொற்பனம் நீங்கவே அரசன் விழித்தெழுந்து சந்தோஷமுற்றுன்.

பின்னர் ஓர் நாள் அரசன் வேட்டையாட வனஞ் சென்ற காலே ஓர் தாமரைத்தடாகம் கண்ணெதிர்ப்பட்டது. அப்போழ்து முன் கண்ட தெய்வ சொற்பனம் ஞாபகத்தி லுதித்தது. உடனே யோர் கோளரியும்[83] அதன் முதுகில் ஓர் குழந்தையு மவனுக்குத் தென்பட்டன. சிங்கம் அக்குழந்தையைப் பொய்கைக்கரையில் விட்டுவிட்டுத் தண்ணீர் பருக வத்தடாகத்து ளிறங்கிற்று. அத்தருணம் அரசன் குழந்தையைக் கைக்கொண்டு சிங்கத்தை யம்பாலெய்தான். மிருகேந்திரன் உயிர் துறந்து மண்ணில் விழுங்கால் ஓர் யக்ஷனுகத் தோன்ற, அரசன் அவ் யக்ஷனை நோக்கி 'உனக்கிச்சாபம் எவ்வாறு நேர்ந்த' தெனக் கேட்டான். அதற் கவ் வியக்கன் 'நான் குபேரனுக்கு[84] நண்பனுன வோர் யக்ஷன். எனது பெயர்

[83] கோளரி=கொலைத்தொழில் வல்ல சிங்கம். அடையெடுக்காது அரியெனினும சிங்கத்தை யுணர்த்தும்.

[84] குபேரன் நிதியின் கிழவனுய் எக்ஷர்களுக் கெல்லாம் அதிபதியா யுறையா நின்றுன். 'புதையலை பூதங் காத்துக்கொண்டிருக்கின்றுற்போல்' எனும் உலக வழக்கிற் கூறப்படும் பூதசப்தம் யக்ஷனை யுணர்த்தும்.

சாதன். நான் வினைவயத்தால் ஓர் முனி கன்னிகையைக் காமிக்க நேர்ந்தது. அவளும் என்பாற் காதலை வகித்தாள்.

இருவரும் காந்தர்வமாகக் கூடினோம். இதனையவளது பந்துக்களும் இருடிகளும் கண்டு பெரியவர்களது அநுமதியின்றி நாங்களிருவரும் சுயேச்சையாய் மிருகங்களைப்போல் காமத்திற்காட்பட்டு ஒழுகியதைக் குற்றமாகக் கொண்டு எங்களிருவரையும் ஆணும்பெண்ணுமாய் இரண்டு சிங்கங்களாகப் பிறக்கும்படி சபித்தனர். நாங்கள் அவர்களைப் பணிந்து சாப விமோசனத்தை யிரந்து கேட்டபோழ்து அவர்கள் கன்னிகையை நோக்கி ' நீ யோர் மனுஷமகவை யீனுதலும் சபோ விமோசனமுண்டாகு ' மென வாக்களித்து என்னை நோக்கி ' நீ யவ்வாறு பிறக்கும் குழந்தையை மற்றோர் சிங்கப் பேட்டின் பாலைக்கொடுத்து வளர்த்து வருவாய்; அக்காலம் ஓரரசன் வேட்டையாட வருவான்; அவன் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு உன்னை யெய்வான். அதனாலுனது சாபம் ஒழிவு ' மென்றனர். அவ்வாறே எனது சகி இக்குழந்தை பிறத்தலும் சாபம் நீங்கினள். பின்னர் நான் இக்குழந்தையைச் சிங்கப் பாலூட்டி வளர்த்து வந்தேன். உன்னா லெனது சாபம் ஒழிந்தது. யான் எனதிடத்திற்குச் செல்லாநின்றேன் ' என்று சொல்லி மறைந்தான். அரசன் குழந்தையை எடுத்துக்கொண்டு தனது நகர் சென்று அம் மகவிற்குச் சாதவாகனனெனப் பெயர் புனைந்தான். தனது கோறிக்கை சிவனது அருளால் ஈடேறியதால் அரசன் தவஞ்செய்து பிறப்பொழிக்கக் கானகஞ் சென்றான். உடனே சாதவாகனன் பட்டத்திற்கு வந்தான். சாதனை வாகனமாகக் கொண்டமையால் எனதரசனுக்குச் சாதவாகன

னென்ற பெயர் கிட்டிற்று". என்று சாதவாகனனென்ற பெயர் வந்த காரணத்தைக் காணபூதிக்கு விளக்கி மற்றுந் தன் சரித்திரத்தைக் குணாட்டியன் கூறலுற்றான்,—

சாதவாகனன் மானபங்க முறல்

ஓர் நாள் சாதவாகனன் தனதந்தப்புரத்து மகளிரோடு உல்லாசமாகத் தேவகிருதியெனும் சிங்காரத்தோட்டத்தையடைந்து அவணிருந்த வோர் வாவியில் தனது ஸ்திரிகளோடு ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். அப்போழ்து அவர்கள் லீலாவினோதமாய் ஒருவர்மேலொருவர் உதகத்தை வாரி யடித்தார்கள். நீர்விளையாட்டு மிக நீடித்ததால் அரசன் தேவியருள் ஒருத்தி மிகவும் களைப்பெய்தி அரசனைநோக்கி சம்ஸ்கிருத மொழியால் மோதகைஃ பரிதாடய[85](என்னைத் தண்ணீரால் அடியற்க) வென்றாள். அரசன் அவளது கருத்தை யாராயாது கொழுக்கட்டையை (மோதகத்தை) யவண் வரவழைத்து அவற்றைக் கொண்டு அவளை மோதினான். உடனே யம்மாது துன்பம் பொறுக்கலாற்றாதோ, வேறு காரணங்கொண்டோ, பேதமையென்பது மாதர்க்கணிகல[86] னென்பதை யோராது, சினங்

---

[85] இவ்வாக்கியம், மோதகைஃ என்பது மா உதகைஃ யென சந்தி பிரிந்து என்னை நீராலடியற்கவென்றும், சந்திபிரியாது நின்று என்னை மோதகத்தாலடி யென்றும் பொருள் பயக்கும். அரசன் சந்தியையும், சந்தர்ப்பத்தையும், காலபொருத்தத்தையு மாராயாது தவறான பொருளைக்கொண்டான்.

[86] மாதர் அறிவுடைமையை உள்ளடக்கி அறியாமையை அலங்காரப் போர்வையாகக்கொண்டு தமதறிவைத் தங் கணவரது அறிவிற் கடங்கி யொடுங்கி நடக்கும்படி செய்வதவர்க்கழகு. இவள் செய்கையோ அதற்கு மாறுபட்டு எதிர்பாராத ரசாபாசத்தைக் கொடுத்தது.

கொண்டு சாதவாகனனை நோக்கி 'நீ சந்தியை யறியாய் போ லும், சந்தர்ப்பத்தையும் நாடாய், சமயோசிதத்தையுந் தெளி யாய். இவ்வற்ப வாக்கியத்தின் யுக்தமான பொருளை யறியா மூடனு யிருக்கின்றாய்' யென்று கடிந்து ஜலக்கிரீடையின் சுகத் தை ரசாபாசமாக்கினள்.[87] இவ்விதப் பரிகாசத்தைக் கண்ட மற்றை மாதரும் பரிஜனங்களும் வேடிக்கையா லுந்தப்பட்டவ ராய் வெடித்த குரலோடும் கொல்லென நகைத்தனர். உடனே சாதவாகன பூபதிக்குச் சகிக்கலாற்றாத லஜ்ஜையுண்டாகவே புனல் விளையாட்டை யுடனே துறந்து கரையேறி உற்சாகக் குறைவோடு அரண்மனை சேர்ந்து தனியிடத்திற் புகுந்து சோகக்கடலுளாழ்ந்து சிந்திப்பானாயினன்,

சாதவாகனன் கொண்ட பிரதிக்ஞை

'எனக்கெவ்வளவு தேகவலியும் வீரமுமிருந்தென்னை? அஃது குருட்டு மிருகபலமன்றி மற்றென்னும்? கல்வியாகிய கண்ணில்லானை அலங்கரித்தல் மரக்கட்டையைப் புனைவது போலாம். இனி யெனக்குப் பாண்டித்துவம் அல்லது மரணமே கதி' எனத் திடமான சங்கற்பத்தைக்கொண்டு ஒருவரையும் ஏறிட்டுப் பாராது மௌனத்தை வகித்து அன்னபானாதிகளை யொழித்துப் படுக்கையைவிட்டு நீங்காதுறைந்தான்.

---

[87] ரசாபாசம் என்பது சுவைக்கேடு. அச்சமயம் அரசனும் மக ளிரும் சிங்காரச்சுவைக்கண் மூழ்கினின்றனர். மோதகத்தாலடித்தது நகைச்சுவைக் கிடமாயிற்று. இது சிங்காரச்சுவையைக் கெடுக்காது. அரசன் தேவியது கடினவாசகம் சிங்காரச்சுவையைக் கெடுத்து சோக ரசமாகிய அழுகைச்சுவைக் கிடம்பண்ணி அரசனுக்கும் ஏனையோர்க் கும் துக்கத்தை விளைவித்தது.

சர்வவர்மனும் குணாட்டியனும் அரசனுக்குற்ற தென்னென வாலோசித்தல்

அரசன் அரசாக்ஷியில் சிரத்தை குன்றி வெளிப்படாமல் அரண்மனையினுள்ளேயே யிருந்தமையால் அவன் ஏதோ வோர் பெருநோயாற் றுக்குண்டு வருந்துவதாக வெண்ணி நகரவாசிகள் துக்கமுற்றனர்.

முதன் மந்திரியாகிய சர்வவர்மனும் நானும் அரசனுக்கு நேர்ந்த கஷ்டம் யாதென வாலோசிக்கலாயினோம். அரசனது சேவர்களிலொருவனான ராஜஹம்சனை விசாரித்தபோழ்து விஷ்ணு சக்தியினது பெண்ணால் அரசன் மிகவும் லஜ்ஜையுற்று வருந்திக்கொண்டிருப்பதாகத் தெரியவந்தது. அரசனது துன்பம் நோயால் விளைந்ததன்று மனோவியாதியாலேயே விளைந்ததெனக் கண்டோம். அரசன் தனது கல்விக்குறைவால் (மூர்க்கத்தால்) தாங்கவொண்ணா அநுதாபத்தை யுற்றிருப்பதாகச் சர்வவர்மன் உறுதிகொண்டான்.

சாதவாகனன் முன்னிலையில் சர்வவர்மனும் குணாட்டியனும் செய்த பிரதிக்ஞை

நாங்களிருவேமும் அரசனை நேரிற்காண வெண்ணங் கொண்டு, அரசக்கிரகத்தை யடைந்தோம். நானே முன்னதாகச் சென்று அரசனைக் கண்டு 'உற்றதென்' னென வினவினேன். அவன் ஒன்றுங்கூறாது வாளா மௌனமாக விருந்தான். அதனை நோக்கி, சர்வவர்மன் 'அரச! யானொரு சொற்பனங் கண்டேன். விண்ணிலிருந்து ஓர் தாமரை வீழ அதனையோர் தெய்வகுமாரன் மலரச்செய்தான். அதனின்று வெள்ளைக்

கலையுடுத்த வோர் பெண் வெளிப்பட்டு, அரச, நினது நாவி லெழுந்தருளினள். ஆதலின், உமக்கு வித்யாநிதி இப்போழ்தே யும்மிடத்தில் விளைந்துகொண்டிருப்பதாக வெனக்குத் தோன்று கின்றது. நீர் கடிதிற் பாண்டித்துவத்தை நாவிற்காண்பீர்' என்றான். அசந்து கிடந்த வரசன், உடனே சிறிது தைரியத் தைக்கொண்டு, எங்களை நோக்கி 'யான் பூரணபாண்டித்துவத்தை யடையவேண்டுமாயின், எவ்வளவு காலம் பிடிக்கும்' எனக் கேட்டான். அதற்கு யான் 'ஊக்கமாகக் கலைபயிலுவோருக்கு, தக்கபடி வியாகரண ஞானம் சித்தியாகக் குறைந்தது பன் னிரு வருஷம் செல்லும். ஆயினும், யான் உம்மை ஆறு வரு ஷத்திற் பூரண பண்டிதனாக வாக்கி வைக்கக்கூடு' மென்றேன். அப்போழ்து, சர்வவர்மன் என்னை நோக்கி 'அரசரோ சுகஜீவி கள். நீர் நமதரசனை ஆறுவருஷகாலம் சிக்ஷையிலிருத்துவீரா யின், அவர் எங்ஙனம் சகிப்பர்! நீர் கூறுவது அழகியதன்று. நான், நமது கோமானை ஆறுமாசத்தில் பூரணவித்வானாக வாக்கி வைப்பேன்' என்றான். நான், சர்வவர்மன் அரசனை மகிழ்வித் தற்காகப் பொய்யாசை யூட்டக் கருதி ஏதோ வீண்வார்த்தை கூறுவதாக வெண்ணி, அவனைநோக்கி 'நீர் ஆறுமாத வெல்லை யுள், அரசனைப் பூரண வித்வானாகக் காட்ட வல்லீராயின், நான் எனது நாவினின்று சமஸ்கிருதம், பிராகிருதம், தேசபாஷை மூன்றையுந் துறப்பேன்' எனப் பிரதிக்ஞை செய்தேன். சர்வ வர்மனோ, வோர் சிறிதும் மனந்தாழாது என்னை நோக்கி 'நான் ஆறுமாத காலத்தில் நமதரசனைப் பூரண வித்வானாக வாக்கத் தவறுவேனாயின், உமது பாதபங்கயங்களைத் தலையிற் சுமக்கக் கடவேன்' என மிக வுக்ரமான பிரதிக்ஞை செய்தான்

அரசன் விம்மிதமெய்தி ஊக்கத்தைக் கைப்பற்றினுன். இருவரும் வீடுவந்து சேர்ந்தோம்.

சர்வவர்மன்
தனது பிரதிக்ஞையை எளிதே நிறைவேற்றும் உபாயத்தைத் தனது மனைவியின்பாற் றெரிந்துகோடல்

சர்வவர்மன், தனது இல்லத்தை யடைந்து, அரசன் முன் நிலையில் நேர்ந்த விஷயங்களையும் தான் முடிவிற் செய்த பிர திக்ஞையையும் தனது மனைவிக் கெடுத்துரைத்தகாலை, அவ் வுத்தமி, நெடுநேர மாழ்ந்து நோக்கித், தனது கணவனைப் பார் த்து 'சாதாரணத்தில் முடிவுற மாட்டாத பிரதிக்கினையைத் தாங்கள் வகித்துக்கொண்டீர்கள். ஆயினும் ஓர்வழி தோன்று நின்றது. சிவகுமாரனுகிய ஷண்முகக் கடவுளை நோக்கி வரங் கிடந்து, அவனது பிரசாதத்தைப் பெற வல்லீரேல், இவ்வரிய பிரதிக்கினையும் மிக வெளிதிற் கைகூடும். முன்னவனே முன் நின்ருல், முடியாத தொன்றுளதோ! ஆதலின் குகப்பெரு மான்[88] பக்கல், சித்தத்தை யொரே முகமாகத் திருப்பு'மென வுறுதியான வழியைக் காட்டினள். உஷத்காலத்திற்கு முன் னரே, தனது மனைவியாற் றூண்டப்பட்டுத் தவத்தை மேற் கொண்டு, முருகவேளது ஆலயத்தை நாடிப் புறப்பட்டான் நிற்க.

---

[88] குகப்பெருமான்: மாந்தரது ஹிருதய தாமரையாகிய குகை குள் அழியா முதலாய்ப் பரமன் உறைதலால் கடவுள் குகன் என படுவன். இளமை கெடாது உறைபவ னுதலின் முருகனென்று குமரனென்றும் வாழ்த்தப்படுவன்.

சாதவாகனன்

சர்வவர்மனைக் காணாது தவித்துத்

தனது புத்திரன்பால் ஊக்கம் பெறுகை

சூரியோதய மானபோழ்து, அரசன் வித்யாரம்பத்தைக் கருதி, சர்வவர்மனை எதிர்பார்த்து நாடிநின்றான். அவன் அவைக்களத்திற்கு வாராமையைக் கண்டு, அரசன் கவலையுற்று விசாரித்தபோழ்து, சர்வவர்மன் ஊரைவிட்டுப் போய்விட்டதாகத் தெரிந்தது. அரசன் கவலைக் கடலுளாழ்ந்தான். அரசனது புத்திரனை சிம்ஹகுப்தன், சில வொற்றரால் மந்திரி வெளியேறித் தவஞ் செய்வதாக வுணர்ந்துகொண்டான். ஓர் தினம் அரசன் மிகவும் முகம்வாடி துக்கத்திலாழ்ந்துகொண்டிருக்குந் தருணத்தில், சிம்ஹகுப்தன் தனது தந்தையைக் கிட்டி 'எந்தாய், அடியேன் தாங்கள் படும் மன வாதனையைச் சகிக்கலாற்றாது, துர்க்கையது ஆலயத்தை யடைந்து பிராணத்தியாகஞ் செய்யத் துணிந்து எனது உடைவாளை யுருவினேன். அப்போழ்து அம்பிகை யென்முன் பிரசன்னமாகி 'நீ கவலையை யொழி; உனது தந்தையின் எண்ணம் முட்டின்றிக் கைகூடும். அவன் முன் பிறப்பில் ஓர் இருடி' யென வருள்புரிந்து மறைந்தாள். ஆதலாற்றாங்கள் மனநிம்மதியை வகிக்கலாம்' என்றனன். இதனாலரசன் ஊக்கம் பெற்றுத் தனது மகனை வாழ்த்திக் கொண்டாடித் தானும் கவலையை யொழித்து தெய்வீகத்தை நாடிநின்றான்.

சர்வவர்மன் சர்வ வித்யாகலையை [89] அரசனுக்கீதல்

சில தினங்கள் சென்றபின், [90] சர்வவர்மன் சிவகுமா னது அநுக்கிரகத்தை நேரிற் பெற்றுக்கொண்டு சுப்ரதிஷ்ட நகரத்தை யடைந்தான். உடனே அரச சந்நிதானத்தை யடை ந்து, ஈசனைத் தியானித்து, தன்பா லமைந்திருந்த பூரண வி யாகலையை, நல்ல முகூர்த்தத்தில், அரசன் செவிவழி யவனது மன திற்குக் கொடுத்தான். உபதேசத்தைப் பெற்ற மாத்திர யானே, யரசன் பூரண பாண்டித்துவம் தன்பா லுள்ளவா வமை தனை யுணர்ந்து மனம் பூரித்தான்.

அரசன் சர்வவர்மனுக்குச் சிறப்புச் செய்தல்

உடனே யரசன் சர்வவர்மனைப் பூஜ்யதை செய்து அ னுக்கு நர்மதா நதியை யடுத்த பர்கச்சு தேசத்தைத் தியாக செய்துவைத்தான். தான் பூரணவித்வா னதற்குத் தூண் கோலாயிருந்த விஷ்ணுசக்தியின் மகளான தனது பா

---

[89] சர்வ வித்யாகலை யென்பது சத்தாகிய உபதேச கலை. எ தெரிந்தால் எல்லாம் தானே விளங்குமோ அவ்வுபதேசம். இதுவே ஒரு மொழியென்றும் ஒரு வார்த்தையென்றும் ஆன்றோராற் கூற படும். 'ஒரு மொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும்' என்று 'மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு, ஒரு வார்த்ன சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே' யென்றும் தாயுமா சுவாமிகள் கூறியதைக் காண்க.

[90] ஆறுமாதமென வரையறுத்துச் சென்றானாயினும் ஆ நாளிற் சர்வவர்மன் பூரண வித்யாகலையை அரசனுக்கீந்தான்போலு

யையைப் பட்டமகிஷியாக்கினன். மந்திரத்தாற் கட்டுண்ட நாகம் போல்நான் எனது பிரதிக்ஞையால் நாவை யசைக்காது மௌனத்தை வகித்து நின்றேன்.

ஏழாந் தரங்கம்

சாதவாகனன்

தனது வித்தியா சாமர்த்தியத்தை வெளிக்காட்டல்

ஓர்நாள் யான் அரசன் அவைக்களத்தை மௌனமாகக் கிட்டினேன். அத்தருணம் ஓர் புலவன் அருமையான வோர் சுலோகத்தை யரசன் முன் இசைத்தான். அதனது அரும் பொருளை நோக்கி யரசன் அப்பாவை யேற்றுக்கொண்டு சபையி லுள்ளவர் யாவரும் வியப்பெய்துமாறு அதற்கு மெய்யுரை கண்டான்.[91] தன்பால் உள்ளவா மெய்ப்பாண்டித்துவம் அமைந் திருப்பதை வெளிப்படையாகக் கண்ட வரசன் சர்வவர்மனை மிகவும் வழிபட்டு "எந்தாய், எனக்கு ஓர் சிரமமும் விளைவிக் காது மிக வெளிதில் எனக்குப் பூரண வித்யாகலையை யுபதே சித்து என்னைச் சகல கலாவல்லவனுக்கிய சதுர்ப்பாட்டை எனக்குச் சிறிது விளக்கவேண்டு" மென்று குறையிரத்தலும், சர்வவர்மன் இரகசியத்தை விளக்கலுற்றான்.

சர்வவர்மன்

சுப்ரமண்யானுக்ரகம் பெற்ற வரலாறு

ஓ, அரச, உன் முன்னிலையில் பிரதிக்ஞை செய்து, இல் லத்தை யடைந்து இவண் நேர்ந்த விஷயங்களை என் மனைவிக்

---

[91] மெய்யுரை காணல் என்பது யுக்தமான அர்த்தத்தை மனக் கண் கொண்டு கண்டு வாக்கால் வெளிப்படுத்தல். காணுதல் படைத்

கெடுத்துரைத்து, அவளது யோசனையைக் கைக்கொண்டு மௌனத்தையும் பட்டினியையும் பூண்டு, புலர்வதல முன் புறப்பட்டு குகப் பெருமானை நாடி நெடுந்தூர வழிக்கொண்டு செல்லாநின்றேன். ஆலயம் கண்ண டுந் தூரத்திற் றென்படுமமையத்து, நான் மிகக் களைப்பெய்த் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்து ஒன்றுந்தோன்றாது கிட தேன். அப்போழ் தோர் திவ்விய புருஷன் வேலாயுதந் தாங் வந்து எனது உட்கண்முன் றோன்றி 'நீ யெழுந்திரு; உ நினைவு கைகூடு' மென வருள்சுரந்து மறைந்தான். எனத் அந்தரங்கச் செவிக்கெட்டிய அவ்வாக்கு அமுதமாரி பொழி தாங்கு எனக்கின்பத்தை விளைத்தது. உடனே தேகத்தை வாதனை புரிவதாய பசியுந் தாகமும் நீங்கின; ஒப்பில்லா ஆக் மும் பிறந்தது. அதனால் நான் உடனே யெழுந்து குகனது ஆலயத்தைக் கிட்டி ஸ்நானஞ்செய்து சிவகுமாரன் உறை தரும் கற்பக்கிரகத்துட் புகுந்தேன். உடனே ஸ்கந்தன் பிரத் யக்ஷமானன். கலைமகளும் எனது நாவிற் பிரசன்னமா வெழுந்தருளினள். ஷண்முகப்பெருமானது ஆறுமுக களினின்றும் 'ஸித்தோ வர்ன சமாம் நாயஃ' (அனைத்தெழு துங் கைகூடின)[92] வெனும் வியாகரண சூத்திரம் வெளி

தல் (வெளிப்படுத்தல்) எனும் பொருளைப் பயப்பதை 'முழுவதும் க டவனைப் படைத்தான் எனும் ஆன்றோர் வாக்காற் றெளிக.

[92] எழுத்தறிவித்தவ னிறைவனாகும்; அழியா முதலாகிய அக ரத்தைக் காட்டுவோனே பரம சற்குரு. இவ் அக்ஷரமே கந் யென்றும், ஸ்போடமென்றும், ஊமை யெழுத்தென்றும் கூறப்படு இதனைப் பெற்றவன், தானே, ஒரு தானுகி யுலகெங்கும் நிற்கக் கா பன். தன்னையன்றி வேறென்று மின்றெனக் காண்கையே மோ க்ஷம் அல்லது வீடு.

கிளம்பிற்று. அச்சூத்திரம் எனது செவியிற் புகவே நான் எனது ஊகத்தால் அடுத்த சூத்திரத்தைக் கண்டு ஸ்கந்தன் முன்னிலையில் வெளியிட்டேன். அப்போழ்து குகப்பெருமான் என்னைநோக்கி 'நீ யிவ்விரண்டாஞ் சூத்திரத்தை இவ்வாறு வெளிப்படுத்தாது அடக்கி மனத்துள் வைத்திருப்பையாயின், உனது வியாகரணம் பாணினீயத்தையும் வென்றிருக்கும். நீ சிறிது படபடப்பைக் கொண்டதால் நீ வெளிப்படுத்தும் ஒலிநூல் (சப்த சாஸ்திரம்) நிரம்பாத சொற்ப தந்திரமாகும். அதுபற்றி அஃது காதந்திரம் எனப் பெயர் பெறும். அன்றியும் அஃது நமது வாகனமாகிய மயிலைப் பற்றி காலாபகம் எனவும் உலகத்தில் நடைபெறும்' என வருள்புரிந்தான். இவ்வாறோர் புதிய எளிய சப்தசாஸ்திரம் எனக்குக் குகப்பெருமானாற் காட்டிக் கொடுக்கப்பட்டது.

சாதவாகனன் பூர்வம் ஓர் இருடி

இவ்வாறோர் வியாகரணத்தை அனுக்கிரகித்ததுமன்றி, சரவணபவன்[93] என்னை நோக்கி 'உனதரசன் முற்பிறவியில் பாரத்துவாஜ முனிவனிடம் மாணவனாக விருந்த கிருஷ்ணனெனப் பெயரிய வோர் இருடி. அவன் காமன்வயப்பட்டு ஓர் முனிகன்னிகையைக் காமுற்றான். அவளும் தனது அறிவை வினைவயப்படுத்தி யவனைக் காமுற்றாள். மனநிலையழிந்த அவ்விருவரையும் முனிவர் வெகுண்டு மண்ணிற் பிறக்

[93] சரவணம் என்பது தருப்பையாகிய நாணற்புல்லைக் குறிக்கும். அறுமுகக்கடவுள் உற்பவித்த சரவணப்பொய்கை, நீலப்பைஞ்சுனையென நக்கீரராற் கூறப்படுகின்றது. இஃது, ஹிமாலயத்திற்கு வடபால் சிந்து நதி யுதயமாதற்கேதுவா யமைந்துள மானச வாவியேயாம்

கும்படி சபித்தார். [94] இப்போழ் தவன் மனைவியருள் ஒருத்தி யாகிய விஷ்ணுசக்தியின் புதல்வி யவளேயாம். இருடியி னவ தாரமாயினமையின் உனதாசன், நீ யெண்ணுவையாயின், எளி தே பூரணபண்டிதனுவன். உத்தமமான விஷயங்கள் பெருங் குணவான்கட்கு எளிதே வாய்க்குமன்றே! ஜன்மாந்தரத்தில் ஒருவற் கோராற்றுற் கிட்டியும் எட்டாது தடைப்பட்ட சித்தி கள் இப்பிறவியிலெளிதே கைகூட வென்ன தடையுளது' என வெனக்கு உறுதிகாட்டி முருகவேள் உருக்கரந்தான்.

பின்னர் நான் கற்பக்கிரகத்தை விட்டு வெளிப்போந்த போழ்து அவண் குழுவியிருந்த பல நோன்பினரும் எனது கையில் அரிசியை பிக்ஷை பெய்தனர். அத்தெய்வப் பிரசா தத்தை வழியே புசித்துக்கொண்டு சென்றேனுயினும் அவ் தெள்ளளவுங் குறைவுருது அக்ஷயமாக விருந்தது.

எனச் சர்வவர்மன் சிவகுமாரன் தனக்குக் காட்டிய திரு வருள் விலாசத்தை விளங்கக்கூறினன்.

உடனே சாதவாகனன் ஸ்நானத்திற் கெழுந்தான்.

குணாட்டியன் சாதவாகனனை விட்டு நீங்கல்

நானே இத்தெய்வீக விர்த்தாந்தத்தைச் செவியாற் கேட் கப் பெற்றேனுயினும் சர்வவர்மனேடேனும் அரசனேடேனும்

[94] காமம், முகிழ்க்கக்கூடாத தானத்தில் உதயமாயின், அஃது பெரியாருக்குச் செய்த அபராதமாம். இவ்வாறே சுந்தரமூர்த்திகளும் அம்பிகையின் சேடியரும் மண்ணுலகிற் பிறந்து போகம் துய்த்து ஆசையைக் களைந்து கைலாசத்திற்குத் திரும்பி வரும்படி அம்மையப் பர்களால் சாபம் பெற்ற சரித்திரத்தைப் பெரிய புராணத்திற் காண்க.

மற்றை வித்வான்களோடேனும் நாவாரப் பேசக் கூடாமையால் அரசனைச் சிறிது தலையால் வணங்கிச் செலவு பெற்றுக் கொண்டு சுப்ரதிஷ்டத்தை விட்டகன்றேன்.

குணாட்டியன் விந்தியவாசினியைத் தரிசித்துப் பைசாசபாஷையைக் கற்றுக் காணபூதியைக் காணல்

பின்னர், விந்தியவாசினியைத் தரிசித்து அவளருளால் கதியை அறிந்து கொள்ளலாமென்று நருமதையைக் கடந்து விந்தியவாசினியின் சந்நிதியை யடைந்தேன். அவண் அம்பிகையைத் தரிசித்துப் பின்னர் அயர்ந்து கண்வளர்ந்தேன். அப்போழ்து தேவி எனது சொற்பனத்திற் பிரத்தியக்ஷமாகி 'நீ இவ்விந்தியாடவியிலிருக்கும் காணபூதியைக் காண்பாயாக' வென வாக்களித்திட்டாள். அவளது உத்தரவைத் தலைமேற் கொண்டு புலிந்தர்கள் (வேடர்கள்) பேச்சையும் தெய்வசகாயத்தையும் பற்றி யிவண் போந்தேன்.

இதோ விருக்கும் பேய்கள் ஒன்றோடொன்று சம்பாஷிப்பதை யுற்றுநோக்கி பைசாசபாஷையைக் கற்றுக்கொண்டேன்.[95] அன்றியும் நான் இவணுற்றபோழ்து நீ உஜ்ஜினி நகருக்குச் சென்றிருப்பதை இப்பேய்களது சம்பாஷணைத்தாற் றெரிந்துகொண்டு உனது வரவை யெதிர்பார்த்து இவண் காத்

[95] குணாட்டியன் சர்வ வித்யாமுகமான ஸ்போடத்தையுணர்ந்தவனாதலின், பைசாசபாஷையைச் செவியாலேற்றற்கும், அதனைக்கேட்ட மாத்திரத்தே யதனை யறிந்து பேசுதற்கும் ஆற்றலைப் பெற்றான்.

ஸ்போடமென்பது அழியா முதலாகிய மௌனவாக்கு; ஊமை யெழுத்து.

திருந்தேன். நீயும் வந்தாய். உன்னைப் பைசாச பாஷையால் வரவேற்றேன். உன்னைக் கண்டு பேசிய மாத்திரையானே எனக்கு ஞானம் பிறந்து எனது பூர்வநிலை மனக்கண் உதயமாகா நின்றது. இதுவே இந்த ஜன்ம விருத்தாந்தம்

என்று குணாட்டியன் கூறினன்.

அதற்குக் காணபூதி 'நீர் இவண் வந்திருப்பதை நேற்றிரவே யறிந்துகொண்டேன். அஃதெவ்வாறெனில் கூறுவல்,—

பூதப்பிரேத பைசாசங்களதியல்பு

உஜ்ஜினி நகரில், பூதிவர்மன் எனும் ராக்ஷதன் ஒருவனுளன். அவன் எனக்கு நண்பன். அவனுக்குத் திவ்விய திருஷ்டி யுண்டு. நேற்றவனிடமிருந்தேன். அவனை எனக்கெப்போழ்து சாபம் விலகுமெனக் கேட்டேன். அவன் என்னை நோக்கி இரவு வரும்வரை பொறு. அப்போழ்துதான் எங்கட்குரிய சக்தி எங்களுக்குத் தெளிவெய்தும், எனக் கூறி யென்னை யவணிருத்திக்கொண்டான். அப்போழ்து யான் 'பூதாதிகட்கு இரவில் எவ்வாறு ஆற்றல் விளைகின்ற'தெனக் கேட்டேன். அதற்கவன் 'முன்னர் சிவபெருமானுக்கும் பிரமதேவனுக்கும் ஓர் வாதம் நேர்ந்தது. அப்போழ்து சிவபெருமான் 'பகற்காலத்தில் இவைகளைச் சூரியகிரணம் ஊறு செய்யா

---

96 திவ்விய திருஷ்டி=தெய்வநோக்கம், ஞானப்பார்வை, இரகசியங்களைக் காணும் கண், இனி வரற்பாலவற்றை முன்னரே கண்டறிந்து கூறுமாற்றல்.

This is known as Clairvoyance; it includes also Clair-audience.

நிற்கும். [97] தேவாலயங்க ளில்லாவிடம், தேவர்கட்கும் பிராமணர்கட்கும் மரியாதை யற்றவிடம், [98] அயுக்தமாகப் போகங்களைத் துய்க்குமிடம் இவைகளில் அவற்றிற்கு சக்தியதிகரிக்கும். மாம்சம் புசியா மாந்தர், களங்கமற்ற பெண்டீர், ஆசாரவான்கள், சூரர், அறிஞர் முதலானோரைக் கண்டால் அவை பலங்குன்றி நடுங்கும்' என்று மொழிந்தன னென்றான். பின்னர், சூரியனத்தமித்து இரவு வருதலும், அவன் என்னை நோக்கி 'உனது சாபவிமோசனத்திற் கேதுவாக, வின்று குணாட்டியன் வந்திருக்கிறான். நீ யவனிடஞ் செல்' லென வனுமதி கொடுத்தான். நான் வந்தும்மைக் கண்டுகொண்டேன். புஷ்பதந்தன் எனக்குரைத்த ஏழு மகாவித்தியாதரர்களது சரிதங்களையும் உமக்குச் சொல்லப் போகின்றேன். ஆயினும் மற்றோர் இரகசியத்தையும் யான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உங்களுக்குப் புஷ்பதந்தன் மாலியவான் என்ற நாமங்கள் எவ்வாறமைந்தன ? அவ்வரலாற்றை முதற்கண் எனக்குணர்த்த வேண்டும்,

என்றான் காணபூதி.

அதற்கிணங்கிக் குணாட்டியன் கூறலுற்றான்:—

---

[97] இதுபற்றியே பூதப் பிசாசங்கள் பகற்காலத்தில் வெளியேறாது பாழ்ங்கிணறு முதலிய இருண்ட விடங்களிற் பதுங்கியிருந்து இரவு வருதலும் வெளியேறி தம் பணிமேற் செல்லும். பகற்காலத்தில் பேய்களைக் காண்பதரிது.

[98] பிராமணனிடம் ஞானங்குன்றியிருப்பினும் வேதமோதுகையும் நித்திய கர்மானுஷ்டானமும் வழுவாதமையின் இவை அவற்கு மெய்யாகிய படையாம். ஞானக் குறுக்கத்தோடு ஒழுக்கக் குறைவும் நேரின் பிராமணன் ஒன்றுக்குமுதவான். அவனைப் பேய்பிசாசங்கள் அலக்ஷியஞ் செய்யும்.

புஷ்பதந்தனெனும் பெயர்வந்த காரணம்

கங்காதீரத்தில், பகுசுவர்னகமெனும் அக்கிராரத்தில் கோவிந்ததத்தன் எனும் அந்தணர்க்கு அக்னிதத்தையெனும் மனைவியிடம் ஐந்து புத்திரர் உதயமாயினர். இவர்கள், பார்வைக்கு இலக்ஷணமுடையவர்களாயினும், சீலந்தெரியாத மூர்க்கராகவிருந்தனர். ஓர்நாள் வைசுவானரனெனப் பெயரியவோர் அதிதி, அவரது கிரகத்திற்கு வந்தனர். கோவிந்ததத்தரும் அக்னிதத்தையும் அவரை மிகவும் பிரார்த்தித்துத் தங்கள் கிரகத்தில் போஜனஞ் செய்து போகும்படி வேண்டிக்கொண்டனர். அதிதி யவர்களது வேண்டுகோளுக் கிணங்கினர். ஒழுக்கந் தெரியாத புத்திரர்களோ அவரை மதிக்காது மிகவும் அலக்ஷியஞ் செய்தனர். அதனால் அவர் எனது தாய் தந்தையர் செய்யப்புகுந்த அதிதி பூஜையை ஏற்றுக்கொள்ளச் சம்மதப்படவில்லை. ஆயினும், எனது பெற்றோர் அவரை மிக விநயமாக வேண்டிக்கொண்டு மிகவும் சிரத்தையோடு அவரை அமுதூட்டுவித்து அனுப்பினார்கள். அவ்வைந்து புத்திரருள் ஒருவனான தேவதத்தன், அதிதியையுபசாரஞ் செய்யாத அபராதத்தையும், அதனாற் றனது தாய் தந்தையருற்ற மனோ சங்கடத்தையும், நல்லறிவால் நினைந்து நினைந்து, மனம் நைந்து, இல்லத்தைவிட்டு, பதரிகாச்சிரமத்தை யடைந்து, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். சருகுகளைத் தின்று, தூமபானஞ்[99] செய்து கடுந்தவ மியற்

[99] தூமபானம் இவண் வெண் புகை போன்ற நீராவியைப் பருகல் எனும் பொருள் பயக்கும். பதரி ஹிமாசலத்தை யொட்டிய திவ்விய க்ஷேத்திர மாதலின் அவண் வெண்புகை மயமான மஞ்சு எளிதே பானத்திற்குக் கிட்டும்.

றியதால் சம்பு பிரசன்னமானார். தேவதத்தன், கறைமிடற் றண்ணலைக் கண்குளிரத் தரிசித்துப், பின்னர் அவரை நோக்கி “எந்தாய்! தங்களது புகழையே கானம்பண்ணி இடைவிடாது தொண்டு புரியும் கணங்களிலொருவனாக[100] என்னையும் ஆகும்படி அருள்செய்க’ வெனப் பிரார்த்தித்தான். அதற்கு மகேஶன் ‘நீ விரும்பும்வண்ணம் உன்னை நமது கணங்களிலொருவனாக வாக்கிக்கொள்வாம். ஆயினும் சிறிதுகாலம் நீ புவியிற் றுய்க்கவேண்டிய போகங்களைத் தக்க வித்தியாநிதியைப் பெற்றுத் துய்த்தொழித்து தேகாந்தத்தில் எனதுலகை யடைவாயாகவென வரமளித்து உருக்கரந்தார்.

அவ்வாறே தேவதத்தன் கல்விபயிலுதற்காகப் பாடலிபுத்ரத்தை யடைந்து வேதகும்பனெனும் அந்தணனிடம் வித்தியார்த்தியாக[101]க் கலைகளை யோதிவந்தான். இவ்வாறு நிகழுங்கால் அவ்வந்தணனது மனைவி இவன்பால் காமநோய்கொண்டு அடாத செய்கைக்குத் தன்னோடிணங்கும்படி யிவனை பலாத்காரஞ் செய்தாள். உடனே தேவதத்தன் அந்நகரில் வசிப்பது

---

[100] பிறவிக்கடலை விட்டுக் கரையேறிய அல்லது ஏறவல்ல பெரியோர்கட்குச் சிவகண நிலையே ஒப்பரிய நிலையாம். இதனை,

“இறுமாந் திருப்பன்கொலோ ஈசன்பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென் றங்கிறுமாந் திருப்பன்
கொலோ” என்பதாலறிக.

[101] வித்தியார்த்தி = கல்வியைப் பொருளாகக் கொள்பவன் (பதப்பொருள்) ; மாணவகன்.

அயுக்தமெனக் கருதி பாடலிபுத்ரத்தை விட்டு நீங்கிக் கடிதில் பிரதிஷ்டானத்தை யடைந்தான்.

அவன், மந்திர சுவாமியென்ற பிராமணனிடம் வித்தை யைப் பயின்று வந்தான். இவர் மனையாள் மிக வயோதிகம். ஓர்நாள் தேவதத்தன் அத்தேசத்தரசனாகிய சுசர்மாவினுடைய புதல்வி ஸ்ரீ என்பவளைக் கண்ணுறும்படி நேர்ந்தது. மாடியில் விளையாடிக்கொண்டிருந்த ஸ்ரீயும் அப்போழ்து அவனைப் பல கணிவழியாய் நோக்கினள். உடனே இருவரும் மாரன் தம்மை சங்கிலியிட்டுப் பூட்டிட்டாங்கு தம் வயமிழந்து தம்பித்து நின் றனர். ராஜகுமாரி யவனைக் கைச்சாடைக் காட்டித் தன்னருகே யழைத்தாள். அவனும் அவளைக் குறுகினன். அவள் ஓர் புஷ்பத்தை எடுத்துத்தனது வாயிற்பெய்து அதனை யவன்மேல் தனது பல்லாலெறிந்தாள். தேவதத்தன் இந்தப் புஷ்பதந்தக் குறியைப் பொருள் காணாது அவளைவிட்டு நீங்கித் தனது ஆசிரியரது வீடுவந்து சேர்ந்து ஏதோ வொன்றைப்பறிகொடுத் தவன்போல் மதிமயங்கிப் பூமியில் மிக்க விரகவேதனையால் உருளாநின்றான். அவன்படும் அவஸ்தையைக்கண்ட மந்திர சுவாமி அவன் காமத்தாற் றுக்குண்டானென வூகித்து மிக வினிய வசனத்தால் அவனிடமிருந்து நடந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டு அரசிளங்குமரிசெய்த மன்மத சமிக்ஞையை யவனுக்கு விளக்கி யவனைநோக்கி, நீ புஷ்பதந்தமென்னும் ஆல யத்திற்குச் செல்தி; அங்கே யவளைக் கண்டு சுகம்பெறுவாய் எனக் காமநோய்தீர வழிகாட்டினர். அவ்வாறே தேவதத்தன் அவ் ஆலயத்தையடைந்து கற்பக்கிரஹத்துட் புகுந்து கதவின் மறைவில் காத்திருந்தான். அவன் காதலித்த ஸ்ரீ எனப்பெயரி

பெண்ணும் அன்று அஷ்டமியெனச் சொல்லித் தான் ஏகாந்தமாய்க் கடவுளை வழிபடச் செல்வதாகச் சாக்குக்காட்டி அவ்வாலயத்தை யடைந்து கற்பக்கிரகத்துட் புகுந்தாள். இருவரும் சந்திக்கவே ஸ்ரீ அவனை இன்புற ஆலிங்கனஞ் செய்தாள். பின்னர் அப்பெண்மணி தேவதத்தனை நோக்கித் தான்செய்த சமிக்ஞையை எவ்வாறு அவன் பொருள் கண்டானென வினவலும் அவன் தனது ஆசிரியர் மூலமாக அர்த்தத்தைத் தெரிந்து கொண்ட இரகசியத்தை யவட்குப் புலப்படுத்தினான். உடனே அவள் அவனது மௌடீகத்தை யுணர்ந்து அவனை யுதறித் தள்ளிவிட்டுத் தனதரண்மனை சென்றாள். தேவதத்தன் காமாக்னியால் மூர்ச்சித்துக் கீழேகிடந்தான். சிவபெருமான் தனது பக்தனுக்குற்ற இவ் இக்கட்டைநோக்கித் தனது கணத்தலைவர்களிலொருவனான பஞ்சசிகனை [102] யவனிடமனுப்பி யவனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்விக்கும்படி ஆக்ஞை செய்தார்.

உடனே பஞ்சசிகன் அறிவைப் புறம்போக்கிக் கிடந்த தேவதத்தனை யெழுப்பித் தக்க வாற்றலை யவனுக்குக் கொடுத்தான். பின்னர் தேவதத்தனை மாயாசக்தியால் பெண்வேடம் பூண்வித்துத் தான் வயோதிகப் பிராமண வுருத்தாங்கி ஸ்ரீயின் தந்தையாகிய அங்ககர்க்கரசனைக் கிட்டி 'இப்பெண் எனது மருமகள்; நான் ஒரூருக்குப் போய்த் திரும்பி வரவேண்டியதாயிருக்கிறது; அதுகாறும் இப்பெண் உமது அந்தப்புரத்தில் உமது மகளோடு வசிக்கட்டு'மென மொழிந்தான். அரசன்

---

[102] பஞ்சசிகன்.—இவன் கபில மகா விருஷியின் பாரம்பரையிலுதித்து மிதிலை மன்னனாகிய ஜனகனுக்குச் சாங்கிய ஞானத்தின் மெய்ப்பொருளை யுபதேசித்தவன். சிவகணங்களிலொருவனுமாம்.

அவ்வேண்டுகோளை மறுத்தற்கஞ்சி அப்பெண்ணை யேற்றுக் கொண்டு அவளை அந்தப்புரத்திற் கனுப்புவித்தான். பஞ்சசிகன் செலவுபெற்று அரசனை விட்டு வெளியேறிச் சென்றான். பெண் வேஷம் பூண்டிருந்த தேவதத்தன் ராஜகுமாரத்திக்கு மிகவும் நேசம் வாய்ந்த சேடியானான். சமயம் பார்த்துத் தான் இன்னானென்பதை யவட்குணர்த்தவே அவட்குக் காமம் மீதூர இருவரும் காந்தர்வமாகக் கூடி யின்புறாநின்றனர். அரசிளங்குமரி கற்பவதியாயினள். இனி அவணுறைவது தகுதியன்றெனக் கண்ட தேவதத்தன் தனது ஆப்த சகாயனாகிய பஞ்சசிகனை மனத்தால் நாடினான். உடனே அந்தக் கணநாதன் ஒருவருந் தெரியாவண்ணம் அந்தப்புரத்தை யடைந்து தேவதத்தனை யழைத்துக்கொண்டு மாயா ஜாலத்தால் அரண்மனையை விட்டகன்றான்.

பின்னர் பஞ்சசிகன் யௌவன புருஷனான தேவதத்தனைத் தன்னொடிட்டுக்கொண்டு அரசனை யடைந்து 'நான் எனது மகனைக் கண்டு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். முன்னம் நான் உம்பாலொப்புவித்த எனது மருகியை என்னிடங் கடிதழைத்துத் தருக' வெனக் கேட்ப, வரசன் மிகவும் திகைப்பெய்தினான்.

பின்னர் தனியிடத்தில் மந்திரியை யழைத்து அவனை நோக்கி 'எனக்கிஃதோர் மாயமாகத் தோன்றாநின்றது. தேவர்கள் தமக்கு விநோதார்த்தமாக [103] மனிதரிடம் ஜாலம் செய்வதுண்டு. முன்னோர் காலத்தில் இந்திரனும் யமனும் பருந்தும்

---

[103] விநோதார்த்தமாக = விளையாடுதலையே பொருளாகக் கொண்டு, லீலையை உத்தேசித்து.

புருவுமாக வருமாறிச் சிபிச்சக்கரவர்த்தியைப் பெருஞ்சோதனை செய்தானன்றே! அவ்வாறே இஃதும் ஏற்கு ஓர் தேவமாயை யாய்த்தோன்றுநின்ற'தெனக் கூறிப் பின்னர் மனத்தைச் சிறிது திடஞ்செய்துகொண்டு அவ்வயோதிக வந்தணன்முன் குறுகி 'ஐயரே, என்பாலோர் வஞ்சகமுங் கிடையாது; ஏதோ காரணத்தால், நீர் என்னிட மொப்புவித்த பெண் இவ்வந்தப்புரத்தினின்றும் தவறிப்போய்விட்டாள். என்னை க்ஷமிக்கவேண்டும் என்றால் சாத்தியப்பட்டதைக் கேட்டால் நான் மறுக்காது செய்யக்கூடு'மென வேண்டிக்கொண்டான். இவ்வாறு விளையுமென முன்னதாகக் கண்ட வக்கிழட்டுப்பார்ப்பான் பரிவெய்தியவன்போல் நடித்து 'ஆறுலொன்று செய்யின். எனது மருகிக்குப் பதிலாக வுமது பெண்ணையேனும் எனது குமாரனுக்கு வதுவை செய்து வையு'மென்றான். வேறொன்றுஞ் செய்தற் கரசனுக்குத் தோன்றாமையின் அவன் சம்மதித்துத் தனது மகளாகிய ஸ்ரீ என்பவளைத் தேவதத்தனுக்குப் பாணிக்கிரஹணஞ் செய்வித்தான். பின்னர் இவர்க ளிருவருக்கும் ஓர் புத்திரன் பிறந்தான். சுசர்மா அப்புத்திரிகாபுத்திரனை[104]த் தனக்குப்பின் அரசனாகப் பட்டந் தரிப்பித்துத் தான் கதி நாடித் தவஞ்செய்ய ஆரண்ணியத்தை யடைந்தான்.[105]

---

[104] சொந்தமாகப் புத்திரனைப்பெறாத வரசர் இவ்வாறு தமது புத்திரிகா புத்திரனுக்குப் பட்டந்தரிப்பது மரபு. இவ்வாறே செல்வ வந்தரும் ஆண்மகவு தமக்கில்லையாயின் தமது குமாரத்தியின்புத்திரனை சுவீகாரஞ் செய்வது மரபு.

[105] மூப்பு முதிர்ந்தகாலை அரசன் ராஜ்யபாரத்தைத் தக்கவனிட மொப்புவித்து ஆத்மலாபத்தைக் கருதிப் பற்றற்றுத் தவம்புரிதல் அவற்குச் சிறப்பு. இக்காலத்தோ ஆசையெவரையும் பணிகொள்ளும்

பின்னர் ஸ்ரீயும் தேவதத்தனும் பூலோக போகங்கள் யாவற்றையும் துய்த்து விரக்திபூண்டு வானப்பிரஸ்த ஆச்சிர மத்தை [106] மேற்கொண்டு கானகஞ் சென்று தவஞ்செய்து தமது பூர்வகதியைக்கண்டு தமது உடல்களைத் துறந்து விண் ணேறினர். உடனே இருவரும் ஒப்பரிய கைலாச வாழ்வைப் பெற்றனர். அவருள் தேவதத்தன் புஷ்பதந்தனெனும் காரணப் பெயர் கொண்டு பூதகணமானான். இப்பெயர் அவன் மண்ணுலக வாழ்விலுழலும் போழ்து அவனது காதலி அவன்பாற் செய்த மன்மத சமிக்ஞையால் விளைந்தது.

ஸ்ரீ என்பவளும் கைலாசத்தைக் கிட்டி ஜயை எனப் பெயர் புனைந்து அம்பிகைக்குச் சேடியாயும் புஷ்பதந்தனுக்கு உயிர்த் துணைவியாயு மமைந்தாள்.

இஃது புஷ்பதந்தனெனும் பெயர் வந்த காரணம். இனி யெனக்கு மாலியவானெனும் நாமம் வந்த காரணத்தையுங் கேள்.

வலியால் ஓரரசனும் உயிரோடே தனது பட்டத்தை வேறொருவற்குக் கட்டித் தான் சாந்தி நாடுவது மிகவுந் துர்லபமாயிருக்கிறது.

[106] ஆச்சிரமமென்பது மாந்தர் படிப்படியாய் மேலேறுதற்கு அறத்தால் விதித்த வொழுக்கம்.

கலைபயிலுதலாகிய பிரமச்சரியம் முதல் ஆச்சிரமம்; பின்னர் வதுவை செய்துகொண்டு நடத்தும் இல்லறமாகிய கிரஹஸ்தம் இரண் டாம் ஆச்சிரமம்; இவ்வில்லறம் மக்கட் பேற்றைக் கருதியும் துறவிக ளைப் பேணுதற்பொருட்டும் ஏற்பட்டது. பின்னர் நிகழ்வது மனத்துற வாகிய வானப்பிரஸ்தம் அல்லது காட்டுவாழ்க்கை. இதுவே மூன்றாம் ஆச்சிரமம். இத்துறவில் காமத்தை நீத்து மனைவியோடு வாழலாம். சர்வசங்கப் பரித்தியாகமாகிய சந்நியாசமே நான்காம் ஆச்சிரமம்.

The stages are studentship, husbandship, jung le-life, and mendicancy

மாலியவான் எனும் பெயர்வந்த காரணம்.

நானும் பூர்வ மனுஷப்பிறப்பில் கோவிந்ததத்தரது ஐந்து புத்திரருள் ஒருவன். எனது பெயர் சோமதத்தன். எங்கள் கிரஹத்திற்கு அதிதியாய் வந்த வைசுவானரனெனும் அந்தணனை நானும் எனது பிராதாக்களோடு கூடிக் கேலிபண்ணி அலக்ஷியஞ்செய்த காரணத்தை நோக்கி பச்சாதாபங்கொண்டு அவ்வபராதத்தைப் போக்குதற்காக ஹிமாசலஞ் சென்று கறைமிடற்றண்ணலை நோக்கித் தவம்புரிந்தேன்.

அப்பொழுது, அநுதினமும் நறுமலர் கொய்து அவற்றைப் பற்பல பாணியாக மாலைகட்டி சிவபெருமானுக்குச் சாத்தி மிக வினையமாக அம்மையப்பனை வழிபட்டு வந்தேன். ஓர் நாள் சிவபெருமான் என்முன் பிரத்தியக்ஷப்பட்டு நான் கேட்டுக்கொண்டவண்ணம் என்னைத் தமது பூதகணத்திலொருவனாக வாக்கிக்கொண்டார். யான் அவரை அநுதினமும் பூமாலை சாத்தி வழிபட்டு வந்ததால் அப்பெருமான் எனக்கு மாலியவான் எனும் நாமத்தைச் சூட்டினார்.

இதுவே எனக்கு மாலியவானென்ற பெயர்வந்த காரணம் என்று குணாட்டியன் காணபூதிக்குக் கூறினன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்?

ஓம் திருச்சிற்றம்பலம்

எட்டாந்தரங்கம்

பெருங்கதை வெளிப்போந்த வரலாறு

காணபூதி ஏழுமகா வித்தியாதர கதைகளைக் குணாட்டியனுக்குக் கூறல்

இவ்வாறு குணாட்டியன்பால் புஷ்பதந்தன் மாலியவா னெனும் நாமங்களுண்டான வகையைக் காணபூதி கேட்டுக் கொண்டபின்,

காணபூதியாகிய பிசாசம் ஏழு மகா வித்தியாதர சரிதங் களையும் பைசாச பாஷையின் வாயிலாகக் குணாட்டியனுக் கெடுத்துரைத்தது.

குணாட்டியன் அக்கதைகளைப் பாவாக்கல்

குணாட்டியன் அவ்வேழு பெருங்கதைகளையும் ஏழு வருஷத்தில் பைசாச பாஷையில் ஏழு லக்ஷங் கிரந்தமாகப் பாவிசைத்தான். (ஓர் கிரந்தம்=32 எழுத்து)

பெருங் கதைகள் எழுதப்பட்ட விநோதம்

மை கிடையாமையானும், வித்தியாதரர்கள் அபகரித்துக் கொள்ளாதிருப்பவும், குணாட்டியன் தனது சரீர ரக்தத்தைக் குத்தியெடுத்து மையாகக்கொண்டு அவ்வேழு கதைகளையும் எழுதினான்.

கதை யெழுதும்போழ்து நேர்ந்த விந்தை

குணாட்டியன் இவ்வேழு மகா கதைகளையும் எழுதும் போழ்தே யவற்றைக் கேட்க வந்த விச்சாதரர்களால் ஆகாய மெங்கணும் விதானங்கட்டியாங்கு மறைக்கப்பட்டது.

காணபூதி சாபவிமோசன மடைதல்

இவ்வாறு குணாட்டியனு லிசைக்கப்பட்ட இவ் வேழு மகா கதைகளையும் உள்ளவா கண்கொண்டு பார்த்த மாத்திரையானே காணபூதி தனது சாபத்தின் முடிவிடத்தைக் கிட்டித் தனது மெய்க்கதியை யடைந்தான்.

பிசாசங்கட்கு நேர்ந்த கதி

மற்றைப் பிசாசங்களும் இவ்வற்புதக் கதைகளைச் செவி யுறக் கேட்ட புண்ணியத்தால் தத்தம் பிசாசத்தன்மை நீங்கப் பெற்றுத் தேவலோகத்தை யடைந்தன.

உலகம் ஈடேறக் குணாட்டியன் கவலை யுறல்

பின்னர் குணாட்டியன் சிந்திப்பான்,—'என் சாபம் முடிவு பெறுங்காலத்து யானிக்கதைகளை மண்ணுலகில் நிலைபெற வைத்து வரும்படி எனக்கு ஆக்ஞை யிருந்ததே அக்கட்டளைப் படி எவ்வண்ணம் முற்றுவிப்பேன் ?'

பெருங் கதைகள் உலகிற் பரவுறுதற் குகந்த வழியைக் குணாட்டியன் காண்கை

இவ்வாறு குணாட்டியன் கவலையுறுவதைக் கண்ட அவனது மாணவர்களாகிய குணதேவனும் நந்திதேவனும் அவனை நோக்கி, "இம்மண்ணுலகில் இக்கதைகளைக் கேட்டறிய வல்லவன் சாதவாகனனையன்றி வேறொருவருமில" ரென்றனர்.

அதற்குக் குணாட்டியன் அவர்களை நோக்கி 'அவ்வாறே யாகுக ; நீவிரிருவீரும் இக்கதைகளைக் கொண்டுபோய் சாத

வாகனனுக்கு வாசித்துக் காட்டக் கடவீ’ ரென ஆக்ஞை செய்து அவ்விருவரையும் அவ்வரசனிடம் போக்கித் தான் தேவகிருதி யெனும் உய்யான வனத்தில் வதிந்தான்.

சாதவாகனன் ஏழு மகாகதைகளையும் குணாட்டியனது மாணவர்களிடங் கேட்டல்

அம்மாணவர்கள் அவ்வாறே அவ்வரசனை யடைந்து தம தாசிரிய ரெழுதிய ஏழுலக்ஷங் கிரந்தங்களையும் அவனுக்குக் காட்டி, இவை யாவும் குணாட்டியனா லிசைக்கப்பட்டனவெனச் செப்பி யவனுக்கு அவற்றை வாசித்துக் காட்டினர்.

சாதவாகனன் அக்கதைகளைப் பொருட்படுத்தாது சிறுமை செய்தல்

பைசாச பாஷையிற் பாவாக்கப்பட்ட அவ்வேழு மகா கதைகளையும் கேட்டுக்கொண்ட சாதவாகனன் அவற்றி னளவை (7 லக்ஷம் கிரந்தம்) நோக்கி வித்தியா கர்வங்கொண்டு அவற்றைப் பின்வருமாறு சிறுமைப் படுத்தினான்,—

‘ பிரமாணமோ ஏழுலக்ஷம், வாக்கோ ரசமற்ற பைசாசம், அக்ஷரங்களோ ரக்தமயம், சுடு சுடு இப்பைசாச கதையை ?

குணாட்டியன் அக்கதைகளை நெருப்பிலிடுதல்

இவ்வாறு கல்விச்செருக்கால் ஏளனஞ் செய்யப்பட்ட கிரந்தங்களை அம்மாணாக்கர் திரும்பவெடுத்துக்கொண்டு குணாட்டியனிடம் வந்து நடந்த விஷயத்தை மொழிந்தனர். அதனாற் குணாட்டியன் மிகவும் வருத்தமுற்றான். எவன்தான் தானறிஞனாயிருப்பவும் மற்றோர் அறிஞனால் அவமதிக்கப் படின் அதனை யெளிதே சகிக்கவல்லவன் !

இவ்வாறு வாட்டத்தையுற்ற குணாட்டியன் தனது சீடர்களோடும் சமீபத்தேயிருந்த வோர் குன்றத்தை யடைந்து ஓர் மறைவிடத்திலோர் அக்னி குண்டத்தை யமைத்துத் தானிசைத்த கிரந்தங்களை ஒவ்வோரேடாக வாசித்து அக்னியில் எரியும்படி விட்டான்.

விலங்குகளின் செய்கை

இவ்வாறு ஒவ்வோரேடாய் வாசித்துக் குணாட்டியன் தனது காரியத்தை நெருப்பிலிடுங்கால் பக்ஷிகளும் மிருகங்களும் அவ்வற்புத சரிதங்களைக் கேட்பதற்காகப் பலவிடத்திருந்தும் அவ் வோமகுண்டத்தை மொய்க்க வாரம்பித்தன.

உதயணன் கதை அக்னிக்குத் தப்பல்

இவ்வாறு கிரந்தங்கள் யாவும் தீக்கிரையாகி யழிவுறுங்கால், அம்மாணாக்கரிருவரும் தமது ஆசிரியரை நோக்கி உதயண குமாரனை நரவாகன தத்தனாகிய மகா வித்தியாதரன் கதையையேனும் நெருப்பிற் காகுதி செய்யாதிருக்கும்படி வேண்டவும் குணாட்டியன் அவ்வாறே அவ்வொரு லக்ஷங் கிரந்தத்தையும் வன்னிக்குக் கொடாது காத்தான்.

விலங்குகள் கதை கேட்டானந்தத்தழுந்தல்

மானினங்களும் பன்றிகளும் எருமைகளும் மற்றை மிருகங்களும் ஆகாராதிகளையும் ஜலபானத்தையும் துறந்து ஆனந்தக்கண்ணீர் பொழிதர ஸ்தம்பாகாரமாக, அங்கங்கே கூட்டங் கூட்டமாகக் கூடிச் செவியாரக் கேட்டுக்கொண்டிருந்தன.[107]

---

107 'செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்' எனும் பொய்யாமொழி மிருகங்களுக்கு
[மமைந்ததன்றே

சாதவாகனன் நோயாற் பிடியுண்ணல்

இவ்வாறு கானகத்தை யடுத்த குன்றத்தில் விலங்குக ளெல்லாம் ஆகாராதிகளைத் துறந்து கதாமிர்தத்தைச் செவியார வுண்டு ஆனந்தத்தில் அழுந்தாநிற்புழி, சாதவாகனபூபதி நோயாற் பிடியுண்டான்.

நோய் வந்த காரணம்

ஆயுள் நூல் வல்லார் அரசனது நோயைப் பரீக்ஷித்த காலை அவர்கள் வற்றிப்போன மாம்சபோஜனத்தை [108](சுஷ்க மாம்சபோஜனத்தை) அரசன் அருந்தியதால் அந்நோய் விளைந்ததெனக் கண்டார்கள்.

பின்னர் பரிஜாரகரைப் போஜனப்பிசகைப்பற்றிக் கேட்ட போழ்து அவர்கள் 'நாங்கள் என் செய்வோம்; அத்தகைய மாம்சத்தைத்தான் வேடர்கள் ராஜ போஜனத்திற்காகக் கொண்டுவந்து உதவுகிறார்கள்' என்றனர்.

அப்பால், வேடர்களை வரவழைத்து விசாரித்தபோழ்து அவர்கள் 'இந்நகர்ப்புறத்தே யோர் குன்றுளது; அங்கே யோர் பிராமணன் ஓர் ஹோமகுண்டத்தில் ஏடேடாய் வாசித்து அவ் வேடுகளை ஹோமஞ்செய்கிறான். விலங்குகள் யாவும் பசிதாகங் களைத் துறந்து அவனது வாசகத்தைக் கேட்காநின்றன; அத னால் அவைகள் மிகவும் தேகமிளைத்துப் போயின. வேறு மிரு கங்களோ கிடையாது. ஆதலின் அம்மிருகங்களின் மாம்

[108] வற்றிய மாம்சம் அதனை யருந்துவோனது தேகசாரத்தைத் தன்பாலிழுத்துக்கொண்டு நோயை விளைவிக்குமன்றி அருந்துவோ னது தேகத்தை வளர்க்கத் தனது சாரத்தை யுதவாது.

சமே எங்கட்குக் கிட்டுகின்றது. யாங்கள் என் செய்வோம்'
என்றனர்.

அரசன் அதிசயத்தை யறியப்புகுதல்

இவ் அதிசயத்தைக் கேட்டலும் அரசனுக்கு இரகசியத்தை யறிந்துகொள்ள விருப்பமுண்டாயிற்று. உடனே யவன் புறப்பட்டு அக்குன்றத்தை யடையவே, அங்கே யோர் ஜடாபாரந் தாங்கிய தவசி, வேடர்கள் செப்பியவண்ணமே ஏடுகளை வாசித்து நெருப்பிலிடுவதையும், ஹோமகுண்டத்தைச் சூழ மிருகங்கள் வாடி வதங்கி மந்தை மந்தையாய் அசைவின்றி யானந்தத் தழுந்திக்கிடப்பதையும் கண்ணுற்றான். ஹோமஞ்செய்யும் அந்தணனது ஜடாபாரம் அக்னியொடுங்கித் தனது யதாஸ்தானத்தைக் குறுகுமுன் வெளிப்படுக்கும் புகையைப்போற் றோன்றிற்று.[109]

ஆனந்தக் கண்ணீரைத் தாரை தாரையாய் விட்டுக்கொண்டு அற்புதக்கதைகளைச் செவியுற்றுக் கேட்டுக்கொண்டிருக்கும் விலங்குகளின் மத்தியிலிருந்து ஹோமஞ் செய்யுமந்தணனை உற்றுநோக்கி அரசன் குணாட்டியனெனத் தெரிந்துகொண்டான்.

---

[109] அழியாது மறைவாயுறையும் அக்னியிலிருந்தே அழிதன்மாலையதான பூதாக்னி தோன்றும். இவ்வாறு வெளித்தோன்றிய அக்னி மறைவெய்தித் தனதழியா நிலையைத் திரும்பக் கிட்டு முன்னம் புகையை வெளிப்படுக்குமன்றே! குணாட்டியன் தனதழியா நிலையாகிய மோக்ஷத்தைப் பற்றுந் தருவாயிலிருந்தானென்பது உட்பொருள்.

சாதவாகனன் குணாட்டியன்பாற் பக்திபூணல்

உடனே சாதவாகனன் குணாட்டியனை நமஸ்காரஞ்செய்து 'சுவாமிகாள், இவண் யாது செய்கின்றீர்க' ளெனக் கேட்டான்.

மாலியவானாகிய குணாட்டியன் புஷ்பதந்தனது சரிதத்தையும் தனது சரிதத்தையும் பைசாச பாஷா முகத்தால் சாதவாகனனுக்குத் தெளிவித்தான்.

குணாட்டியனைச் சிவபெருமானது பூதகணத்தில் ஒருவனெனத் தெரிந்துகொண்ட சாதவாகனன் மற்றுமோர் தரம் குணாட்டியனை நமஸ்கரித்துச் சிவபெருமான் முத்தமிழ் நான்மறை முனைந்தருள் வாக்கால் [110] கைலாசத்தில் அம்பிகைக் குரைத்த, ஏழு மகா வித்தியாதர சரிதங்களையும் தனக்குக் கூறும்படி விண்ணப்பம் பண்ணிக்கொண்டான்.

குணாட்டியன் உதயணன் கதையைச் சாதவாகனனுக்குக் கொடுத்தல்

அதற்குக் குணாட்டியன் 'அம் மகா கதைகள் ஏழனுள் உதயணன் கதையொன்றே அக்னிக்கு இரையாகாது மிஞ்சிற்று. வேண்டுமாயின் இவ்வொன்றைப் பெற்றுக்கொள்தி. எனது மாணாக்கர் இதற்குப் பொருள் காண்பார்கள்' என்று விடை யளித்தான்.

---

110 முத்தமிழ் என்பது இயல் இசை நாடகமெனும் மூன்று வகை. நான்மறை என்பது இருக்கு, எஜுர், சாமம், அதர்வணம்.

குணாட்டியன் தன்னிலை யடைதல்

உடனே குணாட்டியனது பணி முடிந்தது. அக்கணமே யவன் சிவகணமான தனது பதவியை யடைந்தான். [111]

சாதவாகனன் அக்கதையைப் பெருங்கதையெனப் பெயர் புனைந்து பிரதிஷ்டானத்திற் கெடுத்துக்கொண்டு போதல்

சாதவாகனன் எஞ்சி நின்ற அவ்வொரு கதையைப் பிரஹத்கதை (பெருங்கதை) யென நாமஞ் சூட்டி யதனை யெடுத்துக்கொண்டு தனதரண்மனை சென்றான். தன்னோடுடன் போந்த மாணவர்க ளிருவருக்கும் தக்க சம்பத்தை யளித்துச் சிறப்புச் செய்தான்.

கதா பீடம்

கதாமுகத்தை வெளிப்படுத்த இவ்வாறு கதாபீடத்தைச் செய்வித்தான்.

பெருங்கதை யுலகிற் பரவல்

இவ்வற்புதமான பெருங்கதை முதற்கண் சுப்ரதிஷ்டமாகிய அவனது நகரெல்லாம் பரவிப் பின்னர் நாடெங்கும் பரவிப் பின்னர் மூன்று லோகத்திலும் பிரசித்தி பெற்றது.

பிரஹத்கதாபீடம் முற்றும்.

ஓம் திருச்சிற்றம்பலம்

---

111 ஐம்பூதக்கலப்பாற் றேகமுண்டாவது அவரவர் விட்ட குறை தொட்ட குறைகளை முடித்தற்கென்க. அக்குறையை முடித்தற்கு வேண்டிய வினைவலியை மொண்டு வந்த தேகம் அவ்வினை முடிவில் ஆட்டமறும். இதனுண்மையை,

'வினைப்போகமே யொரு தேகங்கண்டாய் வினைதா னொழிந்தால்
தினைப்போ தளவும் நில்லாது கண்டாய்'

எனும் ஆன்றோர் கூற்றாற் றெளிக.

உதயணன் கதை

கதை வெளிப்பட்ட வரலாறு

பரிக்ஷை வினக்கள்

I. சிவபெருமான் காபாலிக மகாவிரதம் பூண்ட காரணம் யாது ?

II. பின்வரும் வாக்கியங்களின் கதா சந்தர்ப்பத்தைக் காட்டுக :

(1). ஜன்மாந்தரத்தில் ஒருவற்குக் கிட்டியும் எட்டாது தடைப் பட்ட சித்திகள் இப்பிறவியில் எளிதே கைகூட வென்ன விடையூறுளது ?

(2). எல்லாம் சஞ்சலத்திற்கே யிடமாகாநின்றது.

(3). பேதாய், அழகென வோர்பொருள் வேறுளதோ ? எதனை மனம் மிகக் காமிக்கின்றதோ அதுவே யம்மனத்திற்கு யாவற்றினுஞ் சிறந்த அழகிய பொருளாம்.

(4). பணத்தைக்கொண்டே பணத்தை விருத்தியாக்குவதில் என்ன அற்புதமுளது ? நானோ மூலதனமின்றியே தனவந்த னானேன்.

III. யோகநந்தன் யாவன் ? அவன் மேன்மையான கல்வியறிவுடைய னாயினும் ஏன் மதியிழந்து நடை கோணித் தனது வாழ்வைக் கெடுத்துக்கொண்டான் ?

IV. உதயண கதாபீடத்தில் கூறப்பட்டுள பதிவிரதைகள் தத்தங்கண வர்கட்குப் புரிந்த நன்மைகளை விவரமாய்க் காட்டுக.

V. வாருசி, தனது மனைவி அன்னையாகிய விருவரும் தன்பொருட்டு உயிர் நீத்தமையை, நினைந்து மனம் நொந்து துக்கத்திலாழா

நிற்புழி, அவனை யார் தேற்றியது? தேற்றிய மொழிகளைக் கூறுக.

VI. புஷ்பதந்தன், மாலியவான், வரருசி, சாதவாகனன் என்பவர்கட்குத் தத்தமக்குற்ற பெயர்கட்குக் காரணமென்னை?

VII. சாணீக்கியன் யாவன்? அவனது குணத்தைப்பற்றி யாது கூறலாம்?

VIII. வரருசி யோர் தவசியின் அகங்காரத்தை யொழித்து அவனை நல்வழிப்படுத்தினான். எவ்வாறு?

IX. பாடலிபுத்திரம் என்பதற் கப்பெயர் வந்த காரணத்தைக் காட்டுக. கதையைச் சுருக்கி மொழிக.

X. கனகலம், விந்தியவாசினி, பதரி, தேவகிருதி: இத்தலங்களிருக்குமிடங்களை விளக்கி ஒவ்வொரு தலத்தின் சிறப்பையும் எடுத்துரைக்க.

XI. ஐந்திரம், பாணினீயம், காதந்திரம், பிராதிசாக்கியம் என்பன யாவை? விளங்க விடை பகர்க.

XII. வரருசிக்கு எவ்வாறு ராக்ஷதனது உதவி கிடைத்தது?

XIII. செத்த மீன் சிரித்த அதிசயமான கதையை விளக்கஞ் செய்க.

XIV. பின்வரும் பதங்களை விளக்குக:

கறைமிடற்றண்ணல், ஆயுள்நூல் வல்லோர், ஏகச்சந்தக்கிராகி, சிறுவிதி, ரசாபாசம்.

XV. மோதகை ꞉ பரிதாடயமாம்: இவ்வடமொழி வாசகம் பிறந்த சந்தர்ப்பத்தையும் அதனால் விளைந்த நன்மை தீமைகளையும் சுருக்கி விளங்கக் காட்டுக.

XVI. பிசாசங்கள் ஏன் பகலில் வெளிப்படுவதில்லை? அவற்றிற்கு எவ்விடங்களில் வலியோங்கும், எவ்விடங்களில் வலிகுன்றும்?

XVII. குணாட்டியன் மௌனவிரதங்கொண்ட காரணம் யாது?

XVIII. குணாட்டியன் சுப்ரதிஷ்டா நகர்ப்பிரவேசஞ் செய்யுங்காற் கண்ட காட்சிகளை வர்ணிக்க.

XIX. சாதவாகனன் பெருங்கதையைப் புவியிற் பரவ விட்டதற்குக் காரணம் என்ன? மூதற்கண் அவன் ஏன் இக்கதையை அலக்ஷி யஞ் செய்தான்?

XX. 'பேதமையென்பது மாதர்க்கணிகலம்' என்பதன் யுக்தமான பொருளை எடுத்து நன்கு விளக்குக.

XXI. வரருசி, குணாட்டியன், சர்வவர்மன், சாதவாகனன்: இவர் கள் சரிதங்களால் முறையே மாந்தர் கற்றுக்கொள்ளக்கூடிய பேருறுதிகள் யாவை? ஆழ்ந்துநோக்கி யெழுதுக.

XXII. 'க்ஷணநேரத்தில் ஒன்றுமற்றுப்போகும் பெற்றியதான சரீரத் திடத்தும் சாரமற்ற சம்சார சாகரத்தினிடத்தும் அறிஞன் எவன்தான் குருட்டுத்தனமாய் மூழ்குவன்?'

இவ்வுறுதி வாக்கியம் எவரது? சந்தர்ப்பத்தைக் காட்டுக.

XXIII. 'பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம்'

இவ்வருள் வாக்கை விளக்குக.

XXIV. சாலாபகம் என்பது யாது? பெயர்ப் பொருத்தத்தையும் விளக்குக.

XXV. உதயண கதாபீடமாகிய இந்நூலை வாசித்தலால் உமக்கு உள்ளவா விளைந்த நன்மை யாது? ஆராய்ந்து விடை பகர்க.

அரும்பத வகராதி

அ

அகந்தை = அகங்காரம், நானெனுஞ்செருக்கு.
அகழ்ந்து = தோண்டி.
அகோராத்ரம் = பகலும் இரவுமாக.
அக்கிராசனம் = முதல் ஸ்தானம்.
அந்தர்த்தானம் = அருவமாய் மறைதல்.
அபயம் = பயமின்மை, ரக்ஷிப்பு.
அம்மையப்பர் = சிவபெருமான்.
அர்த்தசந்திரப் பிரயோகம் = கைவிரல்களைப் பாதி நிலாப்போலமைத்து கழுத்தைப் பிடித்துத் தள்ளுதல்.
அவலம் = நிஷ்பிரயோஜனம்.
அவைக்களம் = சபை கூடியவிடம்.
அன்றில் = கிரவுஞ்சப்புள், ஓர் விதநாரை. இப்புள் ஆண் பெண் பிரியின் உயிர் தரித்திருக்கலாற்றாது. அதுபற்றியே அப்பெயர் இதற் கமைந்ததுபோலும்.
அக்ஷயம் = அ + க்ஷயம், குறைவற்றது.

ஆ

ஆற்றல் = பலம்.

இ

இக்கட்டு = பொல்லாங்கு.
இறும்பூது = அதிசயம்.

ஈ

ஈகை = கொடை.

உ

உசிதமான = தக்க, பொருத்தமான.
உயிரோவியம் = உயிரோடுகூடிய சித்திரம்.
உயிர்ப்பு = மூச்சு.
உவந்து = களிப்பெய்தி.
உழக்கிய = கலக்கிய.
உஷத்காலம் = விடியற்காலம்.

ஊ

ஊர்வசி = தொடையழகி (பதப்பொருள்), ஓர்தேவதாசி.

எ

எழில் = அழகு.
எழுமைக்கும் = எழுவிதப் பிறப்பின்கண்ணும்.

ஏ

ஏகசந்தக்கிராகி = கேட்பதை ஒரே தரத்தில் மனத்துட் பதிய வாங்கி வைக்க வல்லவன்.
ஏகாக்ரசித்தம் = ஏகம் + அக்ர + சித்தம், ஒருமுனைப்பட்ட மனம்.
ஏனம் = பன்றி.

ஐ

ஐந்திரவியாகரணம் : என்பது இந்திரனுலியற்றப்பட்ட இலக்கணமெனப் பொருள்படும். மற்றுஞ் சூக்குமப் பொருளுமுண்டு.

ஐயுறு = சந்தேகங்கொள்.

ஓ

ஓவியம் = சித்திரம்.

க

கலாபகம் = வங்காள தேசத்தில் வழங்கும் ஓர் வடமொழி வியாகரணம். பெயர்க்காரணத்தை நூலுட்காண்க.

கழிபேருவகை = கழி + பேர் + உவகை, கரைகடந்த பெரும் சந்தோஷம்.

கறைமிடற்றண்ணல் = ஸ்ரீ நீலகண்டன், சிவபெருமான்.

கனல்சான்றுக = அக்னி சாக்ஷியாக.

கா

காந்தர்வமாக = கந்தருவரைப் போல், யாழோர்போல், சுயேச்சையாக. அந்தணர் வேதம் எட்டுவிதமான மணங்களுள வெனக் கண்டது. அவற்றுள் காந்தர்வம் ஒன்று. இச்சையொத்த ஆடவனும் மாதும் பெண்ணைத் தத்தஞ் செய்தற்குரிய மரபினரின்றிக்கூடின் அதுவே காந்தர்வமாம். இம்மணம் தமிழில் களவெனக் கருதப்படும். ஆயினும் களவு காந்தர்வத்தினும் சிறப்புடைத்து.

அன்பி னைந்திணைக்
களவெனப் படுவது
அந்தண ரருமறை
மன்ற லெட்டனுள்
கந்தர்வ வழக்க
மென்மனார் புலவர்.

கி

கிருத்தியம் : கருத்தொழில் வல்ல மாந்தரீகன் நிர்மித்து ஏவும் தேவதை கிருத்தியா வெனப் படும்.

கு

குழவி = கூடி.

சதா = எப்போழ்தும்.

சதுர்த்தன் = சாமர்த்தியன்.

சர்வக்ஞபீஜம் = முற்றறிவாகிய விதை. இதன் உள்ளீட்டை யோகசூத்திரத்திற் காண்க.

ச

சககமனம் = உடன் செல்கை (பதப்பொருள்) உடன்கட்டையேறல், இறந்துபோன கணவன் உடல் நெருப்பிற் கிரையாகும் போழ்து தானும் தனது கட்டையை யதற்கு இரையாக்கல்.

சா

சாகாரசம். சாகை = கிளை, ரசம் = சாரம். சாகாரச மென்பது ஓஷதிகளின் இரதம்.

சாங்கோபாங்கமாக = அங்கங்களையும் உபாங்கங்களையுங் கொ

ண்டு, சவிஸ்தாரமாக. கதைக ளின் பற்பலபாகங்கள் அங்கங் களெனப்படும்; கிளைக்கதை கள் உபாங்கங்களெனப்படும்.

சி

சிறுவிதி = குட்டிப் பிரமன், பிரம புத்திரனாகிய தக்ஷன்.

சீ

சீற்றம் = கோபம்.

சு

சுஷ்கமாம்சம் – உலர்ந்துபோன இறைச்சி.
சுஷ்க = சுக்குப்போன்ற.

சூ

சூழ்ச்சி = கபடம், தந்திரம்.

த

தபுதாரநிலை = மனைவியை யிழந்து நிற்கும்நிலை.

தா

தாரணை = மனம் ஒன்றில் ஊன்று கை, அட்டாங்க யோகத்தின் ஓர் கூறு.

தீ

தீவேட்டல் = அக்னி சாக்ஷியாக வதுவை செய்தல்.

து

துய்த்து = தின்று (பதப்பொருள்), அனுபவித்து.

தூ

தூர்த்தன் = விடபுருஷன்.

ந

நவவியாகரணம் என்பது ஒன் பதுவகை வியாகரண மெனவும், காலதர்மத்திற்குத் தக்க படி புதிதாயமைந்த இலக்கண மெனவும் பொருள்படும். புதி தாய் பாணினீயம் தோன்றிய பின் பழமையாய ஐந்திரம்நசிந்த தன்றே!

நா

நாமகள் = சரஸ்வதி, கலைமகள்.

நி

நிரபராதி = நிர் + அபராதி, அபரா தஞ் செய்யாதவன், குற்றமற் றவன்.

நீ

நீரரமகள் = அப்சரஸ், water-nymph.

நெ

நெற்றிக்கட்டீ = நெற்றி + கண் + தீ, லலாட நேத்திரத்திலிருந்து விளையும் நெருப்பு.

ப

பச்சாதாபம் = கழிவிரக்கம்.
பஞ்சா = ஐந்து விரலோடுங் கூடிய உள்ளங்கை.
படைத்தமொழி = பொய் வார்த் தை.
பட்டமகிஷி = இராணி, பட்டபு தேவி.

பா

பாணிக்கிரஹணம் = கைப் பிடித் தல் (பதப்பொருள்), வதுவை.

பாணினீயம் = பாணினி முனிவரால் வெளிப்பட்ட வடமொழி வியாகரணம்.

பி

பிரதிபா = உள்ளுணர்ச்சி, கவித்வம், அருள்.

பிரத்தியக்ஷம் = க ண் ெ ண தி ர் (பதப்பொருள்.)

பிராதா = சகோதரன்.

பிராதிசாக்கியம் = வேதாங்கங்களிலொன்று, வேதத்தின் சாகைகளைப்பற்றிக் கூறும் இலக்கணம்.

பு

புலிந்தன் = வேடன்.

புன்முறுவல் = குறுநகை, புன்சிரிப்பு.

பெ

பெற்றியர் = தன்மையர்.

பே

பேய்த்தேர் என்பது சூரிய வெப்பத்தால் பாலை நிலம் தடாகம் போற் றோன்றும் பொய்க் காட்சி ; கானல் ; mirage.

பொ

பொச்சாப்பு = பொறாமை.

ம

மடி = சோம்பல்.

மா

மாற்றம் = வார்த்தை.

மி

மித்துருத்துரோகம் = சிநேக வஞ்சகம்.

மீ

மீதூரல் = மேலே யேறுதல்.

மு

முகக்கிறும் = விரும்புகின்ற.

யோ

யோகநித்திரை = அறிதுயில், தூங்காத்தூக்கம்.

ரி

ரிதம்ப்ரப்ரக்ஞை = நேரிதான மெய்யறிவு, சத்தியஞானம்.

ல

லஜ்ஜை = வெட்கம்.

வ

வகித்தல் = பூணுதல்.
வதுவை = விவாகம்.

வா

வாளா = வீணே, சும்மா.
வாகனம் = தாங்கும் பொருள், wagon.

வி

விஷ்ணு = விஷ்ணு, திருமால்.
விந்தியாடவி = விந்திய + அடவி, விந்திய மலைக்காடு.
விப்பிரன் = பிராமணன்.
விமோசனம் = விடுகை, நீக்கம்.
விரகம் = காதல்.
விரக்தி = லௌகிகத்தில் வெறுப்பு, ஆசையொழிந்து பற்றறுகை.

வினயம்=செய்வதறிந்து செய்கை, பயபக்தி, சிரத்தை.

வெ

வெதுளித்தீ=கோபாக்னி.

வே

வேதோக்தமாக = வேதம் சரியென்று சொன்னவண்ணம்.

வை

வைரம்=பகை.

ஜ

ஜன்மாந்தரம் = கடந்த பிறப்பு, முற்பிறப்பு.

ஹ

ஹம்சம்=1. அன்னம், பிரமன் வாகனம். 2. பிராண சொரூபம், மேலுங்கீழுமாய் பிறழா நின்ற மூச்சு. இதன் உள்ளீட்டை பெரியாரிடங் கேட்டுத் தெளிக.

க்ஷ

க்ஷமிக்க=பொறுக்க.

க்ஷா

க்ஷாத்திரம்=பகை

Madras: The Guardian Press, Mount Road